பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 18 வள்ளுவர் ஆண்டு 2034 புரட்டாதி 04 ஞாயிற்றுக்கிழமை (21-09-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்: 297

# திருமலையில் புலிகள் முகாம்களா?

# ராஜபக்ஷ நேரில் சென்று ஆராய்வு

## ஜனாதிபதிக்கு விரிவான அறிக்கையை சமர்ப்பிப்பார்

திருகோணமலை,செப்ரெம்பர்21

**கிழக்கின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக விடுதலைப் புலிகள் புதிய முகாம்களை அமைத்துள்ளனரா என்பது குறித்து எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று நேரடியாகச் சென்று ஆராய்ந்தார்.**

**இது விடயமாக விரிவான அறிக்கை ஒன்றை ஜனாதிபதியிடம் அவர் சமர்ப்பிக்கவிருக்கிறார்.**

"புரிந்துணர்வு உடன்படிக்கை நடைமுறைக்கு வந்தபின் விடுதலைப் புலிகள் புதிதாக 19 முகாம்களை திருகோணமலை துறைமுகத்தைச் சூழ அமைத்துள்ளனர். இதனால் கிழக்கின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. அத்துடன் பல

(16ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச நிதி அமைப்புகளின் பிரதிநிதிகள் நாளை வன்னிக்கு!

கிளிநொச்சி,செப்.21

இலங்கைக்கு உதவிகள் வழங்கும் சர்வதேச நிறுவனங்களான உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, சர்வதேச நாணய நிதியம், ஐ.நா. அபிவிருத்தித் திட்டம் ஆகியவற்றின் அதிகாரிகள் அடங்கிய குழு ஒன்று நாளை திங்கட்கிழமை கிளிநொச்சி வருகின்றது.

வடக்கு - கிழக்கில் தமது அமைப்புக்கள் ஊடாக மேற்கொள்ளப்படும் புனரமைப்புப் பணிகள் தொடர்பாகவும் -

எதிர்காலத்தில் மேற்கொள்ளத் திட்டமிடப்படவிருக்கும் திட்டங்கள் தொடர்பாகவும் - இந்த நிறுவனங்களின் அதிகாரிகள் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனுடன் கலந்துரையாடுவர்.

வன்னியில் தமது அமைப்புக்களின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் திட்டங்களையும் அவர்கள் பார்வையிடுவர்.

ஒருவருடத்துக்கு முன்னரும் இவர்கள் வன்னிக்கு வந்து விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்தியிருந்தனர். (ம-3)

### சமாதான முயற்சிகளுக்கு பிரிட்டன் தொடர்ந்து ஆதரவு தெரிவிப்பு

லண்டன்,செப்.21

இலங்கையில் மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகளுக்கும், பொருளாதார அபிவிருத்திக்கும் பிரிட்டன் தனது ஆதரவைத் தொடர்ந்து வழங்கும் என்று அந்நாட்டின் அதிகாரிகள் உறுதியளித்துள்ளனர்.

பிரிட்டனின் சர்வதேச அபிவிருத்திக்கான செயலாளர் வலியெறி அமொஸ், இராஜாங்க அமைச்சின் வெளிவிவகாரப் பிரிவு மைக் ஓபிரெயன் ஆகியோர் இந்த உறுதிமொழியை அரசமைப்பு விவகார அமைச்சர் பேரா

(16ஆம் பக்கம் பார்க்க)

### ஜஸ்வந் சின்ஹா அடுத்த மாதம் வருவார்

கொழும்பு,செப்.21

இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந் சின்ஹா அடுத்த மாத நடுப்பகுதியில் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இலங்கை வருவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒக்ரோபர் 14ஆம் திகதி வரும் அவர், 16ஆம் திகதி வரை தங்கியிருப்பார். கடந்த மாதம் அவர் இலங்கைக்கு வருவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. இறுதிநேரத்தில் அது பிற்

(16ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ்-முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதி செய்ய இருதரப்பும் இணக்கம்

## கேணல் கருணாவுடன் முஸ்லிம் பிரதிநிதிகள் பேச்சு

கொழும்பு,செப்.21

கிழக்கில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்கள் சுதந்திரமாக நடமாடுவதற்கும், தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும் வேண்டிய பாதுகாப்பை உறுதிசெய்வதற்கு புலிகளும், சமாதானத்துக்கான முஸ்லிம் பேரவையினரும் இணங்கியுள்ளனர்.

மட்டு. கரடியனாறில் உள்ள புலிகளின் தேனகம் விடுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற சந்திப்பின்போதே இந்த இணக்கம் எட்டப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பில் புலிகளின் சார்பில் கருணா அம்மான் தலைமையிலான குழுவினரும், வடக்கு - கிழக்கு மாகாண சமாதானத்துக்கான பேரவையின் உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

சுமார் இரண்டு மணிநேரம் நடந்த இந்தப் பேச்சுக்களின்போது பாதுகாப்பு, விவசாயம், வர்த்தகம் உட்பட பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டுள்ளன.

மட்டுநகர், ஏறாவூர், ஓட்டமாவடி ஆகிய இடங்களில் தமிழ் - முஸ்லிம் உப குழுக்களை இயக்குவதற்கும் இணக்கம் காணப்பட்டது. இந்த உப குழுக் கூட்டங்களுக்கான திகதிகளும் நேற்று நிர்ணயிக்கப்பட்டன.

மட்டக்களப்பு நகர உபகுழு இன்று கூடவுள்ளதாக விடுதலைப் புலிகளின் மட்டுநகரப் பொறுப்பாளர் சேனாதிராஜா தெரிவித்தார். (ம)



நேற்று கரடியனாறில் இடம்பெற்ற கலந்துரையாடலுக்கு வருகைதந்த வடக்கு - கிழக்கு மாகாண சமாதானத்துக்கான பேரவையின் உறுப்பினர்களை வரவேற்கும் புலிகளின் மட்டு. - அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி கேணல் கருணா.

## சர்வதேச கிரிக்கெட் மைதானம் யாழ். குடாநாட்டிலும் அமையும்

யாழ்ப்பாணம்,செப்.21

சர்வதேச தரத்திலான கிரிக்கெட் மைதானம் ஒன்று யாழ்ப்பாணத்தில் விரைவில் அமைக்கப்படவுள்ளது. கல்லுண்டாய் அல்லது அரியாலையில் இந்த மைதானம் அமையலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகை தந்த கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் திலங்க சுமதிபாலவும், துணைத்தலைவர் அரவிந்த டி சில்வாவும் இந்த மைதானத்தை அமைப்பது தொடர்பாக ஆராய்ந்துள்ளனர்.

யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் பிரதிநிதிகளுடன் அவர்கள் இது குறித்து விரிவாகக் கலந்துரையாடியுள்ளனர்.

இந்த மைதானம் அமைப்பதற்காக பல இடங்கள் பிரேரிக்கப்பட்ட போதும், இறுதியில் கல்லுண்டாய் அல்லது அரியாலையில் இதனை அமைப்பது என முடிவுசெய்யப்பட்டது.

இதனையடுத்து அந்த இடங்களை

(16ஆம் பக்கம் பார்க்க)

### யாழ். குடாநாட்டில்

# உயர் பாதுகாப்பு வலயங்களை உடன் அகற்றக் கோரி மக்கள் போராட்டம்!

யாழ்ப்பாணம்,செப்.21

குடாநாட்டிலுள்ள அதியுயர் பாதுகாப்பு வலய பிரதேசத்தில் மக்களை மீளக்குடியமர அனுமதிக்குமாறு கோரி பரவலாக தொடர் போராட்டங்களை முன்னெடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதியுயர் பாதுகாப்பு வலயப் பிரதேசங்களை பின்நகர்த்தி மக்கள் மீள்குடியமர்வுக்கு உதவும் வகையிலான திட்டங்கள் குறித்து ஆராய்வதற்காக கடந்த வாரம் கொழும்பில் நடந்த மாநாட்டில், பாதுகாப்பு வலயங்களை அகற்றமுடியாது எனப் படைத்தரப்பு தெரிவித்திருந்தது.

இந்நிலையில், குடாநாட்டில் மக்கள் மீள்குடியமர்வுக்கு எந்தவித நட

(16ஆம் பக்கம் பார்க்க)

## இளம் தாயின் சடலம் மீட்பு: அவரது காதலன் தலைமறைவு

### கரவெட்டி கிழக்கில் சம்பவம்

யாழ்ப்பாணம்,செப்.21

கரவெட்டி கிழக்கு காளிகோயில் பகுதியில் நேற்றுக்காலை மர்மமான முறையில் இறந்து கிடந்த இளம் பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இச்சடலம், கொடிகாமத்தைச் சேர்ந்த முருகதாஸ் வசந்தகுமாரி (வயது 26) என்பவருடையது என உயிரிழந்தவரின் சகோதரி அடையாளம் காட்டியுள்ளார்.

சடலத்தை மீட்ட நெல்லியடி பொலீஸார், அதனை மந்திகை வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

அங்கு பிரேத பரிசோதனையை மேற்கொண்ட மந்திகை வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் எஸ்.கதிரவேற்பிள்ளை, கிருமிநாசினி உள்ளெடுக்கப்பட்டதனால் மரணம் ஏற்பட்டதாகத் தெரிவித்தார்.

மரணவிசாரணையை, பருத்தித்துறை பதில் நீதிவான் திருமதி விஜயராணி உருத்திரேஸ்வரன் நடத்தினார்.

அங்கு சாட்சியமளித்த இறந்தவரின் சகோதரி கூறியதாவது:-

"எனது சகோதரிக்கு திருமணமாகி ஏழு வயதில் பிள்ளை ஒன்று உள்ளது. அவர் கணவனை விட்டுப் பிரிந்து,

(16ஆம் பக்கம் பார்க்க)

# திலீபனின் இறுதிநாள் நிகழ்வுக்காக பணிகளை முடக்குமாறு கோரிக்கை

## தேசிய எழுச்சிப் பேரவை விடுக்கிறது

யாழ்ப்பாணம்,செப்.21

தியாகி லெப்.கேணல் திலீபனின் 16ஆம் ஆண்டு நினைவு தினத்தை யொட்டி யாழ்.குடாநாட்டிலுள்ள அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள், திணைக்களங்கள், கூட்டுறவு அமைப்புக்கள் மற்றும் வர்த்தக நிலையங்களைச் சேர்ந்த சகல தரப்பினரையும் தத்தமது பணிகளை முடக்குமாறு யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையினர் கேட்டுள்ளனர்.

யாழ்.நல்லூர் மற்றும் வலிகாமம் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவையினர் இணைந்து பிரதான நினைவு நிகழ்வுகளை எதிர்வரும் 26ஆம் திகதி நல்லூர் கந்தசுவாமி ஆலய வடக்கு வீதியில் நடத்தவுள்ளனர்.

வடமராட்சிப் பகுதியில் அல்வாய் ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலயமுன்றிலிலும் -

தென்மராட்சியில் மீசாலை மாவடிப் பிள்ளையார் ஆலய முன்றிலிலும் -

(16ஆம் பக்கம் பார்க்க)

### திலீபனுக்கு அஞ்சலி செலுத்துகையில் துப்பாக்கிப் பிரயோகம்

யாழ்ப்பாணம்,செப்.21

தியாகி திலீபனின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்தி மல்லாகம் பிரதேச சபை முன்பாக மக்கள் மலரஞ்சலிக்காகத் தரித்து நின்ற சமயம் அந்தப்

(16ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான நிலைமையை விளக்க ஹெல்கிஸன் இந்தியா சென்றார்

கொழும்பு,செப்.21

சமாதான முயற்சிகளின் அடுத்த கட்ட நகர்வு தொடர்பாக ஆராய்வதற்காக இலங்கை வந்த நோர்வே சமாதானக் குழுவின் தலைவரும் பிரதி வெளிவிவகார அமைச்சருமான விடர் ஹெல்கிஸன் இந்தியாவுக்கு பயணமாகியுள்ளார்.

வடக்கு - கிழக்கு இடைக்கால

(16ஆம் பக்கம் பார்க்க)

**இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்**

# ஈராக்கிய ஆளுநர் சபையின் பெண் உறுப்பினர் சுடப்பட்டார்

## மேற்கு பக்தாத்தில் நேற்று சம்பவம்



பக்தாத்,செப்.21

ஈராக்கிய ஆளுநர் சபையில் உள்ள மூன்று முக்கிய பெண் உறுப்பினர்களில் ஒருவர் மேற்கு பக்தாத்தில் வைத்து ஆயுததாரிகளால் சுடப்பட்டுள்ளார். அவரது நிலை கவலைக்கிடமாக இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அஹிலா அல்-ஹாஷிமி என்ற உறுப்பினரே சுடப்பட்டவராவார்.

முன்னாள் அதிபர் சதாம் ஹுசைனின் அரசில் பணியாற்றியவர்களில் இருந்து தற்போதைய ஆளுநர் சபையில் இடம்பெற்றுள்ள ஒரேயொருவர் இவராவார்.

நேற்று தனது வீட்டில் இருந்து காரில் வெளியே வந்த இவரை திடீரென வழிமறித்த இன்னொரு வாகனத்தில் இருந்த ஆயுததாரி அவர் மீது சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளார்.

படுகாயமடைந்த அவர், முதலில் பக்தாத் வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டார். பின்னர் அங்கிருந்து மேலதிக சிகிச்சைகளுக்காக அமெரிக்க இராணுவ வைத்தியசாலைக்கு அவர் மாற்றப்பட்டார்.

ஆழமான காயங்களால் அவரது உடலுக்குள் இரத்தக் கசிவு ஏற்பட்டுள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

ஈராக்கில் உள்ள அமெரிக்க நிர்வாகியான பவுல் பேர்மர் இந்தத் தாக்குதலைக் கடுமையாகக் கண்டித்துள்ளார். இந்தப் படுபாதகமான செயலால் தான் கடும் அதிர்ச்சி அடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

"இந்த அர்த்தமற்ற தாக்குதல் ஹாஷிமிக்கு எதிரானது அல்ல; இது ஈராக்கிய மக்களுக்கு எதிரானது. ஈராக்கிய மக்கள் ஜனநாயகத்தினை அனுபவிக்கக்கூடாது என்று நினைப்பவர்களினது செயல் இது" - என்று பேர்மர் அவரது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

ஹாஷிமியின் கார் மீது புதிய இரு வாகனங்களில் வந்த ஆயுததாரிகளே தாக்குதல் நடத்தியதாக அவரது பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள் தெரிவித்தனர். முதலில் துப்பாக்கிப் பிரயோகம் செய்த அவர்கள் பின்னர் ஆர்.பி.ஜி. தாக்குதல் நடத்தியதாகவும் -

அதிலிருந்து ஹாஷிமியின் கார் தப்பிவிட்டதாகவும் - அவர்கள் மேலும் கூறினர்.

அமெரிக்காவுக்கு எதிரான சதாம் ஆதரவுப் படையினரே இந்தத் தாக்குதலை நடத்தியிருப்பதாகக் கருதப்படுகின்றது.



ஈராக்கில் அண்மையில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் உயிரிழந்த ஐ.நா. அதிகாரியின் நினைவுதின நிகழ்ச்சி நியூயோர்க்கில் இடம்பெற்றது. இதில் பங்கேற்ற ஐ.நா. பொதுச் செயலர் கோபி அனான் பேங்கோஸ் இசைத்தார்.

# ஈராக்கிய உள்ளூர் தலைமையிடம் அதிகாரத்தினை வழங்கவேண்டும்

## ஜேர்மனி, பிரான்ஸ், பிரிட்டன் வலியுறுத்து

பேர்ளின்,செப்.21

ஈராக்கில் அதிகாரத்தை விரைவில் உள்ளூர் அரசியல் தலைமையிடம கையளிக்கவேண்டும் என்று பிரான்ஸ், ஜேர்மனி, பிரிட்டன் ஆகிய நாடுகளின் தலைவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.


ஜேர்மன் தலைநகர் பேர்ளினில் இடம்பெற்ற, மூன்று நாடுகளின் தலைவர்களும் கலந்துகொண்ட கூட்டத்திலேயே அவர்கள் இந்த இணக்கத்துக்கு வந்துள்ளனர்.

ஈராக் விடயத்தில் மூன்று தலைவர்களும் வெவ்வேறான கருத்துக்களைக் கொண்டிருந்தபோதும் விரைவல் - சாத்தியமான முறையில் - அதிகாரத்தை ஈராக்கிய தலைமையிடம் கைமாற்றவேண்டும் என்ற விடயத்தில் பொது இணக்கத்துக்கு வந்துள்ளனர் என்று ஜேர்மனிய அதிபர் ஷெராட் ஸ்குருடர் தெரிவித்தார்.

போருக்குப் பின்னர் ஈராக்கைப் புனரமைப்பதில் ஐ.நா. பங்காற்றவேண்டும் என்றும் மூன்று தலைவர்களும் வலியுறுத்தியுள்ளனர். அந்த விடயத்தில் ஐ.நா. மிக முக்கிய பணியாற்றவேண்டும் என்று பிரிட்டிஷ் தலைவர் ரொனி பிளயர் தெரிவித்தார்.

ஈராக்கைப் புனரமைப்பதில் மூன்று நாடுகளும் வேறு வேறான கருத்துக்களைக் கொண்டிருந்தாலும் விரைவில் அவை தீர்க்கப்படும் என்று ஸ்குருடர் தெரிவித்தார்.

ஈராக்கில் பன்னாட்டுப் படை ஒன்றை கடமையில் ஈடுபடுத்துவது தொடர்பாக ஐ.நாவில் அமெரிக்கா தற்போது சமர்ப்பித்துள்ள வரைவுக்கு ஆதரவு அளிக்குமாறு ஜேர்மனியையும் பிரான்ஸையும் பிரிட்டிஷ் பிரதமர் கேட்டுக்கொண்டார்.



பிரான்ஸ், ஜேர்மனி, பிரிட்டன் தலைவர்கள்

இந்தப் பேச்சுக்கள் மூலம் அதனைச் சாதித்துக் கொள்ளமுடியும் என்று ரொனி பிளயர் எதிர்பார்த்துள்ளார்.

"அங்கே (ஈராக்கில்) என்ன வேண்டும் என்று நாங்கள் பார்க்கவேண்டும். ஐ.நா. அங்கே கட்டாயம் தேவை என்பதை நாம் உணர்ந்திருக்கிறோம். அவர்கள் (ஐ.நா.) அங்கே மிக முக்கிய பங்காற்றவேண்டும்" - என்றார் ரொனி பிளயர்.

ஈராக்கில் பன்னாட்டுப் படையினரை கடமையில் ஈடுபடுத்துவது தொடர்பான அமெரிக்காவின் பிரேரணையை ஜேர்மனியும் பிரான்ஸும் கடுமையாக எதிர்த்துள்ளன. ஆனால், அதில் சில திருத்தங்களைச் சமர்ப்பித்து ஓர் இணக்கப்பாட்டுக்கு அவை வரும் சாத்தியங்களும் தெரிகின்றன. (ம)

# பக்தாத்தில் பெங்காலிப் புலியை சுட்டுக்கொன்ற அமெ.சிப்பாய்கள்

பக்தாத்,செப்.21

ஈராக் தலைநகர் பக்தாத்தில் உள்ள மிருகக் காட்சிச் சாலையில் பராமரிக்கப்பட்டு வந்த புலி ஒன்றை அமெரிக்கச் சிப்பாய்கள் சுட்டுக்கொன்றுள்ளனர்.

தமது சகா ஒருவரை அந்தப் புலி கடித்துவிட்டதனால் ஆத்திரமடைந்த அமெரிக்கச் சிப்பாய்கள் அந்தப் புலியைச் சுட்டுக்கொன்றனர்.

"வியாழக்கிழமையன்று இரவு அமெரிக்க சிப்பாய்கள் சிலர் மிருகக்காட்சிச் சாலையில் விருந்து ஒன்றை நடத்தினர். அப்போது ஒருவர் அங்குள்ள பெங்காலிப் புலிக்கு உணவு ஊட்ட முயன்றுள்ளார்.

"ஆனால், புலி அவரது விரலைக் கடித்துவிட்டது. அத்துடன் அவரது தோள்பட்டையையும் தனது காலினால் தாக்கியுள்ளது.

"இதனைப் பார்த்துக்கொண்டிருந்த அவரது சக சிப்பாய்கள் துப்பாக்கியை எடுத்து அந்தப புலியைச் சுட்டுக்கொன்றனர்" - என்று மிருகக் காட்சிச் சாலையின் அதிகாரியான அடில் சலாம் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் குறித்து அமெரிக்கா அதிகாரபூர்வமாக எதுவும் சொல்லவில்லை. (ம)

# பஸ்ஸை மோதியது ரயில்; பாகிஸ்தானில் 27பேர் பலி!

இஸ்லாமாபாத்,செப்.21

பாகிஸ்தானில் பாதுகாப்பற்ற ரயில் கடவையில் பஸ் ஒன்றை ரயில் மோதிப் பந்தாடியதில் 2 பெண்கள் உட்பட 27இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர்.

கிழக்கு பஞ்சாப் மாகாணத்தின் மலிக்வால் நகரில் நேற்று இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

சர்கோதா நகருக்குச் சென்றுகொண்டிருந்த ரயில், பயணிகள் பஸ் மீது வேகமாக மோதியது. இதில் பஸ்ஸில் பயணம் செய்த 27 பேரும் அந்த இடத்திலேயே பலியாகினர். ரயில் சாரதி காயமடைந்தார்.

விபத்தில் காயமடைந்தவர்கள் அருகில் உள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். (ம)

# இந்தியப் பிரதமர் வாஜ்பாய் அமெரிக்காவுக்கு விஜயம்



இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் ஒரு வாரகால உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டு நேற்று நியூயோர்க் வந்து சேர்ந்தார்.

நாளைமறுதினம் அவர் அதிபர் ஜோர்ஜ் வில்லியம் புஷ்ஷைச் சந்தித்துப் பேசவுள்ளார். எதிர்வரும் 25ஆம் திகதி ஐ.நா. சபைக் கூட்டத்தில் உரையாற்றுவார்.

ஐ.நா. கூட்டத்துக்காக நியூயோர்க வரும் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் உட்பட 'உலகத் தலைவர்கள் பலரையும் தனது இந்த விஜயத்தின் போது வாஜ்பாய் சந்தித்துப் பேசுவார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஈராக்கில் பன்னாட்டுப் படையினரை நிறுத்துவது தொடர்பாக ஐ.நாவில் அமெரிக்கா சமர்ப்பித்துள்ள பிரேரணை, மத்திய கிழக்குப் பிரச்சினை, ஆப்கானிஸ்தான் பிரச்சினை போன்ற விடயங்கள் பற்றி வாஜ்பாய் உலகத் தலைவர்களுடன் ஆராய்வார் என்று இந்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஐந்து ஆண்டுகளாகத் தொடர்ந்து ஐ.நாவில் உரையாற்றிவரும் ஒரே இந்தியத் தலைவர் வாஜ்பாய். மத்திய கிழக்குப் பிரச்சினையில் இந்தியா நடுநிலை வகிப்பதாகத் தெரிவித்துக்கொண்டாலும் அரபாத்தை வெளியேற்றும் இஸ்ரேலின் தீர்மானத்துக்கு அவர் கண்டனம் தெரிவிக்கக்கூடும் என்றும் சொல்லப்படுகின்றது. (ம)

# அமெ. விமானத் தாக்குதலில் ஆப்கானில் 8 பேர் உயிரிழப்பு!

காபூல்,செப்.21

ஆப்கானிஸ்தானில் அமெரிக்கப் படையினர் மேற்கொண்ட விமானக் குண்டுத் தாக்குதலில் குறைந்தது 8 அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டனர். தலிபான் உறுப்பினர்கள் இருவரும் கொல்லப்பட்டனர்.

நாட்டின் தெற்கு மாகாணத்தில் இடம்பெற்ற மற்றொரு சம்பவத்தில் மாவட்ட பொலீஸ் தலைமை அதிகாரியை தலிபான் உறுப்பினர்கள் சுட்டுக்கொன்றனர்.

நேற்று சனிக்கிழமை ஆப்கான் அதிகாரிகள் இந்தத் தகவல்களைத் தெரிவித்தனர்.

தெற்கு மாகாணமான சபுலில் அமெரிக்கர்கள் நடத்திய விமானத் தாக்குதலில், உறங்கிக்கொண்டிருந்த அப்பாவிப் பொதுமக்கள் தங்களது கட்டில்களிலேயே உயிரைவிட்டனர்.

கடந்த புதன்கிழமை இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மாகாணத்தின் பிரதி ஆளுநர் மொஹமட் ஓமர் இந்தத் தகவலைத் தெரிவித்தார். அமெரிக்க இராணுவப் பேச்சாளர் இந்தத் தகவலை உடனடியாக உறுதிப்படுத்தவில்லை.

தலிபான் தளபதி ஒருவரும் அவரது நண்பர் ஒருவரும் செய்மதித் தொலைபேசியூடாகப் பேசியுள்ளனர். அதன் அலைவரிசைகளைப் பின் தொடர்ந்த அமெரிக்கர்கள் குறிப்பிட்ட பகுதியில் விமானத் தாக்குதல்களை நடத்தியுள்ளனர் என்று மொஹமட் ஓமர் மேலும் சொன்னார்.

நேற்று சனிக்கிழமை அமெரிக்கப் படையினரும் ஆப்கான் இராணுவத்தினரும் தலிபான்களைத் தேடி, மாகாணத்தின் பல பகுதிகளிலும் நடவடிக்கைகளில் ஈடுபட்டபோதும் எந்தப் பயனும் கிட்டவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம)

### தமிழக விபத்தில் 4 இலங்கைத் தமிழர் பலி!

தமிழ்நாட்டின் சென்னை அருகே உள்ள மறைமலைநகர் என்ற இடத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற வாகன விபத்தில் 4 இலங்கைத் தமிழர்கள் உயிரிழந்தனர். மேலும் 13பேர் காயமடைந்தனர்.

சேலம் அகதிமுகாமில் வசித்து வந்த இலங்கைத் தமிழர்களே உயிரிழந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. வான் ஒன்றில் இவர்கள் சென்னைக்குச் சென்றுகொண்டிருந்த போது அந்த வான் வீதியோரத்திலிருந்த மரம் ஒன்றில் மோதி விபத்துக்குள்ளானது. (ம)

# கடத்தல் பற்றிய ஒத்திகையால் விமான நிலையத்தில் பரபரப்பு

## புதுடில்லியில் நேற்றுச் சம்பவம்

இந்தியத் தலைநகர் புதுடில்லியின் விமான நிலையத்தில் நேற்று இடம்பெற்ற விமானக் கடத்தல் ஒத்திகையினால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

நாகபுரியிலிருந்து புதுடில்லிக்கு வந்துகொண்டிருந்த ஏயார்லைன்ஸ் பயணிகள் விமானம் கடத்தப்பட்டதாக நேற்றுப் பகல் 12.03 மணிக்கு டில்லி விமான நிலையத்துக்கு தகவல் தரப்பட்டது.

உடனடியாக விமானத்தில் இருந்து பயணிகளை மீட்பதற்கான அவசர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. சிறப்பு அதிரடிப்படையினர் விமான நிலையத்துக்கு உடன் வரவழைக்கப்பட்டனர்.

விமானம் நிலையத்தின் ஓர் ஒதுக்குப்புறமான இடத்தில் தரையிறக்கப்பட்டது. அதிரடிப்படையினர் அதில் இருந்த பயணிகளையும் விமானிகளையும் விமானப் பணியாளர்களையும் பத்திரமாக மீட்டனர்.

விமான நிலையத்தின் சில உயர் அதிகாரிகளுக்கு மட்டுமே இது ஒத்திகை என்று தெரியும். இதனால் விமானம் கடத்தப்பட்டதாக விமான நிலையத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

பணியாளர்களும் பயணிகள் மற்றும் அவர்களது உறவினர்கள் ஆகியோரும் மிரட்சியடைந்தனர்.

அனைத்தும் சுமுகமாக முடிந்த பின்னர் அது ஒத்திகை என்று தெரிவிக்கப்பட்டது. அதன் பின்னர் நிலைமைகள் வழமைக்குத் திரும்பின.

நெருக்கடி ஏற்பட்டால் யார் யார் என்னென்ன செய்யவேண்டும் என்று பயிற்சி அளிக்கப்பட்டிருந்தாலும் உண்மையான ஒரு சூழலில் அவர்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதைப் பயிற்றுவிப்பதற்காகவே இந்த ஒத்திகை பார்க்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம)




வடக்கு - கிழக்குப் பகுதியிலுள்ள சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் அனைத்திலும் நேற்றையதினம் 10 வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கு போலியோ சொட்டுமருந்து வழங்கப்பட்டது. யாழ்நகரிலுள்ள நிலையம் ஒன்றில் சொட்டுமருந்து பெறுவதற்காக பிள்ளைகளுடன் காத்துநிற்கும் பெற்றோரை முதலாவது படத்திலும், குடும்பநல மாது ஒருவர் பிள்ளை ஒன்றுக்கு சொட்டுமருந்து கொடுப்பதை அடுத்துள்ள படத்திலும் காணலாம்.

*(படங்கள் : அலுவலகப் படப்பிடிப்பாளர்)*

## நிறுவுநர் தினமும் பரிசில் வழங்கலும்

யாழ்ப்பாணம்,செப்.21

நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி நிறுவுநர் தினமும் பரிசில் நாளும் நாளை திங்கட்கிழமை காலை 9.15 மணிக்கு கல்லூரியின் பிரார்த்தனை மண்டபத்தில் முதல்வர் இ.குணநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்வலயக் கல்விப் பணிப்பாளர் பவிக்னேஸ்வரனும், சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் கோட்டகல்வி அதிகாரி இ.சிவஞானசுந்தரம், வலி. கிழ[illegible] அரசியல்துறைப் பொறுப்பாள[illegible]வன் ஆகியோரும் கலந்து [illegible]ளள்ளனர்.

நிறுவ[illegible] நினைவுப்பேருரையை கல்லூரி[illegible] பழைய மாணவனும், ஓய்வுபெ[illegible]தொழில்நுட்ப உத்தியோகத்தருமான கே.வி.நடராஜா நிகழ்த்தவுள்ளார். (எ-10)

# திலீபன் நினைவு ஊர்தி இன்று வடமராட்சியில்!

யாழ்ப்பாணம்,செப்.21

தியாகி திலீபனின் 16ஆவது நினைவு தினத்தின் 7ஆம் நாளான இன்று ஞாயிற்றுக்கிழமை, திலீபனின் திருவுருவப் படம் தாங்கிய நினைவூர்திப் பவனி வடமராட்சிப் பிரதேசத்தில் இடம்பெறவுள்ளது.

காலை 8மணிக்கு வடமராட்சி கோட்ட தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்கள் தமது அலுவலகத்தில் வைத்து கோப்பாய் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்களிடமிருந்து ஊர்தியைப் பொறுப்பேற்பர்.

தொடர்ந்து, ஊர்தி, நெல்லியடிச் சந்தி, மூத்தவிநாயகர் கோவிலடி, குஞ்சர்கடை, சோளங்கன், செல்வாபுரம், ஸ்ரீவிக்கினேஸ்வராக் கல்லூரி, சம்பந்தர்கடை, அரசடி, கிழவிதோட்டம், கட்டைவேலி, கலிகைச்சந்தி, துன்னாலை, கிளான், குடவத்தை, இந்திர அம்மன் கோவிலடி, தாமரைக் குளத்தடி, மாலிசந்தி, தேவரையாளி, சமரபாகு, உடுப்பிட்டி, வல்வெட்டி, உடுப்பிட்டி மாவீரர் துயிலும் இல்லம் ஆகிய இடங்களை ஊர்தி சென்றடையும்.

நாளை திங்கட்கிழமை தென்மராட்சிப் பகுதியிலும் மறுநாள் செவ்வாய் மற்றும் புதன்கிழமைகளில் தீவகப் பகுதியிலும் எதிர்வரும் 25ஆம் திகதி யாழ்.நகரப் பகுதியிலும் இந்த ஊர்திப் பவனி இடம்பெறவுள்ளது. (ம-9-10-173-70)

# சமுர்த்தி வங்கி சங்கங்களை ஒன்றிணைத்து மகாசங்கம்

## நாளை திங்களன்று ஆரம்பிப்பு

காரைநகர்,செப்.21

காரைநகர், சங்கானை, சண்டிலிப்பாய் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள சமுர்த்தி வங்கிச் சங்கங்களை ஒன்றிணைத்து சமுர்த்தி மகாசங்கம் ஒன்று உருவாக்கப்பட உள்ளது.

இந்த மகாசங்கம் அமைப்பதற்கான கூட்டம் நாளை திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த கூட்டத்திற்கான அழைப்புக் கடிதங்களை அந்தந்த பிரதேச செயலகங்கள் ஒவ்வொரு சமுர்த்திச் சங்கங்களின் தலைவர்களுக்கும் அனுப்பி வைத்துள்ளனர்.

தற்போது சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 185 சமுர்த்தி சங்கங்களுக்கு இரண்டு சமுர்த்தி வங்கிச் சங்கமும், சங்கானைப் பிரதேச செயலர் பிரிவில் 85 சமுர்த்தி சங்கங்களுக்கு இரண்டு சமுர்த்தி வங்கிச் சங்கங்களும் காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் 35 சமுர்த்திச் சங்கங்களுக்கு ஒரு சமுர்த்தி வங்கிச் சங்கமும் இயங்கி வருகின்றன.

இந்த ஐந்து சமுர்த்தி வங்கிச் சங்கங்களையும் ஒன்றிணைத்தே சண்டிலிப்பாயில் சமுர்த்தி மகா சங்கம் ஒன்று உருவாக்கப்படவுள்ளது.

இந்த சமுர்த்தி மகாசங்கத்திற்கு சமுர்த்தி மகாசங்க கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் உட்பட 21 உறுப்பினர்கள் நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ள கூட்டத்தில் தெரிவு செய்யப்படவுள்ளனர். (எ-73)

# சமுர்த்தி கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் பதவிக்கு வாக்குவேட்டை

## வலி.மேற்கு, வலி.தென்மேற்கில் நடக்கிறது

காரைநகர்,செப்.21

சமுர்த்தி மகா சங்கத்தின் மகாசங்க கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் பதவியைக் கைப்பற்றுவதற்காக சமுர்த்திச் சங்கங்களின் தலைவர்கள் வாக்கு வேட்டையில் ஈடுபட்டு வருகின்றனர்.

சண்டிலிப்பாய், சங்கானை, காரைநகர் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள சமுர்த்தி வங்கிச் சங்கங்களை ஒன்றிணைத்து சமுர்த்தி மகாசங்கம் ஒன்று உருவாக்கப்படவுள்ளது.

இந்த மகா சங்கத்தின் கட்டுப்பாட்டுச சபைத் தலைவர் பதவியைக் கைப்பற்றுவதற்காகவே, சமுர்த்திச் சங்கத் தலைவர்கள் சமுர்த்தி வங்கி சங்கங்கள் மற்றும் கிராம மட்ட சமுர்த்திச் சங்கங்களுக்குச் சென்று தமக்கான ஆதரவைத் திரட்டிவருகின்றனர்.

இந்த மகா சங்கத்தின் கட்டுப்பாட்டுச் சபைக்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் இருந்து 9 உறுப்பினர்களும், சங்கானைப் பிரதேச செயலர் பிரிவில் இருந்து எட்டு உறுப்பினர்களும், காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் இருந்து நான்கு உறுப்பினர்களுமாக சுமார் 21 உறுப்பினர்கள் தெரிவு இடம்பெறவுள்ளதாகத் தெரியவருகின்றது.

இந்த மகா சங்கம் அமைப்பதற்கான கூட்டம் நாளை திங்கட்கிழமை சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் இடம்பெறுமெனவும் அதில் கட்டுப்பாட்டுச் சபைத்தலைவர் தெரிவும் இடம்பெறும். (எ-73)

## நினைவு தினம் நாளை அனுஷ்டிப்பு

வடமராட்சி கிழக்கு,செப்.21

1995ஆம் ஆண்டு நாகர்கோவில் மகாவித்தியாலயத்தின் மீது நடத்தப்பட்ட விமானக் குண்டு வீச்சின் போது உயிர்நீத்த மாணவர்களின் 8ஆவது ஆண்டு தினம் நாளை அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இந்த நினைவு தினத்தையொட்டி நாகர்கோவில் மகாவித்தியாலய பாடசாலைச் சமூகத்தால் அஞ்சலி நிகழ்வுகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

தற்போது புலோலியில் இயங்கிக்கொண்டிருக்கும் நாகர்கோவில் மகாவித்தியாலயத்தில், நாளை நண்பகல் 12 மணிக்கு அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (எ-182)

## சனசமூக உறுப்பினர் சங்கமம்

வலி.வடக்கு,செப்.21

வலிகாமம கோட்டத்திற்கு உட்பட்ட சனசமூக நிலையங்களின் உறுப்பினர்களுக்கான சங்கமம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி.கிருஷ்ணசாமி மற்றும் சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பிரதேச சபைகளின் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் கலந்துகொள்வர். (எ-86)

## 'ஞானச்சுடர்' வெளியீடு

வடமராட்சி,செப்.21

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவையின் மாதாந்த வெளியீடான "ஞானச்சுடர்" ஆத்மீக சஞ்சிகையின் புரட்டாதி மாத இதழ் வெளியீட்டு விழா எதிர்வரும் 26ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 1030 மணிக்கு பேரவைத் தலைவர் க.அருள்லிங்கம் தலைமையில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும்.

இச்சஞ்சிகையின் வெளியீட்டுரையை க.கிருஸ்ணராசாவும், மதிப்புரையை எழுத்தாளர் ந.சிவபாதமும் நிகழ்த்துவர். (எ-173)

## சனசமூக நிலைய உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல்

கொழும்புத்துறை,செப்.21

நல்லூர் பிரதேச சபை, யாழ் மாநகர சபைகளுக்கு உட்பட்ட சனசமூக நிலைய நிர்வாக உறுப்பினர்கள், தலைவர், செயலாளர்களுக்கான விசேட கலந்துரையாடல்கள் இன்றும் நாளையும் மாலை 5 மணிக்கு நாவலா கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

நல்லூர் பிரதேச சனசமூக நிலைய உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் இன்றும் யாழ் மாநகர சபை சனசமூக நிலைய நிர்வாக உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் நாளையும் யாழ். - நல்லூர் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் பொ. ஈஸ்வரன் தலைமையில் நடைபெறும். சம்பந்தப்பட்ட அனைவரையும் இதில் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (எ-30)

## விரிவுரையும் குழுக் கலந்துரையாடலும்

யாழ்ப்பாணம்,செப்.21

'சமஷ்டியும், சுயநிர்ணயத்திற்கான உரிமையும்' என்னும் விடயம் தொடர்பான பகிரங்க விரிவுரையும் குழுக் கலந்துரையாடலும் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3மணிக்கு யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளன.

அரசமைப்பு மற்றும் நிர்வாகச் சட்டத்துறைப் பேராசிரியரும், சுவிற்ஸர்லாந்து பிறிபேர்க் பல்கலைக்கழக சமஷ்டிக்கான நிறுவனத்தின் பணிப்பாளருமான பேராசிரியர் கலாநிதி தோமஸ் பிளெய்னர் விரிவுரையை நிகழ்த்தவுள்ளார்.

யாழ். பல்கலைக்கழக பொருளியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி வி.நித்தியானந்தன், யாழ். பல்கலைக்கழக அரசியல், சமூகவியல்துறை விரிவுரையாளர் கே.ரி. கணேசலிங்கம், சட்டத்தரணி சி. கோணேஸ்வரன் ஆகியோர் குழுக் கலந்துரையாடலில் பங்கேற்கவுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து பகிரங்க கலந்துரையாடலும் இடம்பெறும். (ஐ-10)

# வாசகர் திருமுகம்

## சமய விரோதச் செயல்களை தடுத்து நிறுத்த முடியாதா?

நல்லூர்க் கந்தசுவாமி கோயில் தீர்த்தத் திருவிழாவின்போது திருக்குளத்தில் நிகழ்ந்த சம்பவங்கள் 2003-08-27ஆம் திகதிய உதயனில் வெளிவந்தன.

இத்திருக்குளத்தின் தெய்வீகத் தன்மையையும், புனிதத் தன்மையையும் உணரும் வகையில் 1923இல் சேவகப்பெருமாள என்னும் முருக பக்தா பாடல்கள் இயற்றியுள்ளார். எழுபதுக்கும் மேற்பட்ட வரிகள் கொண்ட இப்பாடல்களின் ஒருசில வரிகள் இவை.

*குஞ்சரியும் குறமகளும்*
*கூறுமிரு பக்கம் வந்தே*
*தஞ்சநல்லூர் கந்தரோடு*
*தாமுதீர்தம் ஆடும் குளம்*

*கோலநல்லூர் கந்தசாமி*
*கொடுத்துவுத் தரவு பெற்றே*
*சேவலும் மயிலும் கூடிச்*
*சென்று தீர்த்த மாடுங்குளம்*

இப்பாடலில் விவரிக்கப்பட்டுள்ளது போன்று குஞ்சரியும், குறமகளும் இருபக்கமும் வீற்றிருக்க, பத்துவருடங்களுக்கு முன்பு வரை தீர்த்தமாடும் நிகழ்வு நடைபெற்றது. இப்பாரம்பரிய சமயக் கிரியைகளை ஒரு சிலரின் சமய விரோதச் செயல்களினால் நிறுத்தவேண்டிய நிலை ஏற்பட்டது.

உதயன் தேர்த்திருவிழாச் சிறப்பு மலரில் இ.ஸ்ரீதரன் அவர்கள் "தினமும் அதிகாலை 5 மணிக்கு நெற்றியில் திருநீறு துலங்க, கழுத்தில் உருத்திராட்சம் தரித்த அடியார்களும் அணி திரண்டு கூடுவர். நல்லை ஆதீன முதல்வரின் திருமுறை பஜனையும் பக்தியோடு ஒலிக்கும். அங்கப் பிரதட்சனை செய்யும் ஆண் அடியார்களும், அடி அழிக்கும் பெண்களும் ஆலய வீதியில் அழகுற வலம் வருவார்கள்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

நல்லூர் முருகன்மீது அளவற்ற அன்பும் பக்தியும் கொண்ட இந்த அடியார்களின் மனம் திருக்குளத்தில் தீர்த்தக் கிரியைகள் தடைப்பட்டதனால் மனவேதனை அடைந்திருப்பார்கள்.

இதை யாரிடம் நோவது?, யார்க்கெடுத்துரைப்பது?

ஆறு.திருமுருகன் அவர்கள் சிறப்பு மலரில் "நல்லூர் நகரம் புராண காலங்களில் நாம் காணும் கைலாயம்போல் காட்சியளிக்கிறது" எனக் குறிப்பிடுகிறார்.

சமய விரோதிகள் திருக்குளத்தை அசிங்கப்படுத்துவார்கள் எனக் கனவிலும் எண்ணியிருக்கமாட்டார்.

பறவைக் காவடி எடுத்த அடியார் ஒருவர் முன்மண்டபத்தில் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கினார். அவரின் முதுகில் பறவைக் காவடிக்குக் குத்திய இடத்தில் இரத்தக்கறை. திருக்குளத்தைப் பார்க்கப்போனார். பார்த்தால் ஆத்மதிருப்தி ஏற்படும். ஆனால், அவர் விருப்பம் நிறைவேறவில்லை.

ஆதீன முதல்வர் திருக்குளத்து மண்டபத்தில் அடியார்களுடன் பஜனைப்பாடல் பாடிக்கொண்டிருந்தபோது அவர்மீது தண்ணீர் தெளிக்கப்பட்டதாகவும், அவர் தொடர்ந்தும் பஜனை செய்யமுடியாது பஜனையை இடைநிறுத்தியதாகவும் பலர் சொல்லி வருந்தினார்கள்.

அந்தநேரம் கோயில் உள் பிரகாரத்தில் உள்ள பூந்தோட்டத்தில் தீர்த்தக் கிரியைகள் நிறைவுபெறவில்லை.

இப்படி சமயக் கிரியைகளைக் குழப்பும் நிகழ்ச்சிகள் ஒரு கிறிஸ்தவ தேவாலயத்திலோ புத்தகோயில்களிலோ, மசூதிகளிலோ நிகழ்வதில்லை.

இதை நாம் கருத்திற்கொள்ளவேண்டும்.

சொக்கன் உதயன் சிறப்பு மலரில் "தேவர்களை வருத்தியோர் சிறப்போடு வாழ்ந்ததில்லை" எனக் குறிப்பிட்டார். தேவர்களை மட்டுமல்ல முருகன் அடியார்களை வருத்துபவர்களும் சிறப்போடு வாழமுடியாது.

*திருநெல்வேலி,*
*யாழ்ப்பாணம்.*

**சுப்பிரமணியம் பசுபதி**



நான் ஆத்ம ரீதியாக உணர்கிறேன். இன்றில்லாவிட்டாலும் என்றோ ஒருநாள் எமது மக்கள் நிச்சயமாக விடுதலையடைவார்கள்.

*-தியாகி திலீபன்.*

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 150m வரை வேலை செய்யக்கூடிய Cordless Telephone (கோட்லெஸ் ரெலிபோன்) ரூபா 4,000/-, Picture Editing செய்யக்கூடிய Hand Phone, நஷனல் J11 ஜப்பான் டெக் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: S.மகேந்திரன், 284, இராசாவின் தோட்டச் சந்தி, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். T.P.222 6286 (22737)

மோட்டார் ரோலா தொலைபேசி இணைப்பொன்று விற்பனைக்குண்டு. தொடர்பு: 070-213378, 0777-554670. (22806)

பாவனையிலுள்ள 84 தொடரிலக்க வெஸ்பா ஸ்கூட்டர், 88 தொடரிலக்க எக்கணமிக்பவர் ஹொண்டா விற்பனைக்கு உண்டு. தொடர்பு: வி.ஜீவன்குமார், 128, யாழ்.வீதி, மானிப்பாய். (22785)

## வலை விற்பனைக்கு

43/4"x105x1000, 21இளை 16 துண்டுகள் உடைய சொற்ப காலம் பாவித்த வலை விற்பனைக்குண்டு. பார்வையிடுவதற்கு குஞ்சன்னா, வேம்படி, வல்வெட்டித்துறை. விற்பனை தொடர்புகளுக்கு: M.சூரியம், 4ஆம் குறுக்குத்தெரு (Hostel முன்பாக), பருத்தித்துறை. (22815)

## வீடு விற்பனைக்கு

கல்வியங்காடு, விளையாட்டரங்கு வீதியில் 3 பரப்புக் காணியில் சகல வசதிகளும் கொண்ட விசாலமான வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: சுதர்மா, 101, வாசிகசாலை ஒழுங்கை, கல்வியங்காடு. (22813)

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள், 33 அராலி வீதியில் 3 பரப்பு 4 குளியில் அமைந்துள்ள வீடு தற்போதைய நிலையில் விற்பனைக்குண்டு. விரும்புவோர் நேரில் பார்வையிட்டு தொடர்புகொள்ளவும். தொடர்பு: அ.முத்துலிங்கம், 109, இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 222 3130. (22795)

கோண்டாவில் வீதி, இருபாலைச் சந்தியில் 3 பரப்புடன் கூடிய சகல வசதிகளுமுடைய கல்வீடு வளவு விற்பனைக்குண்டு (தரகர் தேவையில்லை). தொடர்பு: பொ.இரட்ணசிங்கம், மானிப்பாய் வீதி, தர்மலிங்கம் தூபிக்கு அருகில், தாவடி. (நேரம் 2.00 மணிமுதல் மாலை 5.00மணிவரை). (22721)

## காணி விற்பனைக்கு

நாவற்குழி, புகையிரத நிலையத்திற்கு அருகில் 8 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: கைலைநாதன், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி (ஊனமுற்றோர் சங்கத்துக்கு எதிரான ஒழுங்கை). (30285)

## கடை விற்பனைக்கு

யாழ்ப்பாணம், மருத்துவமனை வீதியில் சத்திரத்துச் சந்திக்கு அருகில் அமைந்துள்ள எமது வியாபார ஸ்தாபனம் உடனடியாக விற்பனைக்குண்டு. 13/4 பரப்பு விஸ்தீரணம் உடையது. தரகர் தேவையில்லை. தொடர்பு: 0777 - 671554. (22767)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர் 1Kg 150/=, சுத்தம் செய்யப்பட்டது 1Kg 225/= மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 1)மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில். 2) பொன்னாலை வீதி, விதானை வளவு, மானிப்பாய். (22437)

Prima Broiler மற்றும் இறைச்சிக்கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம் (Electronic நிறுவை). (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (22780)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima Broiler குஞ்சுகள், அதிவிசேட Prima பேட்டுக் குஞ்சுகள், Tetra SL பேடு, சேவல் குஞ்சுகள் 29.09.2003 பிற்பகல் விநியோகிக்கப்படும் முன்கூட்டியே பதிவு செய்யவும். பருத்தித்துறை கிளையிலும் பதிவு செய்யலாம். (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை முத்திரைச் சந்தையடி, நல்லூர்) (22778)

## மணமகள் தேவை

றோமன் கத்தோலிக்கம், நற்பண்புள்ள, மருத்துவபீட இறுதிவருட மாணவனுக்கு பெற்றோர் அழகிய, தொழிலுள்ள, சீதனமுள்ள, 25 வயதிற்கு உட்பட்ட மணமகளை எதிர்பார்க்கின்றனர். பெண் மதம்மாற சம்மதமெனினும் ஏற்றுக்கொள்ளப்படும். தொடர்பு: திரு.S.பொபி, 205/2, கண்டி வீதி, அரியாலை. (22751)

இந்து கௌரவ குடும்பத்தைச் சார்ந்த கொழும்பில் கடமையாற்றும் 5'4" உயரம், வயது 34, 14 புள்ளிகள் பாவம், 8இல் செவ்வாய், சதய நட்சத்திரம் (Electronic And Mechanical Engineer) பொறியியலாளருக்கு அழகிய, ஆசிரியை மணமகள் தேவை. (வீடு, சீதனம் வேண்டும்). ஜாதகம் விபரங்களோடு தொடர்பு கொள்ளவும். விளம்பர இல.2045 மே/பா உதயன். (22743)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1971ஆம் ஆண்டு பிறந்த, பூராட நட்சத்திரமும் லக்கினத்தில் செவ்வாயும் உள்ள 5'2" உயரமான B.Sc. (Computer Engineer) ACMA, M.Sc. (I.T) படித்த U.S.A. இல் Software Engineer ஆக வேலை செய்யும் மணமகனுக்கு அழகான, Doctor, Accountant or Science graduate மணமகள் தேவை.
தொடர்பு:075-514286. (22746)

## வியாழன், ராகுகேது மாற்றம் எப்படி?

எங்கும் விற்பனையாகின்றது (சத்யா). முத்தச் செவ்வாய், வியாழன், பகைச் சனி, ராகு கேதுக்கள் ஒன்றுக்கொன்று பரஸ்பர செட்பார்வைகளால இடைக்கால நிவாக ஸ்தம்பிதம், போர் முஸ்தீபுகள், அரசியல் நெருக்கடிகள் வருட முடிவில் உண்டாகும்.(22820)

## காணவில்லை

பிறவுண், வெள்ளை நிறமுடைய பசுமாட்டை 13-09-2003 சனிக்கிழமை முதல் காணவில்லை. இதனைக் கண்டவர்கள் ராணி, 204, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் (அம்மைத்திர வைரவர் கோயிலடி) என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (22821)

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த லண்டனில் பணிபுரியும் விசாக நட்சத்திரமும் 1972 இல் பிறந்த லண்டன் பிரஜாவுரிமை உள்ள மணமகனுக்கு அழகிய, 5 அடி உயரமுள்ள மணமகள் தேவை. சாதகக் குறிப்பு, புகைப்படம் மற்றும் விபரங்களுடன் நேரில் அல்லது தபால் மூலம் தொடர்புகொள்ளவும்.

கிருஷ்ணமூர்த்தி
114/19 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. 2789
(22736)

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 35 வயது, ஆசிரியை (B.A.Dip.Ed.) மணமகளுக்கு அரச/கூட்டுத்தாபனத்தில் வேலை செய்யும் மணமகனை எதிர்பார்க்கின்றோம். தொடர்பு: விளம்பர இல. 2023, மே/பா உதயன். (30163)

யாழ்.கிறிஸ்தவ குடும்பத்தைச் சேர்ந்த வயது 23, உயரம் 5'1" அழகிய பெண்ணுக்கு மணமகன் தேவை. (உள்நாடு, வெளிநாடு விரும்பத்தக்கது) தொடர்பு: விளம்பர இல. 2047 C/o உதயன். (22768)

யாழ்.தீவுப்பகுதி இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1971 ஆம் ஆண்டு, திருவாதிரை 3ஆம் பாதத்தில பிறந்த, A/L உடன் கலை அறிவும் கொண்ட மணமகளுக்கு தகுதியான மணமகன் உள்ளூர்/வெளியூரில் தேவை. தொடர்பு: விளம்பர இல.2048, மே/பா உதயன் (22811)

## திருமண சேவை

1977, சித்திரை, செவ்வாய் 7, சொந்த வியாபாரம் புரியும், படித்த, கௌரவ குடும்ப மணமகனுக்கு அழகிய மணப்பெண் தேவை. உள்ளூர், வெளியூர் மணமக்களுக்கு தொடர்பு கொள்ளவும். துரை விமலா, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.(22704)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

சுத்தமான Dobermann Pincher, Great Dane நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர்வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (22779)

## கேசடை வீதி பலத்த சேதம்

காரைநகர் கேசடை வீதி பொது மக்கள் போக்குவரத்துச் செய்ய முடியாது அளவுக்கு மிக மோசமாகச் சேதமடைந்துள்ளது.

காரைநகர் பிரதான சுற்றுவீதி, பொது மக்கள் பாவனைக்கு கடற்படையினரால தடைசெய்யப்பட்டுள்ளதால், அண்மையில் காரைநகர் சின்னாலடியில் திறக்கப்பட்டுள்ள காரைநகர் பிரதேச செயலகத்திற்கு கிழக்குப் பகுதி மக்கள் இவ்வீதி ஊடாகவே சென்றுவருகின்றனர்.

மேற்படி வீதி மிக மோசமாகச் சேதமடைந்து குண்டும் குழியுமாக காணப்படுகின்றது. இவ்வீதி ஊடாக வாகனங்கள் எவையும் செல்ல முடியாத நிலையும் காணப்படுகின்றது. மழைகாலங்களில் இவ்வீதியில் வெள்ளம் தேங்கி நிற்பதாகவும் - கூறப்படுகிறது. (எ-73)

## கிராமிய அபிவிருத்தி சங்கம் உதயம்

நல்லூர், செட்டித்தெரு ஜே/68 கிராம அலுவலர் பிரிவில் அண்மையில் கிராம அபிவிருத்திச் சங்கம் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது.

கிராம அலுவலர் கருணாகரன் தலைமையில் நடைபெற்ற அங்குரார்ப்பணக் கூட்டத்தில் யாழ் நல்லூர் கோட்ட அரசியற்றுறைப் பொறுப்பாளர் பொசுஸவரன் சிறப்புரையாற்றினார். (எ-30)

## 33ஆம் நாள் நினைவஞ்சலியும்
### வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

அன்னை மடியில் 11 - 02 - 1939



ஆண்டவன் அடியில் 20 - 08 - 2003

### அமரர் சுந்தரலிங்கம் கனகேஸ்வரி

காற்றுடன் காற்றாய்க் கலந்தனையே - எம்
கைத்தலத்தில் கண்ணீரை நிறைத்தனையோ
கண்ணின் மணியாய் இருந்ததையும் கனகமணியாய்த் திகழ்ந்ததையும்
கணப்பொழுதில் மறந்தனையோ கண்மூடித் துயின்றனையோ.

எமது குடும்பத் தலைவியின் துயரச் செய்திகேட்டு எமது துக்கத்தில் பங்குபற்றியதோடு, அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் எமது நெஞ்சம் நிறைந்த நன்றிகள்.

இன்று (21.09.2003) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் அன்னாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனை, வீட்டுக்கிருத்தியம், மதியபோசனம் ஆகிய நிகழ்வுகளில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*நாமகள் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.* (22781) (13-18-29)

கணவர், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், தம்பிமார்.

# மரண அறிவித்தல்கள்

## விஸ்வநாதர் இரத்தினம்

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் சரவணையை நிரந்தர வதிவிடமாகவும் யாழ்பாணம், அம்மன் றோட்டை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட விஸ்வநாதர் இரத்தினம் 18.09.2003 வியாழக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.09.2003) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பையன் மணல் இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.16,அம்மன் வீதி*
*கந்தர்மடம்,*
*யாழ்ப்பாணம்.* (22819)(18-13-29)

தகவல்:
இ.நம்பியாரூரன்
(மகன்)

## சின்னத்தம்பி கந்தசாமி

104/1, வண்ணார்பண்ணை மேற்கு,பெரியதம்பிரான் கோயிலடியை வசிப்பிடமாகக் கொண்ட சின்னத்தம்பி கந்தசாமி அவர்கள் 19.09.2003 வெள்ளிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி-[illegible] தம்பதிகளின் அன்பு மகனும் செல்லம்மாவின் அன்புக் கணவரும் [illegible]தீலிங்கம்-திரவியம் ஆகியோரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற நல்லையா மற்றும் நேசமலர், முத்துப்பிள்ளை ஆகியோரின் சகோதரனும் பாலச்சந்திரன் (யாழ். போதனா வைத்தியசாலை), காலஞ்சென்ற யோகேந்திரன் மற்றும் இராஜேந்திரன் (ஹொலண்ட்), யோகராணி, குலேந்திரன் (சவுதி), விஜிதா, சுகிர்தா, திரவியராஜா (சவுதி)ஆகியோரின் அன்புத் தந்தையும் மேகலா, செல்வராணி, சந்திரமோகன் (இராமநாதன் கல்லூரி), மதிகலா, சிறிகரன், மணிவண்ணன் (துர்க்கா ஸ்ரோஸ், ஏழாலை) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற சிவலிங்கம், சரஸ்வதி, துரைசிங்கம், இராசலிங்கம், (கமநல சேவை உதவி ஆணையாளர், கிளிநொச்சி), இராஜேஸ்வரி (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் கிரிஷாந், மதிஷாந், அஸ்வின், அபிலாஷினி, திலக்ஷன், சுதர்ஷன், கஜீபன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.09.2003) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பெரிய தம்பிரான் கோயிலடி,*
*வண்ணார்பண்ணை.* (22809) (13-19-29)

தகவல்:
இராஜேந்திரன்(ராசன்)
(மகன்)

## காலிங்கர் நடராசா

கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட காலிங்கர் நடராசா அவர்கள் 18.09.2003 வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் மங்கையர்க்கரசியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான காலிங்கர் - காமாட்சிப்பிள்ளையின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - பொன்னம்மாவின் அன்பு மருமகனும் கணேசலிங்கம் (அதிபர், நீர்கொழும்பு விஜயரத்தினம் இந்துக் கல்லூரி), அமிர்தலிங்கம் (சுவிஸ்), சண்முகாதேவி (கனடா), முத்துலிங்கம் (சுவிஸ்), சண்முகலிங்கம் (லிங்கம் எலெக்ரிக்கல், கோண்டாவில்), சிவராசலிங்கம் (சுவிஸ்), சத்தியாதேவி, சத்தியலிங்கம் (கொழும்பு பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் மங்களேஸ்வரி (நீர்கொழும்பு), சுகிர்தராணி (சுவிஸ்), கனகராஜா (கனடா), ஜீவா (சுவிஸ்), சிவவதனி (கோண்டாவில்), ரஜனி (சுவிஸ்), நிரஞ்சன் (வைத்திலிங்கம் அன் கம்பனி லிமிடெட், இரத்மலானை) ஆகியோரின் மாமனாரும் கிருத்திகா, ஹரிஹரன், லாவண்யா, அபிஷா, பிருந்தா, கபிலன், யதுஷா, ஜனனி, தர்மிநதன், அனந்தன், சாரங்கன், சரண்யா ஆகியோரின் அன்புப் பேரனும் இராசம்மா, அரியகுட்டி, செல்லாச்சி, இரத்தினம், சின்னையா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.09.2003) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது ஸ்ரேசன் றோட், கோண்டாவில் மேற்கு இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஸ்ரேசன் றோட்,*
*கோண்டாவில் மேற்கு,*
*கோண்டாவில்.*
*(நெட்டிலிப்பாய் பிள்ளையார் கோவிலடி)* (22818) (13-18-29)

தகவல்:
ந.சண்முகலிங்கம் (மகன்),
(லிங்கம் எலக்ரிக்கல்,
கோண்டாவில்)

## திருமதி கந்தசாமி நாகரத்தினம்

மாதகலைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி கந்தசாமி நாகரத்தினம் 19.09.2003 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் வேலுப்பிள்ளை கந்தசாமியின் (இளைப்பாறிய முகாமையாளர், கூ.மொ.விற்பனை நிலையம்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற சு.கந்தர்-திருமதி சு.சுந்தரம் ஆகியோரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சு.வேலுப்பிள்ளை - திருமதி வே.பாக்கியம் ஆகியோரின் மருமகளும் திருமதி அ.இராசலட்சுமி, க.முத்துலிங்கம், க.தங்கராசா, க.இந்திரன், க.சண்முகநாதன் (சந்திரன் - பிரான்ஸ்), திருமதி க.இந்திராணி, திருமதி ம.பேபி சறோஜா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்றவர்களான க.அப்புத்துரை, இ.கந்தசாமி மற்றும் வே.மகேந்திரன், திருமதி மு.செல்வராணி, திருமதி து.விஜயலட்சுமி, திருமதி இ.புவனேஸ்வரி, திருமதி ச.சற்குணலீலா, திருமதி க.பரமேஸ்வரி, திருமதி து.புவனேஸ்வரி, திருமதி கெ.கோணேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்றவர்களான ம.பேரருட்செல்வி (கவிதா), தேவேந்திரபாஸ்கரன் மற்றும் ம.குகேந்திரகிரிஸ்ணன், ம.சங்கீதா, மலனிதா ஆகியோரின் பெரிய தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.09.2003) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு மாதகல், காஞ்சிபுரம் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மாதகல் போதி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

*காஞ்சிபுரம்,*
*மாதகல்.* (22825) (25-13-19-29)

தகவல்:
வே.கந்தசாமி,
(கணவர்)

உதயன்

# வெறும் வாய்ச்சவடாலா? அல்லது பிராயச்சித்தமா?

யாழ். மாவட்ட மக்களுக்குப் பெரும் இடையூறாக இருக்கும் உயர்பாதுகாப்பு வலயப் பிரச்சினைக்குத் தீர்வுகாணப் படாவிட்டால் நாடாளுமன்றச் செயற்பாடுகளைப் பகிஷ்கரிக்கப் போகின்றேன் என்று இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன் தெரிவித்திருக்கின்றார்.

இதுவிடயத்தில் தனது அமைச்சர் பதவியை இராஜினாமாச் செய்யத் தான் தயாராக இருக்கிறார் என்றும் அவர் கூறியிருக்கின்றார்.

செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் இப்படிக் கூறியிருக்கின்றார். அது உண்மையானால் வரவேற்கத்தக்க நல்ல முடிவு. ஆனால், அமைச்சர் மகேஸ்வரனின் வழமையான 'சவடால்' பேச்சுப்போல - 'விடிந்தால் போச்சு' என்ற மாதிரி - இந்தப் போராட்ட முஸ்தீபும் அடிபட்டுப் போகக்கூடாது.

கடந்த இரண்டு பொதுத்தேர்தல்களிலும் யாழ். மாவட்டத்தில் - ஐ.தே.கட்சியின் சார்பில் போட்டியிட்டு - வெற்றியீட்டியதன் மூலம் 'சாதனை' படைத்தவர் மகேஸ்வரன்.

யாழ். மாவட்டம் உட்பட இலங்கையின் சகல மாவட்டங்களிலும் தனது கட்சியின் நாடாளுமன்றப் பிரதிநிதிகளைக் கொண்டவர் என்ற தனிப் பெருமையைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு இந்த வெற்றிமூலம் பெற்றுக்கொடுத்தவர் மகேஸ்வரன். இதற்கு முன்னர் பதவியில் இருந்த எந்தப் பிரதமருக்கும் நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் தனது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருந்த பெருமை கிடைக்கவேயில்லை.

அத்தகைய பெருமையைத் தேடித் தந்த மகேஸ்வரனுக்கு, பிரதமர் ரணில் என்ன மரியாதையைக் கொடுத்தார் என்பது அமைச்சரவை அமைத்தபோது வெட்டவெளிச்சமாகியது.

பிரதமர் ரணிலின் அரசில் - கட்சியில் - இடம்பெற்றிருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒரேயொரு இலங்கைத் தமிழர் மகேஸ்வரன்தான்.

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையைத் தீர்ப்பேன் என்று கூறி, அதனைத் தனது முக்கிய கோஷமாக வைத்துத் தேர்தலில் வென்ற ரணில், பதின்மூன்று எம்.பிக்களைத் தேசியப் பட்டியல் மூலம் நியமித்தபோதுகூட அதில் ஓரிடத்தை இலங்கைத் தமிழருக்கு வழங்கமுன்வரவில்லை.

அதுமட்டுமல்ல, இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தைக் கையாளப்போகும் தனது அமைச்சரவையில் கூட ஓர் இலங்கைத் தமிழர் இல்லாமல் பார்த்துக்கொண்டார்.

நாடாளுமன்றத்தில் ஒரேயொரு பெரும்பான்மையுடன் ஆட்சியைப் பிடித்த ரணில், தன்னிடமுள்ள 114 எம்.பிக்களில் ஒரேயொரு இலங்கைத் தமிழரான மகேஸ்வரனுக்கு - அவரது ஆதரவை இழந்தால் அரசு அமைக்கும் தனிப் பெரும்பான்மை போய்விடும் என்ற நிலையில் - எலும்புத் துண்டு போல போட்ட பிச்சைதான் இந்து கலாசார அமைச்சர் என்ற அமைச்சரவை அந்தஸ்து இல்லாத அரைகுறை மந்திரிப் பதவி.

சரியோ, பிழையோ இந்த விடயத்தில் ஜனாதிபதி சந்திரிகா எவ்வளவோ மேல். லஷ்மன் கதிர்காமர் என்ற இலங்கைத் தமிழருக்கு தேசியப் பட்டியல் மூலம் எம்.பி. பதவி. பின் அவருக்கு வெளிவிவகார அமைச்சர் என்ற வகையில் அமைச்சரவையில் மிக முக்கிய ஸ்தானம். இதைவிட, ஈ.பி.டி.பியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு ஒரு முழு அமைச்சு. அவர் விரும்பும் அளவுக்கு நிதி ஒதுக்கீடு. மட்டக்களப்பு கணேசலிங்கத்துக்கு பிரதி மந்திரிப் பதவி - இப்படி தேசிய அரசியலில் இலங்கைத் தமிழர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க சந்திரிகா தவறவில்லை.

ஆனால், யாழ். மாவட்டத்திலிருந்து கடும் போட்டி - நெருக்கடி - உயிராபத்து - ஆகியவற்றுக்கு மத்தியில் தனது 'திறமை'யால் ரணிலுக்கு பெருமை பெற்றுக்கொடுத்த மகேஸ்வரனுக்கு அமைச்சரவை அந்தஸ்து இல்லாத 'அரைகுறை' மந்திரிப் பதவி. அதற்கு நிதி பெறுவதற்கும் அவர் கட்சிக்குள் அச்சுறுத்தல், அட்டகாசம், கிளர்ச்சி, புரட்சி என்று பல நாடகங்களை நடத்த வேண்டிய நிலைமை.

தன்னுடைய அமைச்சின் மூலம் ஏதேனும் மக்களுக்குச் செய்ய வேண்டும் என்பதற்காக பனம்பொருள் அபிவிருத்திச் சபை, அதன் மூலம் திக்கம் வடிசாராயத் தொழிற்சாலை, வடகடல் நிறுவனம் போன்றவற்றைச் சண்டையிட்டு அரசுத் தலைமையிடமிருந்து 'பிடுங்கி' வைத்திருக்கிறார் மகேஸ்வரன்.

ஆனால், இந்து கலாசார அமைச்சின் கீழ்த்தான் திக்கம் வடிசாராயமா? மீன்பிடி நிறுவனமா? என்று நக்கல் கேள்வி எழுப்புகின்றார்கள் தமிழ் மக்கள்.

இந்து சமயத்துக்குத் தொடர்பில்லாத - ஒரு வகையில் பார்த்தால் பல விதத்திலும் முரண்படுகின்ற - இந்தப் பிரிவுகளை அமைச்சர் மகேஸ்வரனிடம் ஒப்படைத்தது தப்பு என்பதல்ல நமது வாதம். முற்றிலும் முரணான அமைச்சின்கீழ் அந்தப் பிரிவுகளை ஒப்படைத்ததுதான் தப்பு. வேறொரு அமைச்சின்கீழ் இந்தப் பிரிவுகளைக் கொண்டுவந்து, அந்த அமைச்சையும் மகேஸ்வரனிடம் ஒப்படைத்திருக்கலாம்.

ஆனால், பிரதமர் ரணில் தான் போட்ட 'பிச்சையை' விஸ்தரிக்கத் தயாரில்லை. அதனால்தான் ஒரு சமய கலாசார அமைச்சின்கீழ் வடிசாராயத் தயாரிப்பு. இந்து விவகார அமைச்சின்கீழ் மீன்பிடி.

உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றும் விவகாரம் ஈழத்தமிழரின் இனப்பிரச்சினை விடயத்தில் - இன்றைய காலகட்டத்தில் - மிக முக்கியமானதொன்று. பலரும் ஓடிக் களைத்த சிக்கலும்கூட.

அந்த விடயத்துக்காகப் போராடப் புறப்படும் அமைச்சர் மகேஸ்வரன், தமது நிலைப்பாட்டில் உறுதியாக இருக்க வேண்டும். அமைச்சர் பதவியை இராஜினாமாச் செய்யவும் தயாராக இருக்கிறேன் என்ற அவரது கூற்று வழமைபோன்று வெறும் காற்றில் கலக்கும் வாய் வீச்சாக மாறிவிடாமல் இருந்தால் சரி.

தமிழ்மக்களின் இந்த அடிப்படை உரிமைக்காகத் தனது 'அரைகுறை' அமைச்சர் பதவியை அவர் இராஜினாமாச் செய்தால்கூட அதுவும் நல்லதே. அதன் மூலம், 2001 டிசம்பரில் ரணில் போட்ட 'எலும்புத்துண்டு பிச்சையை' ஏற்றுக்கொண்டு தமிழினத்துக்கு - குறிப்பாகத் தன்னைத் தெரிவு செய்த யாழ். மக்களுக்கு - அவர் செய்த சிறுமைக்கு - இழுக்குக்கு - அவர் பிராயச்சித்தம் செய்வது போன்றும் அது அமையுமல்லவா?

# சுன்னாகம் நலன்புரி நிலைய குடிசைப் புனரமைப்புக்கு நிதி

**தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வழங்கியது**

சுன்னாகம் பிள்ளையார் நலன்புரி நிலையத்தில் உள்ள தற்காலிக குடிசைகளின் மீள்புனரமைப்புக்கென தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் யாழ். அலுவலகம் 45 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளது.

நலன்புரி நிலையங்களின் மீள்புனரமைப்புத் திட்டத்தின் கீழ் இந்த வேலைகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன என்று மேற்படி கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த மாதம் 27 தற்காலிக குடிசைகளின் கூரையை வேய்வதற்கென இந்த நிதி பயன்படுத்தப்பட்டதாகவும் -

அத்துடன், நலன்புரி நிலையத்தில் உள்ள பழுதடைந்த குழாய்க்கிணறு ஒன்றும் இந்த நிதி மூலம் மக்களின் பாவனைக்காக புனரமைக்கப்பட்டு கையளிக்கப்பட்டுள்ளது என்றும் -

இதேவேளை, அண்மையில் பெய்த கடும் மழை மற்றும் வீசிய புயல்காற்று காரணமாக சுழிபுரம் பகுதியில் சேதமடைந்த இரண்டு குடிசைகளை மீள அமைப்பதற்கென 21 ஆயிரம் ரூபா பெறுமதியான உபகரணங்களை நேற்று தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் வழங்கியிருந்தனர். (எ-ரி)

## நாட்டு நடப்பு

**நல்லையூர்க் கந்தன் திருப்பள்ளியெழுச்சி (9)**

விண்ணுயர் கோபுர வீதியில் அடியார்
விரைந்தனர் நின் தேரினைத் தொடர்ந்து
கண்ணினை மூடி விழிப்பதற்குள்ளே
கள்ளனோ அறுத்தனன் தாலி
அண்ணல் உன் அடியார் அணிகளை மாட்டி
அனைவருக்கும் காட்டிட வந்தார்
எண்ணிலா செல்வம் படைத்தனர் என்று
எடுத்தியம்பிட மாட்டிய நகையை
வண்ணமார் தேரின் பின் வந்த அவ்வனிதை
வருந்திட அறுத்ததை எடுத்தான்
அண்ணலே தேரில் இருந்திவை யெல்லாம்
அறிந்தனை பற்றி எழுந்தருளாயோ!!

- விகடகவி.

# மீண்டும் போர் வெடிப்பதைத் தடுக்க புலிகளிடம் இடைக்கால நிர்வாகம்

## வழங்கக் கோருகிறது எழுச்சிப் பேரவை

வடமராட்சி,செப்.21

இலங்கையில் மீண்டும் போர் உருவாகாமல் சகல இனமக்களும் நிம்மதியாக வாழ புலிகளின் இடைக்கால நிர்வாக யோசனையை ஏற்று, புலிகளிடம் இடைக்கால நிர்வாகத்தை ஒப்படைக்கவேண்டும்.

- இவ்வாறு தேசிய எழுச்சிப் பேரவையின் பருத்தித்துறை பிரதேசக் கிளை முன்மொழிந்து தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.

மேற்படி பேரவையின் கூட்டம் பருத்தித்துறை வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றபோது முன்மொழியப்பட்டு நிறைவேற்றப்பட்ட ஏனைய தீர்மானங்கள் வருமாறு:-

✳ பருத்தித்துறை மெதடிஸ்த, ஹாட்லிக் கல்லூரிகளில் கற்றல், கற்பித்தலுக்குத் தடையாக உள்ள இராணுவத்தினர் அங்கிருந்து வெளியேறவேண்டும்.

✳ கடற்றொழிலாளர்கள் சுதந்திரமாகத் தொழில்செய்ய இந்திய மீனவர்களின் தலையீடு, கடற்படையினரின் தொல்லை ஆகியவற்றை நீக்கி சுதந்திர கடற்றொழிலுக்கு உத்தரவாதம் அளிக்கப்படவேண்டும்.

✳ எந்த அரசு ஆட்சிக்கு வந்தாலும் பல இன்னல்களுக்கு மத்தியில் பணியாற்றுபவர்கள் கூட்டுறவுத்துறை ஊழியர்கள். இவர்களுக்கு வழங்கப்படும் சம்பளம் மிகவும் குறைவானதாகும். இவர்களது சம்பளத்தை அதிகரிக்க கூட்டுறவுத்துறை ஊழியர்களுக்கு அரசு 50 வீத மானியம் வழங்கவேண்டும்.(எ-173)

# மனைவியின் காதைக்கடித்த கணவன் பின் வாயையும் பதம் பார்த்தான்!

**தம்புள்ள பகுதியில் சம்பவம்**

தம்புள்ள,செப்.21

மனைவியின் காதையும், பின்னர் ஆஸ்பத்திரியில் வைத்து அவரது வாயையும் கடித்துக் குதறியதாகக் கூறிய நபர் ஒருவரை தம்புள்ள பொலீஸார் கைதுசெய்துள்ளனர். குடும்பத் தகராறு காரணமாகவே இச்சம்பவம் நடைபெற்றுள்ளதாகவும் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:-

தனது மனைவியின் காதிலிருந்து இரத்தம் பீறிட்டு வரும் வரை அவரது காதைக் கடித்துப் பதம்பார்த்த கணவன் மனைவியின் மீதுள்ள ஆத்திரம் தீராத நிலையில், அவர் சிகிச்சைக்கென அனுமதிக்கப்பட்டிருந்த தம்புள்ள ஆஸ்பத்திரிக்குள் பதுங்கிச் சென்று கணவன், வாயிலும் கடித்துக் காயம் ஏற்படுத்தினாராம்.

காதிலும், வாயிலும் கடியுண்ட அந்தப் பெண் பின்னர் ஆபத்தான நிலையில் பேராதனை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அவசர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். இதற்கிடையில் தம்புள்ள ஆஸ்பத்திரி நிர்வாகத்தின் முறைப்பாட்டின்பேரில் பொலீஸாரால் கணவன் கைதுசெய்யப்பட்டுள்ளார்.(எ)

# கோப்பாய் - கைதடி வீதியில் குழிகளால் பெரும் இடையூறு

தென்மராட்சி,செப்.21

கோப்பாய் சந்தியிலிருந்து கைதடிச் சந்திக்குச் செல்லும் வீதியில் பாலத்திற்கு அருகே பல இடங்களில் பாரிய குழிகள் காணப்படுவதால் வாகனங்களில் செல்வோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவ்வீதியின் இரு மருங்கிலும் கள்ளிச்செடிகள் பெருமளவில் காணப்படுவதால் வீதியின் ஓரத்திற்கு வாகனங்களைச் செலுத்துவோரை கள்ளிச்செடிகளின் முட்கள் கீறிக்கிழித்து காயப்படுத்துவதாகவும் - கூறப்படுகிறது.

மழை காலம் அண்மிப்பதால் மழை பெய்யும் வேளைகளில் இக்குழிகளில் வெள்ளம் தேங்கி நின்று வாகனத்தில் செல்வோருக்கு பெரும் சிரமங்களை ஏற்படுத்தலாம் என்றும் - தெரிவிக்கப்பட்டது. (எ-117)

**நீர்வேலி தெற்கில் பரவலாக**

# திடீர் தொற்று நோயால் வளர்ப்பு நாய்கள் மரணம்

அரியாலை,செப்.21

தற்போதைய கடும் வெப்பத்தினால் வளர்ப்பு நாய்கள் ஒருவித தொற்றுநோய்க்கு இலக்காகி மரணிக்கும் சம்பவங்கள் நீர்வேலிப் பகுதியில் அதிகரித்துள்ளன.

இந்தத் தொற்றுநோய்க்கு இலக்காகி இதுவரை 5 இற்கும் மேற்பட்ட வளர்ப்பு நாய்கள் நீர்வேலி தெற்குப் பகுதியில் இறந்துள்ளதாக இப்பகுதி மக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் - தொற்று நோயால் நாய்கள் இறக்கும் சம்பவத்தை அடுத்து மக்கள் தமது வளர்ப்பு நாய்களைக் கட்டி வளர்க்கவேண்டும் என்றும் -

விசர்நோய்த் தடை ஊசிமருந்தை நாய்களுக்கு ஏற்றிக்கொள்ள வேண்டும் என்றும்- அறிவுறுத்தப்பட்டுள்ளது.(எ-17)

# பிரான்ஸ் அரசின் உதவியுடன் 'பிரெஞ்சு' கற்கை நிலையம் குடாநாட்டில் விரைவில் அமையும்

யாழ். மாவட்டத்தில் பிரெஞ்சு மொழியைக் கற்பிப்பதற்கான நிலையம் ஒன்று விரைவில் அமைக்கப்படவுள்ளது.

புனர்வாழ்வு அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன அண்மையில் பிரான்ஸ் மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்திருந்தபோது பிரான்ஸ் நாட்டின் வெளிவிவகார அமைச்சருடன் இதுபற்றிக் கலந்துரையாடியதை அடுத்தே மேற்படி நிலையம் அமைக்கப்படவுள்ளதாக அமைச்சு விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், யாழ். திறந்த வெளி அரங்கைப் புனரமைப்பது பற்றியும் பிரான்ஸ் நாட்டின் வெளிவிவகார அமைச்சர் ரெனால்ட முசலியருடன் அமைச்சர் பேசியதை அடுத்து விசேட நிபுணர்கள் இப்பணியில் ஈடுபடவுள்ளனர் என்றும் - அந்தக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிங்கப்பூருக்குச் சென்ற அமைச்சர் ஜயலத், அங்கு இலங்கைக்கான சிங்கப்பூர் தூதர் டன்கூவோ மற்றும் வைத்திய நிபுணர் கமால் கோஷ் ஆகியோரிடம் வடக்கு - கிழக்கில் முறிவுநோய் மருத்துவ முகாம் ஒன்றை நடத்த ஆவன செய்யுமாறு வேண்டுகோள் விடுத்தார் என்றும் -

இதனையடுத்து மருத்துவ நிபுணர்கள் குழுவொன்று விரைவில் சிங்கப்பூரில் இருந்து வருகை தந்து மருத்துவ முகாமை நடத்தவுள்ளது என்றும் - தெரிவிக்கப்பட்டது. (எ-10)

**நாளை**

புரட்டாதி 05
திங்கட்கிழமை
(22.09.2003)
திதி : ஏகாதசி
பிற்பகல் 1.17 வரை
நட்சத்திரம்:பூசம்
முற்பகல் 1.26 வரை
ஏகாதசி விரதம்
சுபநேரம்: 12.02 - 1.32
ராகுகாலம்: 7.32 - 9.02
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

காலம் அனைத்தையும் வென்றுவிடும். எனவே, நேரத்துக்குப் பணிந்து கடமையாற்றுங்கள்.

**வவுனியா மாவட்டத்தில்**

# மீள்குடியமர்வுப் பணிகளில் புலிகள் நேரடிப் பங்கேற்பு

**மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தெரிவிப்பு**

வவுனியா,செப்.21

வவுனியா மாவட்டத்தில் மக்களின் மீள்குடியமர்வு தொடர்பான வேலைத் திட்டங்களில் விடுதலைப் புலிகள் முதன்முறையாக நேரடியாக ஈடுபடவுள்ளதாக வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்றுமுன்தினம் நெடுங்கேணி பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியபோதே அங்கு அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மக்கள் மீளக்குடியமரும் பொழுது அவர்களுக்குரிய அடிப்படை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவேண்டியது மிகவும் அவசியமாகும். தற்பொழுது வவுனியா வடக்கில் மக்கள் மீளக் குடியமர்ந்தும் வருகிறார்கள். இவர்களுக்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நடவடிக்கைகளிலேயே புலிகள் நேரடியாக ஈடுபடவுள்ளனர்.

கல்வி, சுகாதாரம், நீர் மற்றும் வீதி புனரமைப்பு, விவசாயம் ஆகிய விடயங்களில் உடனடியாகத் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன - என்றார் அவர்.

மேற்படி கலந்துரையாடலில் நிர்வாக சேவைப் பொறுப்பாளர் பூவண்ணன், வவுனியா மாவட்ட அரச அதிபர் [illegible] ஆகியோரும் கலந்துகொண்டனர். (எ-10)


மக்கள் வங்கி
அவளை அசத்த
விரும்புகிறீர்கள்
ஆனால் உங்கள்
கையில் பணமில்லை
அந்த அழகான காதணியைப் பார்த்தபோது அவள் கண்களில் தெரிந்த மகிழ்ச்சி.... அந்தக் காதணி அவளுக்கு ரொம்பப் பிடித்துவிட்டது. அதை வாங்கிக் கொடுத்து அவளை மகிழ்ச்சியில் ஆழ்த்த வேண்டும் என்பதே உங்கள் விருப்பம். ஆனால் உங்கள் கையில் பணம் இல்லை. இத்தகைய சந்தர்ப்பத்தில் உங்களுக்கு உதவுவதற்காகவே மக்கள் வங்கி YES சேமிப்புக் கணக்கை உங்களுக்கு வழங்குகின்றது. YES உங்கள் பணத்தை பத்திரமாக சேமிக்க உதவுவதுடன் மக்கள் வங்கியின் வீசா கிரடிட் காட்டையும் வழங்குகின்றது. எனவே இனி உங்கள் இனியவளுக்கு நீங்கள் விரும்பியதை வாங்கிக் கொடுத்து அசத்தலாம். இன்றே மக்கள் வங்கியின் YES சேமிப்புக் கணக்கை ஆரம்பியுங்கள்.
நீங்கள் சுதந்திரமாய் இருக்க விரும்புகிறீர்களா ?
yes
Young Executive Savings


மச்சான் இவங்களின்ட கடி
தாங்க முடியயில்லடா.
நீ நல்ல நேரம் தப்பிச்சுட்ட..
kit
டயலொக் GSM
உங்களின் சகல தொலைபேசி அழைப்புக்களுக்கும் எந்நேரமும் டயலொக் உடன் இணைந்திருங்கள்.
எதிர்காலம் இன்றே.

# காலத்தால் அழியாத கனலென தீபமாய்ச் சுடர்விடும் திலீபன்



பதினாறு ஆண்டுகளுக்கு முன்னர் நல்லூரின் வடகிழக்கு மூலையில் இந்திய அரசின் அராஜகத்தைத் தட்டிக்கேட்க - தமிழ் மக்களுக்கு உரிமையுடன் கூடிய சுதந்திரம் வேண்டும் எனக்கோரி - தன்னையே உருக்கி விதையானவன் தியாகி லெப்.கேணல் திலீபன்

***கோரிக்கைகள்***

✪ பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுப்புக்காவலில் அல்லது சிறைகளில் உள்ளோர் உடனடியாக விடுவிக்கப்படவேண்டும்.

✪ புனர்வாழ்வு என்ற பேரில் தமிழர் தாயகப்பகுதிகளில் இடம்பெறும் சிங்களக் குடியேற்றங்கள் நிறுத்தப்படல் வேண்டும்.

✪ இடைக்கால அரசு நிறுவப்படும்வரை 'புனர்வாழ்வு' என்று அழைக்கப்படும் அகல நடவடிக்கைகளும் நிறுத்தப்படவேண்டும்.

✪ வடக்கு - கிழக்கு மாகாணங்களில் பொலீஸ் நிலையங்கள் திறக்கப்படுவது உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும்.

✪ இந்திய அமைதிப்படையின் மேற்பார்வையில் ஊர்காவற்படை என அழைக்கப்படுவோருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் திரும்பப் பெறப்படுவதுடன், தமிழ்க்கிராமங்கள், பாடசாலைகள் ஆகியவற்றில் முகாமிட்டுள்ள இராணுவ, பொலீஸ் நிலையங்கள் மூடப்படல் வேண்டும்.

இந்த 5 கோரிக்கைகளையுமே தியாகி திலீபன் முன்வைத்து தண்ணீர்கூட அருந்தாது உண்ணா நோன்பிருந்தார்.

இவற்றை நிறைவேற்றினால் தாம் இங்கு வந்த நோக்கமெதனையும் அடைய முடியாமற்போய்விடும் என எண்ணிய பாரததேசம், திலீபன் சிறுகச்சிறுக இறந்துபோவதைப் பார்த்துக்கிடந்தது. அஹிம்சையின் தாய்நிலம் எனவும், காந்தியின் தேசம் எனவும், தன்னைத்தானே புகழ்பாடிய தேசத்தின் முகத்திரை கிழிந்து, அதன் அசுரமுகம் தெரிந்தபோது திலீபனின் உயிர் சிறுகச்சிறுகப் பிரிவதை எண்ணி கண்ணீர் வடிப்பதைத் தவிர ஈழத்தமிழரால் அப்போது வேறெதுவும் செய்ய முடியவில்லை. ஆனால், புலி மறவனின் உறுதிகண்டு இந்தியா கலங்கியது.

விடுதலைப் புலிகளின் தலைவரை அன்றைய காலகட்டத்தில் இந்தியப்படையின் தென்பிராந்தியத் தளபதியாக இருந்த திபேந்தர் சிங்கின் ஏற்பாட்டின் பேரில் மூன்று முறை இலங்கைக்கான இந்தியத் தூதுவராக அன்றிருந்த ஜே.என்.டிக்ஷித், அமைதிப்படையின் தளபதி மேஜர் ஜெனரல் கர்க்கீத் சிங், பிரிகேடியர் பெர்னாண்டஸ், இந்தியத் தூதரகப் பாதுகாப்பு அதிகாரி கப்டன் குப்தா போன்றோர் மாறிமாறிச் சந்தித்து திலீபன் உண்ணாவிரதமிருப்பதை நிறுத்துமாறு கோரினர்.

***கொள்கை உறுதி***

எனினும், கொண்டகொள்கையில் உறுதியாக நின்ற திலீபன், கோரிக்கைகளை நிறைவேற்றித் தருதல் அவசியம் என்பதனையே வலியுறுத்தினான்.

ஆனால், இந்தியாவின் வறட்டுக் கௌரவமும், உலகின் நான்காவது பெரிய இராணுவம் தன்னிடமுண்டு என்ற ஆணவமும் திலீபன் தற்கொடையளிக்கக் காரணமாகின. சிறு உளி மலையைப் பிளப்பது போல, உடனடியாகவே இந்தியா விளைவை அனுபவிக்கத் தொடங்கியது.

***அறைகூவல்***

'நான் மரணமடைந்தாலும் எனது சகதோழர்களுடன் வானிலிருந்து தமிழீழம் மலரும் அந்த நாளைப் பார்ப்பேன். மக்கள் புரட்சி வெடிக்கட்டும், சுதந்திரத் தமிழீழம் மலரட்டும்' என்ற திலீபனின் இறுதி நிமிட அறைகூவல் இந்தியப்படைக்கு சாவோலையானது.

**செந்தூர்ராஜ்**

இந்தியப்படை திரும்பிய இடமெல்லாம் அடிவிழுந்தது. இறுதியாக உலகின் நான்காவது பெரிய இராணுவத்தின் அமைதிப்படை ஈழத்து மண்ணைவிட்டுப் பேரிழப்புகளுடன் விலகியது.

ஊரெழுவில் இராசையா என்னும் ஆசிரியரின மகனாக 1963 ஆம் ஆண்டு நவம்பர் 27 ஆம் திகதி பிறந்த பார்த்தீபன், பிறந்து பத்தாவது மாதத்திலேயே தாயாரை இழந்த போதும் பண்புடனும், பணிவுடனும் வளர்ந்து மருத்துவபீடத்திற்கும் தெரிவானான்.

தமிழரின் அவலமும், சிங்கள இனவாதிகளின் அடக்கு முறையும் பார்த்தீபனை எழுச்சிகொள்ள வைத்தன. விளைவு பார்த்தீபன் என்ற மருத்துவபீட மாணவன் போராட்டத்தின்பால் நாட்டங்கொண்ட திலீபனாக உருவெடுத்தான்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இணைந்துகொண்ட அவன், தனது ஆற்றல் காரணமாக யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளராகக் கேணல் கிட்டுவால் நியமிக்கப்பட்டான்.

'சுதந்திரப் பறவைகள்', 'களத்தில்' முதலான பத்திரிகைகள் வெளிவரக் காரணமானவர் திலீபன். இதனைவிட விடுதலைப் புலிகளின் மாணவர் அமைப்பு, சுதந்திரப் பறவைகள் அமைப்பு, தேசபக்தர்கள் அமைப்பு, விழிப்புக் குழுக்கள், சர்வதேச உற்பத்திக் குழுக்கள், தமிழீழ ஒலி - ஒளி சேவை கட்டுப்பாட்டுச்சபை, தமிழர் கலாசார சபை முதலானவற்றை நிறுவி, அதன்மூலம் தமிழ் மக்கள் மத்தியில் தேசியப் போராட்டத்தின் வடிவத்தை நெறிப்படுத்தினார் அவர்.

***அழியாத தீபம்***

காலத்தால் அழியாது கனலென வாழ்ந்து தீபமாய், தமிழர் மனங்களில் சுடர்விட்டுக் கொண்டிருக்கும் திலீபனைப் பற்றி தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் கூறும்போது -

எமது விடுதலை இயக்கம் எத்தனையோ அற்புதமான தியாகங்களைப் படைத்திருக்கின்றது. வீரகாவியங்களைச் செய்திருக்கின்றது. இவை எல்லாம் எமது ஆயுத விடுதலைப் போராட்ட வரலாற்றில் நாம் ஈட்டிய சாதனைகள். ஆனால், எமது அன்பான தோழன் திலீபனின் தியாகம் வித்தியாசமானது; வியக்கத்தக்கது; எமது போராட்ட வரலாற்றில் புதுமையானது.

சாத்வீகப் போராட்டத்தில் தன்னைப் பலி கொடுத்த ஈடு இணையற்ற, ஒரு மகத்தான தியாகத்தைத் திலீபன் புரிந்தான். அவனது மரணம் ஒரு மாபெரும் வரலாற்று நிகழ்ச்சி. தமிழீழப் போராட்ட வரலாற்றில் ஒரு புரட்சிகரமான திருப்பத்தை ஏற்படுத்திய நிகழ்ச்சி. தமிழீழத் தேசிய ஆன்மாவைத் தட்டியெழுப்பிய நிகழ்ச்சி. உலகத்தின் மனச்சாட்சியைச் சீண்டிவிட்ட நிகழ்ச்சி - என்றார்.

இக்கூற்று ஒன்றேபோதும் திலீபனின் தியாக வரலாற்றின் ஆழத்தைப் புரிந்துகொள்ள! ❖

## கனவு நனவாகும்



மொட்டென் மலர்ந்து
மணம் வீசாது
வேரோடு சாய்ந்தது
தமிழின் தியாக தீபம்.

வாழ்வை அனுபவிக்கா வயதில்
தமிழின வாழ்வுக்கு
உண்ணாநோன்பிருந்தது
திலீபனெனும் ஜீவன்.

மருத்துவப் பட்டம் பெற்று
மருத்துவனாய்த் திகழ வேண்டியவனோ
காந்திய வழியில் தமிழுக்காய்
தன் உயிர் ஈந்தான்.

தாயகம் மீது கொண்ட
தாளாத அன்பினால்
தன்னுயிரைக் கொடுக்கவும்
தயங்கவில்லை நெஞ்சம்.

கண்ணீரில் கரைந்த காவியங்கள்
தமிழ் நெஞ்சங்களில் திலீபனின் ஓவியங்கள்.

தியாகத்தின் பிறப்பிடமே திலீபா
தமிழர் விடிவுக்காய் உன் உயிர்
விலை பேசி - முடிவு
உன் இறப்பு.

தமிழர் உள்ளத்தில் உத்தமனே பார்த்திபா
தமிழ் நெஞ்சங்கள் வாழும் காலம் யாவும்
உன் புகழ் ஓங்கும்
உன் கனவு நனவாகும்.

- ஆரணி சாந்தகுமார்.

## வளங்கள் மட்டும் இருந்தால் போதாது மாணவர் மத்தியில் ஒழுக்கம் அவசியம்!

### பாடசாலை நிகழ்வில் யாழ். ஆயர் தெரிவிப்பு

சண்டிலிப்பாய்,செப்.21

பாடசாலைகளில் பௌதிக வளங்களும், கல்வி வளமும் இருந்துவிட்டால் மட்டும் போதாது. அங்கு கற்கும் மாணவர்களின் ஒழுக்கம் பேணப்படுவது மிக முக்கியமானது.

ஒழுக்கத்தை மாணவர்கள் இழந்துவிட்டால், அவர்கள் பெறும் கல்வியினால் எவ்வித பிரயோசனமும் ஏற்படப்போவதில்லை.

மாதகல் சென்.ஜோசவ் மகா வித்தியாலயத்தில் ஜி.ரி.இசற். நிறுவனத்தினால் புனரமைப்புச் செய்யப்பட்ட 'முன்னாள் ஆயர் எமிலியானூஸ்பிள்ளை ஞாபகார்த்த வகுப்பறை மண்டபத்தின்' திறப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ். மறைமாவட்ட ஆயர் அதிவண. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வித்தியாலய அதிபர் வி.சுப்பிரமணியம் தலைமையில் கடந்த 17 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் இந்த நிகழ்வு நடைபெற்றது.

யாழ். ஆயர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

கத்தோலிக்க திருச்சபையானது அக்காலத்தில் நகர்ப்புறங்களில் மட்டுமன்றி, கிராமப் புறங்களிலும் பாடசாலைகளை நிறுவி கிராமப்புற மக்களின் கல்வி அறிவு விருத்திக்கும், ஆங்கில மொழிக் கல்விக்கும் பெரும் தொண்டாற்றி வந்துள்ளது.

முன்னாள் ஆயர் எமிலியானூஸ்பிள்ளை அவர்களின் கல்விச் சேவைகள் பற்றி எதிர்கால சந்ததியினரும் அறிந்துகொள்ளும் வகையில் அவரது பெயர் இங்கு சூட்டப்பட்டிருப்பது மிகவும் வரவேற்கத்தக்கது - என்றார்.

கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்ட வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி ரெஜினா இரு தயநாதன் உரையாற்றுகையில்:-

எவ்வித மதவேறுபாடுகளுமின்றி இந்த பாடசாலைச் சமூகம் இந்தக் கட்டடத்திற்குப் புகழ்பூத்த மறைந்த முன்னாள் ஆயரின் பெயரைச் சூட்டியிருப்பது பாராட்டுதற்குரியது.

மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்துவதன் மூலம் கிராமப் புறப் பாடசாலைகளின் கல்வித் தரத்தை உயர்த்த முடியும்.

மாணவர்கள் பண்பாடுடையவர்களாகவும், கலாசாரத்தைப் பேணுபவர்களாகவும் விளங்குவதற்கு ஏற்ற கல்வியைப் பாடசாலைகள் வழங்கவேண்டும் - என்றார்.

மாதகல் பங்குத் தந்தை அருட்திரு. ஏ.சி.கிறிஸ்தோபர் அடிகளார், சென்.பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் அருட்திரு.ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார், சண்டிலிப்பாய் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் மு.பாலசிங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் இ.தங்கராசா ஆகியோர் உட்பட மற்றும் பலரும் உரையாற்றினர். (எ-135)

### நல்லூர் மாநகரசபைப் பிரிவுகளில்

## தியாகி திலீபன் நினைவாக சுத்திகரிப்புத் திட்டங்கள்

### நாளைமுதல் நடைமுறைக்கு

கொழும்புத்துறை,செப்.21

தியாகதீபம் திலீபனின் நினைவாக யாழ். மாநகரசபை மற்றும் நல்லூர் பிரதேசசபை என்பன நாளை திங்கட்கிழமைமுதல் 25 ஆம் திகதி வியாழக்கிழமைவரை பல கிராம சுத்திகரிப்பு வேலைத் திட்டங்களை மேற்கொள்ளவுள்ளன.

திருநெல்வேலிப் பகுதி வீதிகளும் பொதுச் சந்தையும் நாளை திங்கட்கிழமையும் -

23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கோண்டாவில் கட்டையான் மயானமும் அதனைச் சூழவுள்ள பகுதிகளும் -

24 ஆம் திகதி புதன்கிழமை கொக்குவில் பகுதி வீதிகளும் சந்தையும் -

25 ஆம்திகதி கல்வியங்காட்டுப் பகுதி வீதிகள் மற்றும் வடிகால்கள், சங்கிலியன் தோப்புப் பகுதிகளும் -

நல்லூர்ப் பிரதேச சபை ஊழியர்களால் துப்பரவு செய்யப்படும்.

இதேதினங்களில், யாழ். மாநகர சபை ஊழியர்களால் குருநகர், நாவாந்துறை ரயில் நிலையப் பகுதி, நகரப் பகுதிகள் என்பன சுத்திகரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும் என திலீபன் நினைவுதின ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

இந்த வேலைத் திட்டங்களுக்குப் பொதுமக்கள் தமது பூரண பங்களிப்பை வழங்கவேண்டும் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-30)

## சகோதரத்துவ உணர்வு வளர்க்கப்படுவது அவசியம்

'கிறிஸ்துவின் வழியாகக் கடவுள் உங்களை மன்னித்ததுபோல் நீங்களும் ஒருவரையொருவர் மன்னியுங்கள்.'

எம் தந்தையாம் இறைவன் தம் மக்கள் யாவரும் இன்புற்று வாழ வேண்டுமென்பதற்காக சகல வளங்களையும், நலன்களையும், வசதிகள், வாய்ப்புகளையும் கொடுத்து இனிதே இவ்வுலகில் வாழவிட்டான். ஆனால், மனிதனோ இறைவனை மறந்து ஆணவம், அகந்தை, சுயநலம், போட்டி, பொறாமை இவற்றிற்கெல்லாம் தம்மை அடிமையாக்கித் தம் வாழ்வோடு அடுத்தவன் வாழ்வையும் அழித்து விடுகின்ற பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்டான்.

இரக்கமும் பரிவன்புமுள்ள தேவன் தம் மக்களை எப்படியாவது இந்தப் பாவ இருளில் இருந்து இறை ஒளிக்கு இழுத்துவர எண்ணித் தம் ஒரே மகனை இவ்வுலகிற்கு அனுப்பினார். கிறிஸ்து வழியாக தாம் நிறைவேற்றவிருந்த மீட்புத் திட்டத்தை இறைவாக்கினர் மூலமாக முன்கூட்டியே அறிவித்தார். 'நான் தாவீதிலிருந்து நீதியின் தளிர் ஒன்று முளைக்கச் செய்வேன். அவர் நாட்டில் நீதியையும் நேர்மையையும் நிலைநாட்டுவார்' (எரேமி - 33: 14-16)

**ஞாயிறு நற்பிரசாதம்**

இறைவனின் வாக்குறுதிக்கேற்ப இவ்வுலகிற்கு அனுப்பப்பட்ட இயேசு, நீதியின் தேவனாக, சமாதானத்தின் தூதுவனாக, ஏழைகளின் தோழனாக, நோயுற்றோர்க்கு மருத்துவனாகப் பணி செய்ததோடு, நின்றுவிடவில்லை. தமது வாழ்வாலும் வார்த்தையாலும் கொடூரமான நெஞ்சங்களையும் இறுகிய இதயங்களையும் மரத்துப்போன மனங்களையும் இறையன்பிற்கு இழுத்து அன்பு, இரக்கம், மன்னிப்பு, கருணை எனும் பண்புகளைப் பரப்பினார்.



**திருமதி றோஸ் இராஜரெட்ணம்**
**யாழ்ப்பாணம்**

தமது மக்களைத் தாம் அன்பு செய்ததுபோல் நாமும் ஒருவரை ஒருவர் நேசிக்கவும் மன்னிக்கவும் அன்பு செய்யவும் வேண்டுமென்பதற்காகத் தமது உடலையும் இரத்தத்தையும் உணவாகவும் பானமாகவும் எமக்குத் தந்தார். திருப்பலித் திருவிருந்திலே இத்திருவுணவை நாம் உட்கொண்டு எம்மத்தியில் சமத்துவ, சகோதரத்துவ, அன்பின் உணர்வுகளை வளர்த்துக் கொள்வோம். ✦

## ஆங்கிலம் கற்க ஆசையா? ஏன் தாமதம்

தபால் மூல இலவச ஆங்கில பாடநெறியில் இணையுங்கள்

90 நாட்களில் சரளமான ஆங்கில அறிவுடன் DIPLOMA சான்றிதழ் ஒன்றையும் பெற்றுக் கொள்ளுங்கள்

அடிப்படையில் இருந்தே கற்றுக் கொடுக்கப்படும்.

FREE FREE இலவசம் இலவசம்

அழகிய குடை or டீ.சேர்ட் இலவசம்

எமது நிறுவனத்தின் நான்கு வருட பூர்த்தியை முன்னிட்டு இனையும் அனைத்து மாணவர்களுக்கும் இலவசமாக வழங்கப்படும்

மேலதிக விபரங்களுக்கு 4.50/= பெறுமதியான 1 முத்திரை அனுப்பி பெற்றுக் கொள்க.

**THE ENGLISH LANGUAGE INSTITUTE**

P.O. BOX 83 KANDY. Tele: 0777-802 849



## Hotel SEIVAMS

தலைநகரில் கடந்த 16 வருடங்களாக மிகவும் சிறந்த சேவை செய்யும் ஒரே ஸ்தாபனம் ஹோட்டல் சீவம்ஸ்.

01. தனி அறை (Single Room)
02. இருவர் அறை (Double Room)
03. கொமட் வசதியுள்ள மலசல கூடங்கள்
04. குளிரூட்டப்பட்ட அறை (AirCondition Room)

மிகவும் சகாயமான கட்டணத்தில் வாடகைக்குக் கிடைக்கும். இன்றே விஜயம் செய்யுங்கள்:

Hotel SEIVAMS

Guest House, 93, Vivekananda Hill, Colombo-13, Tel: 326522

(22496)



Operator உடன் வாடகைக்கு உண்டு

Hitachi Mini Excavator



கட்டடம் உடைத்து
அப்புறப்படுத்த,
காணி துப்புரவு செய்ய,
கிடங்குகள் மற்றும்
கிணறு கிண்ட,
அத்திவாரங்களை
அகற்ற மற்றும் அகழ்வுகள்
கனரக பொருள்களை இறக்க, ஏற்ற தொடர்பு கொள்ளுங்கள்...

திரு.பாலசுந்தரம் 021 2223867, வாசுகி 0777291636



## வடபிராந்திய நிர்மாணிகள் சங்கம்

தலைமைச் செயலகம்

கிளிநொச்சி

பதவி வெற்றிடங்களுக்கான

# விண்ணப்பம்

மேற்படி சங்கத்திற்கு பொறியியலாளர்- (B.Sc. Eng.) அல்லது இதற்குச் சமமான தராதரம் அல்லது N.D.T. உடன் 10 வருட அனுபவம்.

மேற்படி வெற்றிடத்திற்கு விண்ணப்பிப்பவர்கள் கீழ்க் காணும் அனுபவம் மிக்கவர்களாக இருத்தல் வேண்டும்.

கேள்வி ஆவணப்படுத்துதல் (Procurements) கணியச் சிட்டைகள் தயாரித்தல் வடபிராந்திய நிர்மாணிகள் சங்கத்தின் ஒப்பந்த வேலைகளை ஒழுங்குபடுத்தல், மேம்படுத்தல் ஒப்பந்தகாரர்களை நிர்வகித்தல் போன்ற செயற்பாடுகளை திறமிக்கதாக ஆற்றக்கூடியவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்களைக் கீழ்வரும் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

முகாமையாளர்,
வடபிராந்திய நிர்மாணிகள் சங்கம்
(தலைமைச் செயலகம்)
கண்டி வீதி,
கிளிநொச்சி.

(சி-30266) (21-14-16)


## அளவெட்டியில் மருத்துவ முகாம்

மல்லாகம், தெல்லிப்பழை லயன்ஸ் கழகம் நடத்தும் இலவச மருத்துவ முகாமொன்று இன்று காலை 8மணி முதல் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்த மருத்துவமுகாமில் மருந்துகளும் இலவசமாக வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.(ஒ-150)


## வேலையாள் தேவை

* பெயின்ரிங் வேலை, வெல்டிங் வேலை தெரிந்தவர்களும் பழக விரும்புபவர்களும்
* பெண்களுக்கான தையல் வேலை தெரிந்தவர்களும் தொடர்புகொள்ளவும்.

*கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.*

**சிற்றி காமன்ற்,**

535. பலாலி வீதி பரமேஸ்வராச் சந்தி.
(பெற்றோல் நிரப்பு நிலையம் அருகில்)
T.P.: 0777 - 536108

(21-13-15)



## அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்

சமாதான நீதிவான்
திருவாளர்
**ஆழ்வார் கந்தசாமி**



கரவெட்டி மத்தி தச்சந்தோப்பு வீதியைச் சேர்ந்த திரு.ஆழ்வார் கந்தசாமி அவர்கள் 2003.08.25 அன்று அகில இலங்கை சமாதான நீதிவானாக யாழ்.மாவட்ட நீதிபதி ஆர்.ரீ. விக்னராஜா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் பருத்தித்துறை வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் களஞ்சியப் பொறுப்பாளரும், போக்குவரத்து இந்து ஊழியர் சங்கத்தின் பொருளாளரும் சிறந்த சமூக சேவையாளரும் சமயத் தொண்டருமாவார்.

இவரது பணி சமூக சேவையில் மேலும் பல ஆண்டுகள் தொடர இறைவனைப் பிரார்த்தித்து அவரைப் பாராட்டி வாழ்த்தி மகிழ்கின்றோம்.

புலோலி தெற்கு,
புலோலி.

(22789)(21-14-16)

வாழ்த்துவோர்:
கந்தசாமி குடும்பத்தினர்,
ஈஸ்வரன் குடும்பத்தினர்.








## விஜயதசமி அன்று புதிய பிரிவுகள் ஆரம்பம்

பாலர் பாடசாலை October 05,2003
விஜயதசமி அன்று ஏடு தொடக்கப்படும்.



யாழ் நகரிலும் வடமராட்சியிலும்

சிறாருக்கான ஆங்கில வகுப்புகள்
Level 1, 2, 3, 4 புதிய பிரிவுகள் ஆரம்பம்.

வளர்ந்தோருக்கான
Certificate in English ஆரம்பிக்கப்படும்.

இப்பொழுதே பதிவு செய்யுங்கள்

British BUSINESS SCHOOL

**BRITISH BUSINESS SCHOOL**

| JAFFNA CITY CAMPUS | JAFFNA KACHCHERICAMPUS | VADAMARACHCHY CAMPUS |
|---|---|---|
| #140, TEMPLE ROAD, JAFFNA. | #74, KANDY ROAD, JAFFNA. | POINTPEDRO ROAD, KIRAMAKKOTTADI, PULOLY. |

Students Come First

HOT LINE : 021-222-5796

# புலிகள் புதிய முகாம் அமைக்கின்றார்கள் என்பது எதிர்க்கட்சிகள் மேற்கொள்ளும் அபத்தமான பிரசாரம்

## திருமலைக் கட்டளைத் தளபதி பதுமன் தெரிவிப்பு

திருகோணமலை,செப்.21

திருகோணமலை மாவட்டத்தில் விடுதலைப் புலிகள் புதிய முகாம் அமைத்துள்ளார்கள் என்று எதிர்க்கட்சிகளால் மேற்கொள்ளப்படும் பிரசாரம் அபத்தமானது. புரிந்துணர்வு ஒப்பந்தம் உருவான பின்னர் புலிகளால் எந்தப் பகுதியிலும் முகாம்கள் அமைக்கப்படவில்லை. அரசியல் பணிமனைகள் மட்டுமே திறக்கப்பட்டன.

நேற்று முன்தினம் மூதூர் சம்பூரில் விடுதலைப் புலிகளின் செய்தியாளர் மாநாடு ஒன்று நடந்தது. அதில் கலந்துகொண்டு உரையாற்றிய புலிகளின் மாவட்டக் கட்டளையிடும் தளபதி கேணல் பதுமன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:-

ஆண்டான்குளத்தில் நாம் முகாம் அமைப்பதாகப் பிரசாரம் மேற்கொள்ளப்பட்டது. ஆனால், கண்காணிப்புக் குழுவினர், பௌத்த குருமார்கள் ஆகியோர் அங்கு சென்று பார்த்தனர். உண்மையைத் தெரிந்து கொண்டனர். அங்கு எந்த முகாமும் இல்லை.

குரங்குபாஞ்சான் முகாம் எமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் நீண்ட காலத்துக்கு முன்பே அமைக்கப்பட்டது. இது விடயத்தில் படைத்தரப்பினரின் முறைப்பாட்டை மட்டும் விசாரித்துவிட்டுக் கண்காணிப்புக்குழு பக்கச் சார்பான முடிவு எடுத்துள்ளது.

அந்தப்பகுதியில், தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும், சொந்தமான வயல்கள் உள்ளன. புரிந்துணர்வு ஒப்பந்தத்தையடுத்து ஏற்பட்டுள்ள சுமுக நிலையினால் அங்கு முஸ்லிம் மக்கள் தமது விவசாயக் கடமைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

நாம் முஸ்லிம் மக்கள் வாழும் பகுதிகளில் எந்த விதமான அரசியல் நடவடிக்கைகளிலும் ஈடுபடுவதில்லை. அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்பதில் நாம் உறுதியாகவிருக்கிறோம்.

பொலீஸாருடன் ஏற்பட்டுள்ள உடன்பாட்டையடுத்து நாம் கைது செய்த இரண்டு பொலீஸாரையும் விடுதலை செய்துள்ளோம். இனி எமது உறுப்பினர்களைக் கைதுசெய்வதில்லை எனப் பொலீஸார் எமக்கு உறுதியளித்துள்ளார்கள். இருந்தபோதிலும், எவ்வித குற்றச்சாட்டும் அற்ற நிலையில் கைதுசெய்யப்பட்டுள்ள எமது மூன்று உறுப்பினர்களை விடுதலை செய்யும் பட்சத்தில் எம் வசமுள்ள கடற்படைச் சிப்பாயை நாம் விடுவிப்போம்.

திருகோணமலை மாவட்டத்தில் பொலீஸாரால் 25 புலி உறுப்பினர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களில் பத்துப்பேர் எவ்வித குற்றச்சாட்டும் இல்லாத நிலையில் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

மூதூர் பகுதியில் முஸ்லிம் - தமிழ் மக்களிடையே ஏற்பட்ட மோதல்களுக்குக் காரணமான தமிழர்களுக்கு நாம் தண்டனை வழங்கியுள்ளோம். முஸ்லிம் மக்கள் மத்தியில் அரசியல்வாதிகள் தலையிட்டுப் பிரச்சினையைத் தூண்டிவிட்டு வருகின்றனர். எனவே, அம்மக்களுடன் நேரடியாகப் பேசி பிரச்சினைகளுக்கு நாம் முடிவு காண்போம்.

மேலும், தமிழ்ப் பகுதிகளில் இடம்பெறும் கொலைகளுக்குக் காரணமானவர்கள் புலிகள்தான் எனப்பிரசாரம் செய்யப்படுகிறது. ஆனால், அந்தக் கொலைச் சம்பவங்களுக்கும் புலிகளுக்கும் சம்பந்தமில்லை. பொலீஸார் மேற்கொண்ட விசாரணைகளில் அதன் பின்னணி தெரியவந்துள்ளது.

- இவ்வாறு அவர் கூறினார்.



மல்லாகம் - தெல்லிப்பழை லயன்ஸ் கழகத்தால் மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடத்தப்பட்ட நுளம்புவலை விநியோகிக்கும் நிகழ்வில் தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி செல்வி நவமலர் கனகரத்தினம் குடும்பத் தலைவி ஒருவருக்கு நுளம்பு வலையை விநியோகிப்பதைப் படத்தில் காணலாம்.

*(படம்: தெல்லிப்பழை செய்தியாளர்)*

### இலங்கையில் கைதான

# 254 பாகிஸ்தானியர்களை தாயகம் அனுப்ப நடவடிக்கை

சட்டவிரோதமாக இத்தாலி செல்வதற்காக இலங்கையில் மறைந்திருந்தசமயம் கைதுசெய்யப்பட்ட 254 பாகிஸ்தானியர்களும் அவர்களது நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்படவுள்ளனர்.

இத்தகவலை இலங்கையின் குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் வெளியிட்டுள்ளது.

வெவ்வேறு சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இந்தப் பாகிஸ்தானியர்கள் விரைவில் வெலிக்கடைச் சிறைச்சாலைக்குக் கொண்டுவரப்பட்டு விடுவிக்கப்படவுள்ளனர்.

இவர்களை அவர்களது சொந்த நாட்டிற்கு அனுப்பிவைப்பதற்கு வேண்டிய விமானப் பயணச் சீட்டுக்களை பெற குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஓ-12)

# 'பாய்ஸ்' மீதான தடையுடன் சீரழிவுகள் அகற்றப்படுமா?

யுத்த வடுக்களைத் தன்னகத்தே கொண்டிருந்தாலும் சற்றேனும் தளர்வுறாது யாழ்ப்பாண மண் தலை நிமிர்ந்து நின்றதென்றால் அதற்குக் காரணம் கட்டுக்கோப்பான சமூக அமைப்பும், ஒழுங்கமைப்பான நிர்வாக செயற்றிறனும்தான். இந்தக் கட்டுக்கோப்பும் ஒழுங்கமைக்கப்பட்ட நிர்வாகக் கட்டமைப்பும் 1995 ஆம் - 2001 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் ஆட்டம் காணத் தொடங்கியமை அல்லது ஆட்டம் காணவைக்கப்பட்டமை சகலரும் மௌனமாக ஏற்றுக்கொள்ளவேண்டிய உண்மை. சமூகச் சீரழிவுகளும் கலாசாரச் சிதைவுகளும் ஏற்பட்ட அக்காலத்தில், யுத்த அரக்கனின் பிடியினால் பாதிக்கப்பட்ட எமது மண்ணின் வடுக்களின் சுவடுகள் முலாம் பூசப்பட்டன. அவற்றின் மறைப்பின் மூலம் வரலாறுகளை மறக்கச் செய்யவும் முயற்சிகள் எடுக்கப்பட்டன. அவ்வாறான முயற்சிகளை எமது சமூகம் மறந்தும் விடாது; மன்னித்தும் விடாது.

யுத்த அரக்கனது பிடியினால் தளர்ந்துபோயிருந்தவர்களையும், சிதைவடைந்து போனவற்றையும் மறுசீரமைப்பது என்பதும், அதன் வடுக்களை அகற்றுவது என்பதும் தவறான செயல் அல்ல. அதற்கு மேலாக எமது பண்பாட்டுக் கலாசார விழுமியங்கள் சரிவுகண்டபோது அதனைக் கருத்திற்கொள்ளாமையும் அவற்றினை மேலும் தூண்டக் கூடியவாறான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்தமையும்தான் மன்னிக்கவோ மறக்கவோ முடியாத குற்றங்களாகவும், வரலாற்றுத் துரோகங்களாகவும் பதிவாகிப் போயின. இவற்றைப் பற்றி ஆராய்வதோ அல்லது இதனை விமர்சிப்பதோ இப்போது தேவைதானா எனப் பலர் வினவலாம். ஆனால், அதனை ஆராயவேண்டிய தேவையை அண்மைக் காலத்தில் சில இளைய சமுதாயத்தினர் ஏற்படுத்தியிருக்கின்றனர்.

குறிப்பிட்ட காலப்பகுதியில் மட்டும் இவ்வாறான சமூகக் கட்டமைப்புத் தளம்பல் ஏற்படக் காரணம் என்ன? இவ்வாறான சமூகச் சீரழிவுக்குக் காரணமானவர்கள் யார்? எமது பண்பாட்டு விழுமியங்களும் கலாசாரங்களும் திட்டமிட்டே சீரழிக்கப்பட்டனவா? அல்லது எமது இளைஞர்களும், யுவதிகளும் ஆட்சி மாற்றச் சந்தர்ப்பத்தைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு இவ்வாறான சீரழிவுகளுக்கு அடிகோலினார்களா?

முதலாவதாகச் சமூகக் கட்டமைப்புத் தளம்பல் ஏற்படக் காரணம் யார்? என்ற வினாவுக்கு விடை தேடினால், அதற்குக் காரணம், அரசியல் என்ற ஒன்றை மையமாக வைத்துக்கொண்டு தமது ஜீவனோபாயத்தை நடத்த முற்பட்ட அரசியல்வாதிகள்தான் என்பதே விடையாகத் தென்படும். ஏனெனில், தமது சுயலாபத்திற்காக தமது இனத்தை, அதன் பாரம்பரியங்களைக்கூட விலை பேசும் அளவுக்கு அரசியல் கலாசாரம் உருவாகிய காலப்பகுதியை யாழ்ப்பாணம் குறிப்பிட்ட காலப் பகுதியில் கண்டது என்பது சகலரும் அறிந்ததே. அதாவது, எதிர்பாராத நிர்வாக உடைவுகளை தமது உடைமைகளாக்கிய சில அரசியல் பெருச்சாளிகள் சமூகச் சீரழிவுக்கு அஸ்திவாரமிட்டனர்.

தொடர்ந்து எம்மவரது நிலைமையைத் தங்களது தேவைக்குச் சாதகமாக்கிக் கொண்டவர்கள், அவர்களை வைத்தே தமது அரசியல் தந்திரோபாயத்தின் மூலமாக நகர்த்தத் தொடங்கினர். இதுவே, திட்டமிட்ட கலாசாரச் சீரழிவுக்கும் இன அழிவுக்கும் வைக்கப்பட்ட வேட்டாகவும்

**ந.ஐங்கரன்**
**நந்தாவில்**

அமைந்தது. அதாவது, தமிழ் மக்களது உணர்வுகளோடு ஒன்றிப்போயிருந்த விடுதலை வேட்கையையும், தேசப் பற்றினையும், நல்ல தலைமை மீது கொண்டிருந்த நம்பிக்கையினையும் திசைதிருப்புவதற்காகத் திட்டமிட்டு பொழுதுபோக்கு எனும் போர்வையிலும், தளர்ந்துபோன, நலிவடைந்துபோன தமிழ் உள்ளங்களுக்குத் தெம்பு தருகிறோம் எனக் கூறியவாறே பல சீரழிவுத் தனமைகளை உண்டுபண்ணக் கூடிய ஊடகங்களையும், அமைப்புக்களையும், நிலையங்களையும் உருவாக்கி சமூகக் கட்டுக்கோப்புக்களை ஆட்டங்காண வைப்பதற்கான வித்துக்களை விதைத்தனர். இவை காலத்தின் பதிவுகள் மூலம் நாம் அவதானித்த உண்மைகள் என்பதை மறுத்துவிட முடியாது.

இந்த விஷ வித்துக்களில் பல வேரோடு பிடுங்கப்பட்டாலும்கூட, இன்னும் சில விருட்சமாக முயற்சித்துக்கொண்டிருக்கின்றன என்பது சில நிகழ்வுகளின் புலப்பாடாகும். இந்த விஷ விருட்சங்களின்கீழ் விரும்பியோ விரும்பாமலோ இளைப்பாறும் சிலரே அண்மையில் யாழ்ப்பாண மண்ணில் திரையிடுவதற்குத் தடைசெய்யப்பட்ட 'பாய்ஸ்' திரைப்படத்தினைப் பார்க்க முடியாத ஏமாற்றத்திற்காக அப்பாவி வியாபாரிகளது வர்த்தக நிலையங்கள் மீது தமது வீரத்தினை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். எமது யாழ்ப்பாண இளைஞர்களிடம் இருக்கும் சாகசத் தன்மைகளில் ஒன்று, ஜடப் பொருள்கள் மீது தமது வீரத்தினை வெளிப்படுத்துதல். அதனையே அன்றும் சாட்டியிருக்கின்றார்கள். இவ்வாறு அவர்கள் கொதித்தெழுந்தமைக்குப் பல காரணங்கள் இருந்தாலுங்கூட, இதுவரை காலமும் விசாலமான வாழ்க்கை வாழ்ந்த அவர்களுக்கு சில கட்டுப்பாடுகளை ஏற்கவோ ஜீ




ணிக்கவோ முடியவில்லை என்பதே முக்கியமானதாகும். ஆனால், இதன் மூலம் ஒன்றை மட்டும் அவர்கள் தெளிவாகப் புலப்படுத்தியிருக்கிறார்கள். இதுவரை காலமும் வாழ்ந்த வாழ்க்கையைத் தொடர்ந்தும் தாம் பின்பற்றினால் தம்மால் தற்போது நடத்தப்பட்டதை விட பாரதூரமான விடயத்தினையே சமூகத்திற்கு வழங்கமுடியும் என்பதே அதுவாகும்.

இந்தத் திரைப்படத் தடைபற்றி பல்வேறு தரப்பினரும் தமது பல தரப்பட்ட அபிப்பிராயங்களையும் வெளியிட்டார்கள். அவற்றில் ஒன்று, "பெடியன் கொழும்பில் போய் 'பாய்ஸ்' பார்க்க மாட்டாங்களோ?" இவ்வாறு கூறுபவர்கள் இரண்டு விடயங்களை உணரவேண்டும். ஒன்று, சமூகச் சீரழிவுத் தன்மை தரக்கூடிய ஒரு விடயத்தினைப் பார்ப்பதற்காக 430 K.m. இற்கும் மேலான தூரத்தைக் கூடக் கடந்து செல்லக்கூடிய அளவுக்கு ஒரு சமூகம் உருவாக்கப்பட்டிருக்கிறது என்பது. இனியும் எம்மண்ணில் சமூகச் சீரழிவுகளோ அல்லது அதனைத் தூண்டக்கூடிய நடவடிக்கைகளோ அரங்கேறாது என்பது இரண்டாவதாகும்.

இறுதியாகத் தேவையற்றவற்றுக்கெல்லாம் கொதித்தெழுந்து தமது வீரத்தினை வெளிப்படுத்துபவர்களிடம் அன்பான வேண்டுகோள், உங்களது வீரங்களைக் காட்ட இன்னும் நம்மண்ணில் ஏராளம் இடங்களுண்டு. அவற்றில் ஒன்று, உங்களது பிரதேசத்தை உயர்பாதுகாப்பு வலயத்திலிருந்து மீட்டதில் காட்டுங்கள். அப்போது உங்களையும் சமூகம் ஒருமுறை சீர்தூக்கிப் பார்க்கும். சற்றுச் சிந்தித்துப் பாருங்கள் சமூகச் சீரழிவு தரும் ஒரு "பாய்ஸ்" திரைப்படத்திற்காகச் சீற்றமடைகிறீர்கள், உங்களது சமூகக் கட்டுமானப் பணிக்காக, தேசநலனுக்காக எத்தனை இளைஞர்கள் - உங்களது வார்த்தையில் கூறுவதாயின் எத்தனை "போய்ஸ்" (பேரானிகள்) களப்பலியானார்கள். அவர்கள் சுமந்த கனவுகளைச் சிந்தியுங்கள். அவற்றை நனவாக்குவதற்காக களம் நோக்கிச் செல்லாவிட்டாலும் பரவாயில்லை இலக்கு நோக்கிச் செல்லும் எமது தேசத்தின் பாதையில் கலாசாரச் சீரழிவுக் கண்ணிகளை விதைக்காதீர்கள். ☀

# போராட்டத்தைக் கைவிடுமாறு அமைச்சர் சுகாதார ஊழியர் சங்கத்துக்குக் கடிதம்

கொழும்பு,செப்.21

சுகாதார ஊழியர்கள் வேலை நிறுத்தத்தைக் கைவிட்டு, பேச்சுகள் மூலம் பிரச்சினையைத் தீர்க்க முன்வர வேண்டும் என சுகாதார அமைச்சர் பி.தயாரத்ன, சுகாதார ஊழியர்கள் சங்கத்துக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அவர் அக்கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சுகாதார ஊழியர்களின் சம்பள உயர்வு தொடர்பான கோரிக்கைகளுக்கு ஜூன் மாதம் 28 ஆம் திகதி சுகாதார அமைச்சில் நடந்த பேச்சுகளின்போது சுமுகமான தீர்வுகாணப்பட்டது. இருந்தபோதிலும், அந்த உடன்பாடுகளைக் கைவிட்டு, சுகாதார ஊழியர்கள் இன்று மீண்டும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளமை வேதனைக்குரியது.

நோயாளர்களின் நலனைக் கருத்திற்கொண்டு மனிதாபிமான அடிப்படையில் சுகாதார ஊழியர்கள் சேவைக்குத் திரும்பவேண்டும். சகல சுகாதார ஊழியர்களினதும் லீவுகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன என்று உத்தியோகபூர்வமான சுற்றுநிருபம் அனுப்பியிருந்தபோதிலும் அதைப் புறக்கணித்து வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருப்பது அர்த்தமற்றது.

வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் சமயாசமய ஊழியர்கள் மற்றும் தற்காலிக ஊழியர்கள் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்கள். எக்காரணம் கொண்டும் அவர்கள் மீண்டும் வேலையில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்கள் - இவ்வாறு அவர் அந்தக் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

# தமிழ்ப் பெண்கள் மீதான வல்லுறவு வழக்கு: இரண்டு எதிரிகள் விடுதலையாகினர்!

மன்னார் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு, மன்னார் பொலீஸ் நிலைய விசேட புலனாய்வுப் பிரிவினரால் சித்திரவதைக்குட்படுத்தப்பட்டு, பாலியல் வன்முறைக்குட்படுத்தப்பட்ட சின்னத்தம்பி சிவமணி, ஏகாம்பரம் விஜிகலா ஆகியோர் உயர் நீதிமன்றத்தில் தாக்கல்செய்த அடிப்படை மனித உரிமை மீறல் மனு, நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது வழக்கின் இரண்டாம், ஏழாம் எதிர் மனுதாரர்கள் விசாரணையிலிருந்து விடுவிக்கப்பட்டார்கள்.

பிரதம நீதியரசர் சரத் என்சில்வா, ஷிராணி பண்டாரநாயக்க, ஜே.ஏ. என்டி.சில்வா ஆகியோர் முன்னிலையில் இம்மனு, விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

சின்னத்தம்பி சிவமணி, ஏகாம்பரம் விஜிகலா, நந்தகுமார் ஆகியோர் 2001 ஆம் ஆண்டு மார்ச் 12 ஆம் திகதி மன்னாரில் உள்ள ஆசிகா ஹோட்டலில் தங்கியிருந்தபொழுது மன்னார் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இவர்களை மன்னார் விசேட புலனாய்வுப் பிரிவினிடம் ஒப்படைக்க அழைத்துச் சென்றபோது விஜிகலாவும் நந்தகுமாரும் வானிலிருந்து இறக்கப்பட்டு விசேட புலனாய்வுப் பிரிவினிடம் அழைத்து செல்லப்பட்டனர். ஆனால், சிவமணியும், விஜிகலாவின் இருவயதுச் சிறுமியும் வானில் வைக்கப்பட்டனர். சிறிது நேரத்தின் பின், விசேட புலனாய்வுப் பிரிவின் அதிகாரி ஒருவர் வானிலிருந்த சிறுமியை அழைத்துச் சென்றார்.

சிறிது நேரத்தின் பின், வானிலிருந்த சிவமணி புலனாய்வுப் பிரிவின் மற்றொரு அதிகாரியினால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டார். விஜிகலாவும் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டார்.

மாவட்ட வைத்திய அதிகாரியினால் இருவரும் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இருவரும் இருவேறு மனுக்களை உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்தனர்.

மனு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே 2 ஆம் எதிர் மனுதாரரான படை அதிகாரியும் 7 ஆவது எதிர் மனுதாரரான மன்னார் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியும் வழக்கு விசாரணைகளிலிருந்து விடுவிக்கப்பட்டனர். சம்பவங்களுக்கும் இவர்களுக்கும் எதுவிதத் தொடர்பும் இல்லாத காரணத்தாலேயே இவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

மீள்விசாரணை எதிர்வரும் நவம்பர் மாதம் 25 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

## பயிற்சிப் பட்டறை

தெல்லிப்பழை,செப்.21

இளவாலை திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் "இளைஞர் உருவாக்கம்" எனும் விசேட பயிற்சிப் பட்டறை இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2மணிக்கு மாரீசன்கூடல் றோ.க.த.க. பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இளவாலை, போயிட்டி, மாரீசன் கூடல் சகாயபுரம் பகுதியிலுள்ள இளைஞர், யுவதிகள் இந்த இளைஞர் உருவாக்கம் செயற்றிட்டப் பயிற்சியில் பங்குகொண்டு பயன்பெறுமாறு இளவாலை திருமறைக் கலாமன்றம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (ஓ-150)

## உளமார வாழ்த்துகின்றோம்

எமது செயலகத்தில் எம்முடன் கடமையாற்றியவரும் பின்னர் வவுனியா மதியாமடு மகா வித்தியாலயத்தில் ஆசிரியர்க் கடமை யாற்றியவருமான -

## செல்வி ஆரணி பரமசாமி

அவர்கள் இலங்கை நிர்வாக சேவைப் பரீட்சையில் சித்தியடைந்து நியமனம் பெற்றதையிட்டு மனதார வாழ்த்துவதுடன், அவர் மேலும் பல சிறப்புக்களைப் பெற்றுய்ய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

- தென்மராட்சி பிரதேச செயலக நண்பர்கள்.

(22808) (25-15-16)



## யாழ்ப்பாணம் - மாநகரசபை அறிவித்தல்

குருநகர் மாட்டுறைச்சிக்கடை இல. 2,5 நரிக்குன்று மாட்டி. கடை மற்றும் நாவாந்துறை மாட்டி. கடை இல. 2 என்பவற்றை 01-10-2003 முதல் 03 மாதங்களுக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்விகள் கோரப்பட்டுள்ளன.

முடிவு திகதி: 25-09-2003 ஆகும்.

மேலதிக விவரங்களை அலுவலகத்தில் அறியலாம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
18.09.2003

இ.இராமலிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

(எ/30279) (25-16-15)



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 13 - 08 - 1937



மறைவு 22 - 08 - 2003

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட

### அமரர் கிருஷ்ணர் சின்னராசா

அன்போடும் பண்போடும் வாழ்ந்திரே!
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (21.09.2003) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அந்நிகழ்வில் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்து கொள்வதோடு மற்றும் மதியபோசனத்திலும் பங்குபற்றி அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

விஸ்வகுல வீதி,
பருத்தித்துறை.

(22640) (25-14-16)

- குடும்பத்தினர்.


## முன்பள்ளி விளையாட்டு விழா

உரும்பிராய் தெற்கு கிராம அபிவிருத்திசங்க முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா இன்று காலை 9 மணிக்கு சங்க முன்றிலில் சமாதான நீதிவான் அ.க.த.கிருஷ்ணராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக நீர்வேலி பிரதேச சபையின் செயலாளர் க.வெங்கடாசலமும் கௌரவ விருந்தினராக முன்பள்ளிக் கல்வி உதவிக்கல்வி பணிப்பாளர் திருமதி லோ. யோகராசாவும், சிறப்பு விருந்தினர்களாக கிராம அபிவிருத்தி உத்தி யோகத்தர் ஜி.ரி ஞானசேகரவேல், ஜெய்கன் நிறுவனப் பொறுப்பாளர் க. சண்முகநாதன் ஆகியோரும் கலந்துகொள்வர். (எ-10)

## ஊனமுற்றோருக்கு பயிற்சி வழங்க வடமராட்சியில் 30 தொண்டர்கள்

ஊனமுற்றவர்களுக்கு சமுதாய மட்டத்தில் அவர்களுக்கு ஏற்றவிதத்தில் புனர்வாழ்வு அளிப்பதற்கு சமூக சேவைகள் அமைச்சின் அனுசரணையுடன் வடமராட்சி பிரதேசத்தில் 30 பேர் தொண்டர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

வடமராட்சி கிழக்கு, வடமராட்சி வடக்கு, வடமராட்சி தெற்கு மேற்கு ஆகிய மூன்று பிரதேச செயலர் பிரிவுகளில் இருந்து தலா 10 பேர் வீதம் 30 தொண்டர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்றும், இவர்களுக்கான பயிற்சிப் பட்டறை அடுத்த மாதம் 10 திகதி தொடக்கம் 10 தினங்களுக்கு பருத்தித்துறை அத்தியடி இந்து இளைஞர் மன்றத்தில் நடைபெறும் என்றும் பருத்தித்துறை சமூக சேவை அலுவலர் எஸ்.இராசரத்தினம் தெரிவித்தார். (எ-173)


கணனியில் எழுத்துக்கள்
வியாபார சின்னங்கள்
வடிவமைத்து
றபர் ஸ்ராம்ப் செய்து
கொள்ள நாட
வேண்டிய இடம்

ONE HOUR
NYLON STAMPS
By Computerized words in all languages with the TRADE MARK of your firm
Pillaiyar press Jaffna

பிள்ளையார் அச்சகம்,
நல்லூர். T.P. 222 6722



## தொழிலாளர் தேவை

நூறு வருடங்களுக்கு மேற்பட்ட Printing அனுபவத்தைக் கொண்ட அமெரிக்கன் சிலோன் மிஷன் அச்சகம் மிக விரைவில் புதிய தொழில் நுட்பங்களுடன் கூடிய சேவையை மீண்டும் ஆரம்பிக்கவுள்ளது. எமக்கு

1. ஹைடின் பேக் மெஹினுக்கான Offset Machine Operator
2. கொம்பியூட்டர் ரைப்செட்டர்
3. பைண்டர்ஸ்

அச்சகத்தில் வேலை செய்த அனுபவமும் கல்வித்தகைமையும் உள்ள தொழிலாளர்களை எதிர்பார்க்கிறோம்.

தொடர்புகளுக்கு:

முகாமையாளர்,
அமெரிக்கன் சிலோன் மிஷன் அச்சகம்,
464, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். தொலைபேசி: 021 - 2223382, 0712 - 512601

(22787) (25-14-16)



## Nation Builders Pvt Ltd

(தேச நிர்மாணிகள்)

கீழ்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

பொறியியலாளர்கள் B.Sc. Eng.
தொழில்நுட்ப உதவியாளர்கள்
படவரைஞர்கள்
மேசன்
தச்சுத் தொழிலாளிகள்

தகுதி, அனுபவம் உடையவர்களிடம் இருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.

கீழ்வரும் விலாசத்துக்கு 30-09-2003அம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும்.

**The Manager,**
**Nation Builders (Pvt) Ltd**
**V.R.T. Builders,**
**Kandy Road,**
**Kilinochchi.**

(சி-30267) (21-14-16)



## கண்ணீர் அஞ்சலி

மலர்வு 18 - 04 - 1920



உதிர்வு 17 - 09 - 2003

### வல்லிபுரம் நாகமணி

எமது குடும்பத் தலைவர் வல்லிபுரம் நாகமணி அவர்கள் 17.09.2003 புதன்கிழமை அன்று காலமானதையிட்டு நாம் மிகவும் மனம்வருந்துகின்றோம். அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பித்து அவரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

சூராவத்தை,
சுன்னாகம்.

(22783) (25-14-16)

-- குடும்பத்தினர்.



## மரண அறிவித்தல்

### வல்லிபுரம் நாகமணி

ஏழாலை தெற்கு, மயிலங்காட்டைப் பிறப்பிடமாகக் கொண்ட வல்லிபுரம் நாகமணி அவர்கள் கடந்த 17.09.2003 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் கனகம்மாவின் அன்புக் கணவரும் துரைசிங்கம் (கொழும்பு), காலஞ்சென்ற குணசிங்கம் மற்றும் சிங்கராஜா(பிரான்ஸ்), யோகராசா(கொழும்பு), தெய்வேந்திரம்(கொழும்பு), செல்வராணி, யோகமலர், புஸ்பராணி ஆகியோரின் அன்புத் தந்தையும் சின்னத்துரை, மகேந்திரம் அருமைத்துரை, சுகீர்தா, ராதாமணி, றஜனி, செல்வம் ஆகியோரின் அன்பு மாமனாரும் தீபா, சுடா, தனுஷன், பிருந்தா, றுக்ஷா, லக்சி, கிம்ஷா, புறவீன், சக்ஷி, தீசன், வவா, மதி, சுதர்ஷன், சுஜனா, சோபனா, கல்பனா, ஜெனகா, தனு, நிரோ, தர்சி, தர்மினி ஆகியோரின் அன்புப் பேரனும் வேனுஷன் என்பவரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.09.2003) ஞாயிற்றுக் கிழமை 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக கிரியைக்காக கோத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகிறோம்.

சூராவத்தை,
சுன்னாகம்.

(22784) (25-14-16)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்



## யாழ். குடாநாட்டு மக்களே!

உங்களுக்கொரு நற்செய்தி!!

தரமான சுவையான உணவுத் தயாரிப்புக்கு ஏற்ற நல்ல எண்ணெய் இப்போது விற்பனைக்கு வந்துள்ளது! அதுதான்

Vimal BRAND
Vegetable Oil & Coconut Oil



* தயாரிப்புகள் அனைத்தும் சிங்கப்பூரிலேயே மேற்கொள்ளப்பட்டது.
* கொள்கலன்களில் உள்ள எண்ணெயும் பொதியில் உள்ள எண்ணெயும் தரம் ஒன்று.
* பொதியில் அடைக்கப்பட்ட எண்ணெயை மலிவு விலையில் பெறலாம்.

விமல் Vimal BRAND

மரக்கறி எண்ணெய்
தேங்காய் எண்ணெய்
சூரியகாந்தி எண்ணெய்
செயற்கை வினாகிரி
தரம் வாய்ந்தவை!

ஒருமுறை வாங்கி உபயோகித்துப் பாருங்கள்! அதன் உண்மையான தரம் விளங்கும்.

ஏக விநியோகஸ்த்தர்:

AMT Transport Service

இருபாலைச் சந்தி,
பருத்தித்துறை வீதி,
இருபாலை.
☎: 021 222 5784

UTHAYAN Graphics (22138)

# மானம் காத்த மறக்குடி வேந்தன்!



1

ஆக்கம் : புலவர் ம.பார்வதிநாதசிவம்

தமிழர் வீரம் இதுவெனக் காட்டியே
தங்கள் ஆற்றலை நின்று விளக்கியோர்
அமிழ்தை ஒத்த தமிழினைத் தங்களின்
ஆவிதன்னிலும் மேலென எண்ணியோர்
இமயம் தொட்டுக்குமரி வரையிலும்
இருந்ததான பரப்பில் தமிழினம்
அமையும் பண்பினில் ஆற்றலில் மேலெனும்
அற்புதத்தினைப் பொற்புறக் காட்டியோர்!

மானங்காத்திடப் போரினைச் செய்குவார்
மண்ணைக் காக்க உயிரையும் நல்குவார்
ஞானம் காக்கும் நூல் கற்றிடல் செய்குவார்
நல்ல உள்ளத்தில் தெய்வம் இருத்துவார்
தானம் தர்மம் கொடையெனும் யாவுமே
தக்கவாறு புரிந்திடும் செய்கையார்
வானமே வியக்கும் தமிழ் மாதினை
வையமீதெந்தநாளும் வணங்குவார்!

எதிரதாகவே காக்கும் அறிவினார்
எந்தத்தீங்கையும் நீக்கும் இயல்பினார்
அதிரமாறுடன் தாக்கும் படையினார்
அன்பினால் புவி நோக்கும் இயல்பினார்
புதியதாய படைபல ஆக்குவார்
புவியின் மீதில் அறத்தை மறக்கிலார்
மதுரமான தமிழை உயிரினும்
மேலதாக மதிக்கும் குணத்தினார்!

ஆய்ந்துகூறும் அமைச்சரைக் கொண்டவர்
அறிவு சொல் பெரியோர் துணைக் கொண்டவர்
ஓய்ந்துபோதல் சிறிதும் மனங்கொளார்
உத்தமப் பணியாளரைக் கொண்டவர்
வேந்தர் வந்துதிறை கொடுத்தாணையை
வேண்டுகின்றதோர் மேன்மை படைத்தவர்
தீந்தமிழ்ப் பணி தெய்வத்திருப்பணி
செய்து வையப்புகழினைப் பெற்றவர்!

கல்வி வேந்தர்க்குக் கண்ணெனக் கொண்டவர்
கருது கேள்வி அறிவிற் சிறந்தவர்
பல்வகைக் கலை தாமும் பயின்றவர்
பாடல் ஆடல் நிதமும் நயப்பவர்
நல்லவே என்றும் நாடிடும் சிந்தையர்
நானிலம் என்றும் போற்றிடும் விந்தையர்
எல்லையில் தமிழ்த்தாயின் பதங்களே
என்றும் போற்றி வணங்கும் குணத்தினார்!

மண்ணுளோர் தங்கள் சேயரென்றாண்டவர்
மாறினோர்கட்கு நோயென ஆனவர்
பண்ணினாற் செவிக்கின்பம் பயந்திடும்
பாணர்க்கோபல் பரிசுகள் ஈந்தவர்
திண்மையாகிய தோளினைக்கொண்டவர்
தீரர் தங்கட்குத்தீரரே ஆனவர்
எண்ணுங்கால் உளம் எங்கும் இனித்திடும்
எங்கள் தாய்த்தமிழ் போற்றிச் சிறந்தவர்!

**வளரும்....**

தமிழைப் பழித்தனர் கனக-வியசர் என்பதறிந்த சேரன் செங்கட்டுவன்வட நாடு சென்று கனக-வியசரை வென்று கற்புத் தெய்வம் கண்ணகிக்குச் சிலை அமைப்பதற்கு கனக - வியசரைக் கொண்டு கல் சுமந்து வரச்செய்தான். சேரன் செங்கட்டுவனின் தமிழ்ப்பற்று-தமிழ் இனப்பற்று, நாட்டுப் பற்று என்றும் போற்றப்பட வேண்டியவை. சேரன் செங்கட்டுவனின் வீரப் பொரைப் போற்றுவது மானங்காத்த மறக்குடி வேந்தன் என்ற இக்குறுங்காவியம்.

# கவிதைக் கணைங்கள்

## உடன் பிறப்பு

என்னையது ஆக்கிரமித்தபோது
பாலைக் கடைகளும் உடைந்திருக்கிறது
நான் சோகங்களில் கவிழ்ந்திருந்த நாளில்
தோள் தட்டி ஆறுதலளித்திருக்கிறது
அதன் ஆக்கிரமிப்பினால்
நன்மைகளும் நடந்தேறியிருக்கின்றன
முடியாதென்ற வார்த்தைகளைத் தகர்த்து
முயன்று பாரென்று
பின்னின்று தெம்பு தரும்
நிலையதற்கிருக்கிறது.
என்னைக் கட்டுப்படுத்தும் அது
என்னிறுதி மூச்சிருக்கும் வரை
உடனிருக்கப் போகிறது.
என் வெற்றி அதன் வெற்றியாய்த்தான்
இருக்கும்.
அதன் பிடியிலிருந்து நானும்
என் பிடியிலிருந்து அதுவும்
விடுபட்டதில்லை.
எனக்கும் அதற்கும் உடனான உறவை
வெட்டுவதற்கும் மூன்றாங் கரப்பில்லை.
அதுவாக நானும்,
நானாக அதுவும் இருக்கப் போகிறது
மொத்தத்திலது என்னோடு பிறந்த
உடன் பிறப்புத்தான்.

கி.அ. தில்லைதாசன்

## தியாகம்

பூ பிறந்த நேரத்தில்
மொட்டொன்று மடிந்தது
அதற்காக,
அரும்புகள் மொட்டாக
மறுத்ததுமில்லை....
மொட்டுக்கள் பூவாக
மறுத்ததுமில்லை...
ஆம்....
இவைகளுக்குள்
உள்ள ஒற்றுமை
இன்னுமா புரியவில்லை.

K.K. அன்ரன்
மீசாலை.

## புன்னகை

பணம் தேவையில்லை
பெற்றுக்கொள்ள

கொடுப்பவரை
வாட்டாமல்
கொள்பவரை
வளப்படுத்தும்.

சில நொடிகளில்
மலர்ந்து மறைந்தாலும்
சில சமயங்களில்
கலையாது
நிலையாக
நினைவில் நிற்கும்.

வேண்டாம் என்று
விலக்கி விடுமளவிற்கு
வசதி படைத்தவர் இந்த
வையகத்தில் எவருமில்லை.

தெரியாமல் திருடவோ
விலை பேசி விற்கவோ
முடியாது.

தானாகத் தருவதே
அதன் தரம்.
ஆனாலும் அதன்
ஆக்கங்கள் அதிகம்.
உடைந்துபோன
உள்ளங்களுக்கு
உந்துகோல்.

என்றேனும்
யாரேனும்
நன்றியாய்
ஓர் புன்னகையை
தர மறுத்தால்
தாராள மனதோடு
அதை
அவர்களுக்கு
நீங்கள் கொடுங்கள்
காரணம்
புன்னகை அதிகம் தேவைப்படுவது
அதை
தர மறுப்பவர்களுக்குத்தான்.

சீனக் கவிதை
தமிழில் மி.மதிராஜ்.

## வெறுமை

தெளிவிலாக் கனவுகள்...
தொடுவானமாய் நீள்கையிலும்....
கற்பனை எண்ணங்கள்.....
யதார்த்தத்திலிருந்து விலகையிலும்....
கண்ணாடி உறவுகள்......
காயப்பட்டு உடைகையிலும்.....
மனிதனைத் தனிமைக்குள் தள்ளி...
நொடிக்குள் தளர்த்திடச் செய்திடும்.....
இதயத்து வெற்றிடம் தான்.....
வெறுமை!

சி.சிவகௌரி
மட்டுவில்.

## வேஷங்கள்



பலவிதமான
உனது வேஷங்கள்....
பாதியிலேயே அவிழ
பிரமித்துப் போனேன்
மனிதனென்ற முகத்தையே
மறைத்தது உன் வேஷம்
அசிங்கங்களை மட்டுமே
வரவுகளாகக் கொண்டு
பேய்த்தனமாயிருந்தது
உன்வேசம்.
என் கற்பனைக்குக் கூட
எட்டாத
உனது வேஷங்களாய்
எத்தனையோ விம்பங்கள்
காணாமற் போயின.
உன்னையே மறைத்த
அந்த வேஷங்களுள்
உனது மிருகக் குணங்களே
பளிச்செனத் தெரிந்தன.
இன்று நீ
வேசங்களையெல்லாம்
உதறிவிட்டு
மனிதனென்று கூறுகிறாய்.
உனது வேஷங்களுக்குள்ளேயே
உன் மனித முகம் கூட
காணாமல் போயிருப்பதை
அறியாமலேயே

அ. சூரியன்
ஊறணி

நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு, இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால் இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா?

இதோ பாவியுங்கள்!

*கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும், கறுப்பாகவும், அழகாகவும் வளரச் செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட*

**சித்தாரா பொன்னாங்காணி தைலம்**

யாழ்.குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road,
Chilaw.
(Reg.No.:-6382)AR/PR/No.-228

யாழ். மாவட்ட
ஏக விநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல. 288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பேசி இல.-021-222-2567

(குறிப்பு: சத்திரச்சந்திக்கு அண்மையில்)

(29975)


# கல்விப் பேரவை உறுப்பினர் கூட்டம்

யாழ்ப்பாணம்,செப்.21

யாழ். மாவட்ட கல்வி மேம்பாட்டு பேரவை உறுப்பினர்களுக்கான கூட்டம் இன்று காலை 9.30 மணிக்கு யாழ். கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (எ-10)

## செயலமர்வு

தென்மராட்சி,செப்.21

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 10, 11 ஆகிய வகுப்புகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான தமிழ், கணிதம், சமூகக் கல்வி ஆகிய பாடங்களுக்குரிய பாடசாலை மட்டக் கணிப்பீடு தொடர்பாக வரணி ஆசிரிய நிலையத்தினர் நடத்தும் தொடருறு கல்விச் செயலமர்வுகள் எதிர்வரும் 23 ஆம் திகதி முதல் மூன்று தினங்கள் காலை 8 மணி தொடக்கம் வரணி ஆசிரியர் நிலையத்தில் நடைபெறவுள்ளது.

23 ஆம் திகதி தமிழ்ப் பாடமும் 24ஆம் திகதி கணித பாடமும், 25ஆம திகதி சமூகக்கல்வி பாடமும் செயலமர்வில் மேற்கொள்ளப்படுமென வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (எ-117)

## தென்மராட்சி ஆசிரியர்களுக்கு!

தென்மராட்சி,செப்.21

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் தரம் மூன்றில் கற்பிக்கும் ஆசிரியர்ளுக்குக்கான "தரம் 3 மாகாண மட்டப் பரீட்சை" தொடர்பான செயலமர்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

தரம் 3 வகுப்பு மாணவர்களுக்கு கணிதம், தமிழ்மொழி ஆகிய பாடங்களில் செயற்பாடு, வாய்மொழி, எழுத்து ஆகிய முறைகளில் மாகாண மட்டத்தில் மதிப்பீடுகளை மேற்கொள்வது தொடர்பாக செயலமர்வு நடத்தப்படவுள்ளதால் தரம் 3வகுப்புகளில் கற்பிக்கும் ஆசிரியர்களைத் தவறாது பங்குபற்றுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ஒ-117)


# பகிரங்க விரிவுரையும் குழுக் கலந்துரையாடலும்

**விடயம்: சமஷ்டியும் சுயநிர்ணயத்திற்கான உரிமையும்**

**வழங்குபவர்:**

**பேராசிரியர் கலாநிதி தோமஸ் பிளெய்னர்**
(அரசியல் யாப்பு மற்றும் நிர்வாகச் சட்டத்துறைப் பேராசிரியரும், சமஷ்டிக்கான நிறுவனத்தின் பணிப்பாளரும் - பிறீபேர்க் பல்கலைக்கழகம் - சுவிற்ஸர்லாந்து)

**குழுக்கலந்துரையாடலில் பங்குபற்றுவோர்:**

1) **கலாநிதி வி.நித்தியானந்தன்**
(சிரேஷ்ட விரிவுரையாளர், பொருளியற்றுறை, யாழ்.பல்கலைக்கழகம்)

2) **திரு.கே.ரி.கணேசலிங்கம்**
(விரிவுரையாளர், அரசியல் சமுகவியல் துறை, யாழ்.பல்கலைக்கழகம்)

3) **திரு.சி.கோடீஸ்வரன்**
(சட்டத்தரணி, யாழ்ப்பாணம்)

குறிப்பு: தொடர்ந்து பகிரங்க கலந்துரையாடல் இடம்பெறும்.

இடம்: **யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடம்**

காலம்: **22-09-2003** திங்கட்கிழமை மாலை 3.00 - 5.00

***ஆர்வலர் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.***

குறிப்பு: தமிழில் இருந்து ஆங்கிலத்திற்கும் ஆங்கிலத்தில் இருந்து தமிழுக்கும் மொழிபெயர்பு வசதிகள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**ஒருங்கமைப்பாளர்கள்:**

***யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் பிரிவு D சமுக விஞ்ஞானம்.***

(22814) (21-15-18)



**JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY**
**VADDUKODDAI, SRI LANKA**

**The Following Computer Courses to Commence from first week October 2003.**

**Diploma in Computer Programming & Data Processing**
- System Analyze and Design
- Data Base Management System
- Fundamentals of Computer Technology
- Data Processing
- C/C++
- Java
- Oracle
- Visual Basic
- Application Packages

**One Year (Full time Course)**
**Fees: 4,050/=**

**Certificate Courses in Microsoft Office**
- MS Word
- MS Excel
- MS Access
- MS Power Point

**Duration :3-4 months**
**Fees: 2,500/=**

**Certificate Courses in Printing Technology**
- Adobe PageMaker
- Adobe Photo Shop
- CorelDraw

**Duration : 3-4 months**
**Fees:2,500/=**

**Certificate Courses**
- Java, Oracle, C++, Visual Basic
- Computer Hardware

**Duration : 3-4 months**
**Fees: 1,000/=**

**Facilities**
- Unlimited practical hrs.
- Online classes & A/C lecture halls & lab.
- Individual attention will be taken.
- Library.
- Hostel.
- Sports.

**Note : - Our Diplomas Guide the Students to the Examination of the following bodies.**
- BACHELOR OF INFORMATION TECHNOLOGY (BIT)
- AUSTRALIAN COMPUTER SOCIETY (ACS)
- BRITISH COMPUTER SOCIETY (BCS)

***Application forms are available at:***
**Jaffna College Institute of Technology, Vaddukoddai**
**Undergraduate department, Jaffna College, Hospital Road, (Near Commercial Bank) Jaffna.**

Director,
**Jaffna College Institute of Technology**
**Vaddukoddai,**
Sri Lanka.

Tel:Phone: 070-213139 Email:jcit@sltnet.lk

We WelCome to the JCIT for a Fruitful Career


C/30280



வனிலா சுவையூட்டப்பட்டது

# Action
Nutritional Food Drink

போஷாக்கு நிறைந்த பானம்







ஒவ்வொரு 100g *Action* ஆனது பின்வரும் போஷணைகளை வழங்குகின்றது

| | | |
|---|---|---|
| சக்தி | 383.82 | Kcal |
| புரதம் | 20.9 | g |
| கொழுப்பு | 6.6 | g |
| காபோவைதரேற்று | 63 | g |
| மினரல் ஆஷ்(Ash) | 4 | g |
| ஈரப்பற்று | 4 | g |
| **கனியுப்புக்கள்** | | |
| கல்சியம் | 1200 | mg |
| பொசுபரசு | 624 | mg |
| மகனீசியம் | 74.85 | mg |
| சோடியம் | 348 | mg |
| பொற்றாசியம் | 1025 | mg |
| குளோரைட்டு | 633 | mg |
| நாகம் | 15 | mg |
| இரும்பு | 15 | mg |
| செப்பு | 1.5 | mg |
| மங்கனீசு | 2 | mg |
| அயடீன் | 100 | mcg |
| **விற்றமின்கள்** | | |
| விற்றமின் A | 2500 | iu |
| விற்றமின் D | 100 | iu |
| விற்றமின் E | 10 | iu |
| விற்றமின் K1 | 60 | mcg |
| விற்றமின் C | 100 | mg |
| விற்றமின் B1 | 2.2 | mg |
| விற்றமின் B2 | 2.2 | mg |
| விற்றமின் B6 | 2 | mg |
| விற்றமின் B12 | 2.5 | mcg |
| நயசினமைட் | 22 | mg |
| பன்டோதனிக்கமிலம் | 10 | mg |
| போலிக்கமிலம் | 200 | mcg |
| பயோடின் | 100 | mcg |
| பீற்றா கரோட்டின் | 1 | mg |

***Action*** **இன் போஷணை அனுகூலங்கள்**

*Action* ஆனது 11 கனியுப்புக்கள், 13 விட்டமின்கள், புரதம், காபோவைதிரேற்று, கொழுப்பு அடங்கலாக 27 அத்தியாவசிய போஷணை பதார்த்தங்களை முழுக்குடும்பத்திற்கும் (1 வயதிற்கு மேற்பட்ட பிள்ளைகள்) வழங்குகின்றது. *Action* பீற்றா கரோட்டினையும் கொண்டுள்ளது.

**தயாரிக்கும் முறை**

சூடாகவோ குளிர்பானமாகவோ நீங்கள் விரும்பியவாறு பருகலாம்

1) நிரம்பிய இரண்டு கரண்டிகள் *Action* இனை 240ml டம்ளரில் போடவும்.
2) அதற்கு சிறிதளவு இளம் சூடான நீர் சேர்த்து கலக்கவும்.
3) மேலதிக நீர் சூடாகவோ, குளிராகவோ தேவையான அளவு சேர்த்து சுவையான பானத்தை தயாரித்துக் கொள்ளவும்.

Manufactured by :
**Astron Limited,**
688, Galle Road, Ratmalana, Sri Lanka.
Tel: 2636741 Fax: 2636173 E-mail: astron@astron.lk

| | ரா. | | சனி |
|---|---|---|---|
| செவ். | இராசிச் சக்கரம் | | சந். |
| | | | புதன் வியா. |
| | | கே. | சூ. ▲ வெ. |

# இந்த வார இராசி பலன்

## 21.09.2003 - 27.09.2003

### மாற்றம்:

புனர்பூசம் 4 ஆம் பாதம், சந்திரன் கடகத்தில் நிற்கும்.

உலக நாடுகள் உதவிகள் செய்யும். தொடர்ந்து பேச்சு நடத்தத் தூண்டியபடி இருக்கும். இந்தியா மறைமுகமாக உதவிகள் செய்யும். இந்தியாவில் வன்முறைகள் அதிகரிக்கும். மத்திய கிழக்கு நாடுகளில் அமெரிக்க எதிர்ப்புக் கொள்கைகள் வலுப்பெறும். வன்செயல்களில் மாற்றங்களும் அழிவுகளும் ஏற்படும். இந்து பசுபிக்சமுத்திரங்களை அண்டிய நாடுகளில் காற்றழுத்தம் அதிகரித்து மழை பெய்ய வாய்ப்பு உண்டு எனக் கிரக நிலைகள் காட்டுகின்றன.

### மேடம்

திடீர் கோபம், நீதி கேட்பீர்கள். கொடுத்தது வராது. பொதுச் சேவையில் புகழ் வரும். தலை வருத்தம், கண் வருத்தம் வரும். பொருள் கிட்டும். ஆடை, ஆபரணம் சேரும், காசு கிடைக்கும், வியாபாரம் சிறக்கும். மருந்து வியாபாரம் அதிகரிக்கும். போக்குவரத்துத் துறையினர் சிறப்படைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்:- புதன், வியாழன்.*

### இடபம்

ஏழைகளுக்கு தன்மானம் அதிகம். அதற்காக சிலர் பலரை ஏமாற்றமாட்டார்கள் எனச் சொல்ல முடியாது. தொழிலில் நேர்மையாக இருக்க முயலுங்கள். வாங்கியதைக் கொடுங்கள். பிடிவாதம் அதிகம். பிரயாணத்தைக் கட்டுப்படுத்துங்கள். பொருள் வரவு கொடுக்கும். இடுப்பு வலி, நெஞ்சு நோ, வாய்வுத் தொல்லை கொடுக்கும். வியாபாரிகள், குருத்தொழில் செய்பவர்கள் அதிக இலாபம் அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்கள்:- புதன், வியாழன்.*

### மிதுனம்

எதிர்ப்பாளார் கோவிப்பார்கள். தொழில் ஸ்தானத்தில் போட்டிகள் நண்பர்களிடையே ஏற்பட்டு வேதனைதரும். சகோதரர்களுக்கு உதவிகள் செய்வீர்கள். அரசியல்வாதிகள் உதவிகள் தருவர். கை, கால் தாக்கம் கொடுக்கும், இடமாற்றங்கள் நன்மை தரும். வாத விறைப்பு கொடுக்கும் உஷ்ண, பித்தரோகங்களும் கொடுக்கும். செய்தித் துறை, குருத்தொழில் தொடர்பானவர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்கள்:- புதன், வியாழன்.*

### கடகம்

காலை ஓர் எண்ணம், மாலை ஓர் எண்ணம் மனம் மாறும். தொழில் ஸ்தானத்தில் போட்டிகள் வரும். நல்லவர்கள் நியாயம் கேட்பார்கள். இடமாற்றங்கள் வரும். பொருள் செலவுகள் ஏற்படும். நண்பர்கள் உதவிகள் செய்வார்கள். எதிர்ப்பாலார்கள் விரோதிப்பார்கள். நரம்பு நோய், பித்த ரோகம், சலரோகம் போன்ற வருத்தங்கள் வரும். அரசியல் துறை, குருத்துறை போன்ற துறையினர்கள் அதிக நன்மை அடைவர்.

*அதிர்ஷ்ட நாள்கள்:- புதன், வியாழன்.*

### சிங்கம்

கடும் போக்கு, நண்பர்களின் உதவி கிடைக்கும். குடும்பத்தில் அபிப்பிராய பேதம் வரும். புதிய முயற்சி வெற்றியை உதயத்தில் நிற்கும். புதனும் வியாழனும் தருவார்கள். தொழில் ஸ்தானத்தில் புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள். வருவாய்க்கு மேல் செலவு வரும். கட்டுப்பாடுகள் ஓரளவு நன்மை தரும். வாத உளைச்சல், கண் கலக்கம் தரலாம். குருத்துறை, நிர்வாகத் துறையினர் செய்தித் தொடர்பாளர்கள் நன்மை அடைவர்.

*அதிர்ஷ்டநாள்கள்: புதன், வியாழன்.*

### கன்னி

விதியின் வேகம் கிரகங்களால் கணக்கிடப்படும். மனிதர்கள் எந்தக் கெட்டித்தனத்தை பேசுவது? பிரயாணங்கள் ஏற்படலாம். உதயத்தில் சூரியன் நிற்பதனால் மனதில் உள்ளதை அடிக்கடி வெளிப்படுத்தியபடி இருப்பீர்கள். காணி, பூமி செலவுகள் வரும். கால் பிடிப்பு, உஷ்ணத்தால் தாக்கங்கள், வாய்வு வருத்தங்கள் கொடுக்கும். வியாபாரிகள் குருத்துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: புதன், வியாழன்.*

### துலாம்

பிரயாணச் சிந்தை. பொருளுக்காக அலைச்சல். ஆனால் பொருள் வரவு கொடுக்கும். எதிர்ப்பாலாருக்கு உதவி செய்தல். இடமாற்றம் ஒன்று திடீரென வரும். வேஷத்தால் பழைய வேலைகளை ஓரளவு செயற்படுத்துவீர்கள். குருத்துறை, பிரயாணத்துறை, சந்தைத் துறையினர் நன்மை அடைவார்கள். உடல் வருத்தத்துக்கு வைத்தியம் செய்யவும்.

*அதிர்ஷ்டநாள்கள்: புதன், வியாழன்.*

### விருச்சிகம்

காரணமின்றிக் கோவிப்பீர்கள். பொருள் வரவு கொடுக்கும். தூர தேசத்திற்கு தொடர்பு ஏற்படும். செய்திகள் வரும். உணவில் கட்டுப்பாடு, இடமாற்றங்கள் கொடுக்கும். சல வருத்தம், களைப்பு, தொண்டை நோ என வந்து போகும். பழைமை பேசி புதுமையிடம் பேச்சு வாங்க நேரிடும். வியாபாரிகள், சட்டத்துறையினர்கள், தெழில்நுட்பத்துறையினர் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்: புதன்.*

### தனுசு

உதயத்தைச் சனி பார்ப்பதனால் நினைப்பதெல்லாம் நிறைவேறாது. பிறரைப் பேசுவீர்கள் பொருள்வரவு, தூரத்துச் செய்திகள் வரும். காலில் நோ, பித்த மயக்கம், உஷ்ணபீடைகள் வரும். ரீ.வி. வீடியோ வருமானத்துறையினர், செய்தித் துறையினர், பிரயாணத்துறையினர், குருபீடத்தவர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: ஞாயிறு, புதன்.*

### மகரம்

பிடிவாதத்தனம், சகோதர உதவிகள் கிடைத்தல், கற்பனை வளம். தூரதேசச் செய்திகள், எதிர்ப்பாலாரின் உதவிகள் கிடைத்தல், காலில் வருத்தம், சளி, உஷ்ணபீடைகள், வயிற்று நோ வரல், பொருள் வரவு திடீரென சிலருக்கு வர இடமுண்டு. ஆராட்சித் துறையினர் இலக்கியக் கற்பனை வளமுள்ளவர்கள், குரு அம்சமானவர்கள் நன்மை அடைவர்கள். *அதிர்ஷ்ட நாள்கள்:- ஞாயிறு, வியாழன்.*

### கும்பம்

ஏமாற்றங்கள் ஏற்படல், இடமாற்றங்கள் வரல், புதியவை புதியவரிடமிருந்து கிடைத்தல். தொழில் சிறப்பு, பொருள் வரவு சுமாராகும். பெரியவர்கள் உதவிகள், காணிபூமிச் சிறப்பு என்பன கிடைத்தல். காலில் வருத்தம், சளித் தொல்லை, தலை சுற்றுதல் என்பன கொடுக்கும். குருத்துறையினர், வியாபாரிகள், அரசியல்வாதிகள் நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: ஞாயிறு, வியாழன்.*

### மீனம்

தொழில் சிறப்பு. வருமானம் அதிகரிக்கும். இனஜனக் கொண்டாட்டம். வீடு வாகன யோகம். நண்பர்கள் உதவி செய்தல், தூரத்து நற் செய்திகள், பிடிவாதம், புத்திரர் அல்லது சகோதரர்களுக்கு மாற்றங்கள் ஏற்படுதல். வாத உளைவு, சளித் தொல்லை, வயிற்று நோ என்பன கொடுத்தல். வியாபாரிகள், வாசனைப் பொருள் வியாபாரத்துறை, ஆஸ்பத்திரி வேலை செய்பவர்களுக்கு நல்ல மாற்றங்கள் முன்னேற்றங்கள் கொடுக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்: ஞாயிறு, வியாழன்.*

**மகாதேவா ஜோதிடம்**

# பகுத்தறிவாளனாக வாழ்ந்த அதிபர் சிவபாதசுந்தரம்

'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்.'

என்ற பொய்யாமொழியின் கருத்துப்படி வாழ்ந்த அறிவுச்சுடர், பகுத்தறிவாளன், பண்பின் சிகரமாக வாழ்ந்து இறையெய்திய அமரர் சின்னத்தம்பர் சிவபாதசுந்தரம் அவர்கள்.

1916-05-01ஆம் திகதி அழகு தமிழும் அமுத இசையும் மிளிரும் அளவெட்டியில் பிறந்தார். அவர் சிறு வயதிலேயே கல்வியில் திறமைசாலியாகத் திகழ்ந்தார். அதன் பயனாக ஆங்கிலத்தில் முதிர்ச்சி பெற்று முதுமாணிப் (MA) பட்டமபெற முதன் முதலாக புலமைப்பரிசில் பெற்று சீமைக்குச் சென்று கேம்பிறிஜ் பல்கலைக்கழகத்தில் வெகு சிறப்பாகப் படித்து முதன்மையாக முதுமாணிப் பட்டம் பெற்று ஈழத் தமிழகத்திற்கு பெருமை தேடித்தந்தார். வல்லான் வகுத்த வாய்க்காலாக தன் வாழ்வில் படிப்பிற்கும் தொழிலை ஆரம்பிக்க எண்ணி ஆசிரியத்தொழிலைத் தொடங்கினார். ஆங்கிலம போலவே தமிழிலும் பாண்டித்தியம் பெற்றார் என்பதும உண்மை.



சமூக, சமய, கல்வி, விளையாட்டுகளின் முன்னேற்றத்திற்கும் அரும்பாடுபட்ட மேதை. கல்லூரியில் அமைந்துள்ள பரமேஸ்வரன் ஆலயத்தில் தினமும், பூசை விழாக்களை சிறப்பாக நடத்தி வந்தார். தினமும் மாணவர்கள் காலை வழிபட்டு வந்துதான் கல்வியை கற்க தொடங்குவது எல்லா விழாக்களுடன் நவராத்திரி விழாவை 9 நாள்களும் இசைவிழாவுடன் சிறப்பாக நடத்தினார் என்றால் உண்மை.

அவர் தன்னுடைய இளமைப் பருவத்தில் மாட்டுச்சவாரியில் பெரும் ஈடுபாடு கொண்டார் என்பதையும் அறிந்தேன்.

அவர் தன் வாழ்வை வண்ணார்

**செ.சண்முகலிங்கம்.**
**யாழ்.பரமேஸ்வரக்கல்லூரி ஓய்வுபெற்ற லிகிதர்.**

பண்ணை - நாச்சிமார்கோவில், தலையாழி ஒழுங்கையில் மனை அமைத்து வாழ்ந்தார். அவர் எளிமையான வாழ்வு வாழ்ந்தார். அவரது நண்பர்களாக அதிபர்கள் கந்தசாமி முத்துவேற்பிள்ளை ஆகியோருடன் கலந்தாலோசித்து கடமைகளைச் செய்தார் என்பதும் உண்மை.

"உள்ளத்தில் உள்ளதும் தீதே பிறன்பொருளைக் கள்ளத்தால் கள்வோம் எனல்"

என்ற வேதவாக்கை கடைப்பிடித்தார்.

அமரர் யோகர் சுவாமியின் சீஷ்யன் அவரை தரிசிக்காமல் இருக்க மாட்டார். அன்றியும் சுவாமியின் ஆணைப்படி தினமும் காலை நான்கு மணிக்கு நல்லைக் கந்தன் தேரடியில் வந்து நின்று கற்பூர தரிசனத்தைக் கண்டு செல்வது வழக்கம். அவர் ஒரு தேசிய வாதி. தமிழர்களின் நிலையறிந்து அவர்களின் வாழ்வு பரிமளிக்க வேண்டும் என்று எண்ணி, அரசாங்கம் பாடசாலைகளை எடுக்கமுன் அரசியலில் ஈடுபட்டார். ஈற்றில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் அமரர் நியாயவாதி ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் வலது கரமாக திகழ்ந்தார். அன்று தொட்டு வேட்டி அணியத் தொடங்கினார். கொழும்பில் மகனுடன் இருந்த காலத்திலும் எங்கு போனாலும் வேட்டி சட்டையுடன் போவார். அன்னாரின் பிள்ளைகள் எல்லோரும் உயர் பதவிகளில் இருக்கின்றனர்.

அமரர் ஓர் கர்மவீரன் அஞ்சா நெஞ்சம் கொண்டவர். எதற்கும் அஞ்சுவது கிடையாது. எதிர் நீச்சல் அடித்து வந்தபடியால் மாணவர்களால் அன்பாக 'சாக்கர்' என்று அழைக்கப்பட்டார். அவரின் நெஞ்சம் நேர்மையானது; உறுதியான தியாகமானது. திடகாத்திரமான பல நிகழ்வுகளுக்கும் முகம் கொடுத்துள்ளார் என்பதை நான் அறிவேன். அவரிடம் பொய்பேசியவர்கள் தப்பியது கிடையாது. வாய்மையின் இலக்கணமாகத் திகழ்ந்தார்.

அமரர் நடந்து வந்த பாதையை திருமபிப் பார்ப்போமானால் அங்கு அவரின் நேர்மையை காணமுடிகின்றது. ஆலம விழுது போல் பலரை உருவாக்கிய அண்ணல், 15-09-2002இல் பரமேஸ்வரன் கழல் சேர்ந்தார். ஆண்டு ஒன்றுகழிந்தது. அவரின் ஆத்மாவிற்கு சாந்தி.

"தாமின் புறுவது உலகின்புறக் கண்டு

காமுறுவர் கற்றறிந்தார்" என்று உணரமுடியும்.

### நீத்தார் நயப்புரை

தீரமும் திடமும் அழகும் ஆளுமையும் கொண்ட அமரர் சிவபாதசுந்தரத்திற்கு பலர் பெண்கொடுக்க முயன்ற பொழுதும் செல்வி செல்வரத்தினம் அம்மா பதியாக அமைந்தார். அவரின் அனுசரணையும் அன்னாருக்கு சகல வித செயற்பாடுகளுக்கும் மெருகூட்டியது.

அமரர் சிவபாதசுந்தரத்தின் அறிவு, ஆளுமை அனைத்தையும் அறிந்த அமரர் சேர் பொன் இராமநாதனின் மருமகன் அமரர் சுநடேசபிள்ளை (முன்னாள் தபால், தந்தி, தகவல் அமைசசர்) அவர்கள் யாழ் பரமேஸ்வராவுக்கு அதிபராக்கினார். நீதியும், நேர்மையும் கடவுள் பக்தியும் கொண்டு திகழ்வதற்கு இக் கல்லூரி வழிகாட்டியாக அமைந்தது. கல்லூரியின் வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாக இருந்து

# கொள்கைப் பற்று மிகுந்த கோப்பாய் கோமான்.....

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கோப்பாய் கோமான் அமரர் கு.வனனியசிங்கத்தின் நினைவு தின வைபவம் இன்று ஞாயிற்றுக் கிழமை நல்லூர் பொதுச் சந்தையில் உள்ள வன்னியசிங்கம் பொதுப்பணி மன்றத்தில் நடைபெறுகிறது. அதனையொட்டி இந்த நினைவுக் கட்டுரை பிரசுரமாகின்றது.

கோப்பாய் கோமான் அமரர் கு.வன்னியசிங்கம் தமிழ் மக்களுக்கு 1947ஆம் ஆண்டு அறிமுகமானார். 1947ஆம் ஆண்டு கோப்பாய்த் தொகுதிக்குப் போட்டியிட்ட தம்பியப்பா, புத்தூரில் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்திற்கு அழைத்து வரும்போது மாரடைப்பால் காலமானார். அவரது இடத்திற்கு ஓர் அபேட்சகர் தேவைப்பட்டபோது, தந்தை செல்வா அமரர் வன்னியசிங்கத்தை ஜீ.ஜீ.பொன்னம்பலத்திற்கு சிபார்சு செய்தார்.

அரசியலில் அக்கறையில்லாது, தனது சட்டத்துறையைக் கவனித்து வந்த அமரர் வன்னியசிங்கம், அபேட்சகராக வர மறுத்துவிட்டார். தந்தை செல்வாவின் வற்புறுத்தலால் அரசியலுக்கு வந்து கோப்பாய்த் தொகுதியில் போட்டியிட்டு வெற்றிபெற்றார்.

ஈழத்திருநாட்டில் பல தலைமுறையாக உழைத்துவரும் மலையகத் தமிழர்களின் குடியுரிமையைப் பறிக்கும் இலங்கைக் குடியுரிமைச்சட்டம், இந்திய பாகிஸ்தானியர் குடியுரிமைச் சட்டம் ஆகிய சட்டங்கள் முறையே 20.8.1948இலும் 10.12.1948 இலும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டபோது தமிழ் காங்கிரஸ் பிரதிநிதிகளாக இருந்த தந்தை செல்வாவும் வன்னியசிங்கமும்அச்சட்டங்களுக்கு எதிராக வாக்களித்தனர். அந்தச் சட்ட விவாதத்தில் கு.வ. பின்வருமாறு பேசினார்.

"இரண்டு வருட சுதந்திர ஆட்சியில் தமிழ் பேசும் மக்கள் தங்களது சொந்த நாட்டிலேயே தாழ்வான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இந்த அரசாங்கம் தமிழர்களுக்குச் சொந்தமானதென்ற உணர்வு அவர்களிடமில்லை. இச்சூழ்நிலையில் நிலைமையைச் சீர்தூக்கி அதற்கு ஒரு பரிகாரம்



காணவேண்டும். சமபலபிரதிநிதித்துவக் கோரிக்கை விடுக்கப்பட்டு அது தோல்வி கண்டுவிட்டது. எனவே, வேறு பரிகாரம் நாம் தேடவேண்டும்"

பிரஜாவுரிமைச் சட்டங்களை எதிர்த்து வாக்களித்த பின்னர், தந்தை செல்வாவும், வன்னியசிங்கமும் தமிழ் பேசும் மக்கள் தலைநிமிர்ந்து தன்மானத்துடன் வாழ புதிய கட்சி ஒன்றை ஆரம்பிக்க விரும்பினர். அதன் பயனாக 1949ஆம் ஆண்டு மார்கழி மாதம் 18ஆம் திகதி மருதானையிலுள்ள 'அரசாங்க லிகிதர் சேவைக் கட்டடத்தில் தமிழரசுக்கட்சி அங்குரார்ப்பணக் கூட்டம் நடைபெற்றது. தலைவராகத் தந்தை செல்வாவும் சிறப்புக்குழுத் தலைவராக கோப்பாய்க் கோமான் வன்னிய சிங்கமும் தெரிவுசெய்யப்பட்டனர்.

அமரர் வன்னியசிங்கம் கோப்பாய்த் தொகுதி வேட்பாளராக தெரிவு செய்யப்பட்ட பிறகு தமிழரசுக்கட்சி உதயமான பின்னர், 1952ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் வடக்கில் அவர் மட்டுமே நாடாளுமன்ற உறுப்பினரானார் என்றால் அவரது அயராத உழைப்பும் கொள்கைப் பிடிப்பும் தமிழ் மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டன என்றே கருதவேண்டும். பட்டி தொட்டி எங்கும சென்று வடக்கிலும் கிழக்கிலும் தந்தை செல்வாவுடன் சேர்ந்து சமஷ்டி ஆட்சியே தமிழர்களுக்கு ஏற்றதென்

(14ஆம் பக்கம் பார்க்க)

## பழைய கண்டிப் பாலம் பலத்த சேதம்

காரைநகர் பழைய கண்டி சந்தியில் உள்ள பாலம் போக்குவரத்துச் செய்ய முடியாத அளவுக்கு சேதமடைந்துள்ளது. காரைநகர் பிரதான மேற்கு வீதியில் அமைந்துள்ள இந்தப் பாலம் உடைந்து இருவார்ங்களுக்கு மேலாகியும் இதனைப் புனரமைப்பதற்கு எதுவித நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லையென இப்பகுதிபொதுமக்கள் தரப்பில் கவலை தெரிவிக்கப்பட்டது. இன்னும் ஓரிரு நாள்களில் இந்தப் பாலம் முற்றாக உடைந்து விடும் நிலையில் உள்ளது என்றும் - இதனால் இந்த வீதியூடான போக்குவரத்து முற்றாகத் தடைப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்றும் - கூறப்பட்டது. (எ-73)

## கொள்கைப் பற்று...

(13ஆம் பக்கம் தொடர்ச்சி)

பதை வலியுறுத்தினார். சமபந்திப் போசனம், ஆலயப்பிரவேசம் என்பவற்றில் அக்காலத்தில் முழுமூச்சாக உழைத்த பெருமகன் வன்னியசிங்கம். தமிழரசுக்கட்சியின் கொள்கைகளை நாடாளுமன்றத்தில் மாத்திரமல்ல, அரசியல் கூட்டங்களில் மட்டுமல்ல அக்காலத்தில் சனசமூகநிலையக் கூட்டங்கள், பொது அமைப்புக்களின கூட்டங்கள் அனைத்திலும் பங்கேற்று பரப்பிய முதன்மையாளர் கோப்பாய் கோமான்.

தமிழ் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்களை நாடாளுமன்றத்தில் புள்ளி விவரங்களுடன் சுட்டிக்காட்டிப் பேசி எதிர்க்கட்சியினரையும் ஆளும் கட்சியினரையும் அதிரவைத்தார். சிங்களம் மட்டும் சட்டம் ஒரு நாட்டில் இரு ஆட்சி அமைக்க வழிகோலியுள்ளது என்று கர்ச்சித்தார்.

1956 ஓகஸ்ட் 17,18,19 ஆம் திகதிகளில் தமிழ்ப் பிரதேசங்களில் இருந்து தமிழ் அரசுத் தொண்டர்களும் தலைவர்களும் திருகோணமலையை நோக்கிக் கால் நடையாகச் சென்றனர். யாழ்ப்பாணத்தில் இருந்து சென்ற கால் நடைப்பவனிக்கு கு.வ.தலைமை தாங்கிச்சென்றார். ஓர் அரசியல் கட்சி நீண்ட கால் நடைப்பவனியில் சென்று கொள்கை பரப்பிய முயற்சி வேறெங்கும் நடந்ததில்லை. இதற்குத் திட்டமிட்டவர்களில் கோப்பாய் கோமானும் ஒருவர்.

சிங்களஸ்ரீ எதிர்ப்புச் சத்தியாக்கிரகம் என அனைத்திலும் தன்னை முற்றாக அர்ப்பணித்து செயற்பட்டு தடுப்புக் காவலிலும், சிறையிலும் இருந்த செம்மலின் தீர்க்க தரிசனமான சமஷ்டி ஆட்சி இன்று பெரும்பான்மை, சிறுபான்மை இன அரசியல் கட்சிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பது அவரது தீர்க்க தரிசனத்துக்கு சான்று பகரும்.

---

மகாவிஷ்ணு துணை

### சிவன் கோவிலடி வைத்தியசாலை

முன்பு வண்ணை சிவன் கோவிலடியில் இயங்கிவந்த முறிவு, நெறிவு வைத்தியசாலை தற்போது

மானிப்பாய் வீதி,
கோப்பாய் சந்தி,
கோப்பாய் வடக்கு.

என்ற விலாசத்தில் தமது சேவையைத் தொடர்ந்துள்ளமையை அறியத்தருகின்றோம். சிகிச்சை நேரங்கள்
திங்கள் முதல் வியாழன் சனி கிழமைகளில் 9.00 - 1.30,
4.00 - 6.00 மணிவரை

ஞாயிறு 9.00-1.00 மணிவரை (வெள்ளி விடுமுறை)

(22824)(25-16-17) Dr.T. சோமசுந்தரம் விஜயன்.

---

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 24 - 02 - 1929



இறப்பு 26 - 09 - 1997

### அமரர் வேலுப்பிள்ளை நற்குணராசா

திதி: 21.09.2003

ஆண்டுகள் ஆறு சென்றதுவோ - அப்பாவே!
எம்மை விட்டு நீர் சென்று
ஆறாத்துயரில் மூழ்கின்றோம்
உம்மை நினைத்து நாம்.

மீசாலை வடக்கு,
கொடிகாமம். (22825)(25-16-17)

உம் நினைவுகளுடன்:
மனைவி, பிள்ளைகள்.

---

## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 01 - 07 - 1978



மறைவு 21 - 09 - 1993

### செல்வன்
### குமாரகுலசிங்கம் சிவகுமார் (சிவா)

அன்புச் செல்வனே! பத்து ஆண்டுகள் சென்றாலும்
உன் அழகு முகம் எம் நெஞ்சினிலே அணையாத தீபமடா?
அம்மாவின் கண்களிலே வற்றாத கங்கையடா!
அப்பாவின் நெஞ்சினிலே ஆறாத்துயரமடா!
உன்னைப்போல் ஒரு தம்பியை இனி எப்போ காண்போமடா?

உன் பிரிவால் வாடும்:
அப்பா, அம்மா, அக்காமார்,
அத்தான்மார், அண்ணா,
அண்ணி, மருமக்கள்.

கலைவாணி வீதி,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில். (22816)(25-16-17)

---

## வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபை, கரவெட்டி
## வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபையின் செயலாளரினால் கீழ்க்குறிப்பிடப்பட்டிருக்கும் வேலைகளுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

01. கேள்விப்பத்திரங்கள் 26.09.2003 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை அட்டவணையில் காட்டப்பட்ட முதலாவது வேலைக்கு நிர்மாணப்பயிற்சி நிறுவனத்தில் (இக்ராட்) தரம் 8 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களும் ஏனைய வேலைகளுக்கு தரம் 9 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களுக்கும் கீழே குறித்த தொகையைச் செலுத்தி கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

02. கேள்விப் பத்திரத்தின் ஒரு பிரதியை கடித உறையில் இட்டு அரக்கு முத்திரை வைத்து *செயலாளர் வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபை, கரவெட்டி* என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அல்லது தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இட்டு இரண்டாம் பிரதியை *பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம்* அவர்களுக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். இரண்டு பிரதிகளையும் உரிய இடங்களில் 30.09.2003 முற்பகல் 11.00 மணிக்கிடையில் கிடைக்கச் செய்தல் வேண்டும்.

03. கேள்விகள் 30.09.2003 நண்பகல் 12.00 மணிக்கு திறக்கப்படும். அச்சமயம் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்.

04. மேலதிக விவரங்களை வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

| தொ. இல. | வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்விவைப்பு பணம் (ரூ) | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் (ரூ) | மீளளிக்கப்படாத பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (ரூ) |
|---|---|---|---|---|
| 01. | தேவரையாளி வதிரி பூவற்கரை வீதி புனரமைத்தல் | 10,000.00 | 250.00 | 50.00 |
| 02 | கல்லுவம் கரணவாய் மேற்கு ஞான வைரவர் கோயில் அருகிலுள்ள வீதி திருத்தம் | 1,000.00 | 250.00 | 50.00 |
| 03. | கரணவாய் தெற்கு உப்போடை வீதி திருத்தம் | 1,000.00 | 250.00 | 50.00 |
| 04. | கண்ணாமலை வீதியும் முதலியார் வீதியும் தொடுக்கும் வீதி திருத்தம் | 1,000.00 | 250.00 | 50.00 |
| 05. | பெருவெட்டி குள வீதி திருத்தம் | 1,000.00 | 250.00 | 50.00 |
| 06. | குலனைப்பிள்ளையார் வீதி திருத்தம் | 1,000.00 | 250.00 | 50.00 |

**திரு. சிதம்பரப்பிள்ளை பசுபதி,**
**செயலாளர்,**
**வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபை,**
**கரவெட்டி.**

19.09.2003. (C/30283) (29-16-17)

---

## கட்டட/வடிவமைப்பு
## பொறியியலாளர்களுக்கான விண்ணப்பம்

பொறியியல் மற்றும் கட்டடக்கலை தொடர்பான அமெரிக்க நிறுவனம் (Prime Engineering & Architecture .Inc) ஒன்று தனது வடிவமைப்பு மற்றும் கட்டட நிர்மாணத்திற்கான அலுவலகம் ஒன்றை இலங்கையில் திறக்கவிருக்கின்றது. இது வடகிழக்கு மாகாணங்களில் மீள் கட்டட நிர்மாணம் மற்றும் அபிவிருத்தியை மேற்கொள்வதை நோக்காகக் கொண்டது. வன்னிப் பிரதேசத்தில், இந்நிறுவனத்தின் (PE & A) கட்டட நிர்மாண முகாமைத்துவம் மற்றும் பொறியியல் பிரிவுகளில் வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன.

### கட்டட நிர்மாணத்துறை முகாமையாளருக்கான (Construction Manager) வெற்றிடம்

பாரிய கட்டட நிர்மாணத்துறையிலும் (நெடுஞ்சாலைகள், பாலங்கள் மற்றும் /அல்லது கட்டடங்கள்) கட்டட நிர்மாணத்துறை முகாமைத் துவத்திலும் 15 வருட அனுபவம் உள்ள சிவில்/கட்டட நிர்மாணத்துறைப் பொறியியலாளர் இதற்கு விண்ணப்பிக்கலாம். பட்டயப் பொறியியலாளர்களுக்கு (Chartered Engineers) முன்னுரிமை வழங்கப்படும்.

### கட்டட நிர்மாணத் துறைப் பொறியியலாளர்களுக்கான (Construction Engineer) வெற்றிடம்

5-10 வருடங்கள் கட்டட நிர்மாணத்துறையில் அனுபவமுள்ள சிவில்/ கட்டட நிர்மாணத்துறை பொறியியலாளர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

### கனிஷ்ட பொறியியலாளர்களுக்கான (Junior Engineers) /JTOக்கான வெற்றிடங்கள்

0-5 வருடங்கள் வடிவமைப்பு/கட்டடநிர்மாணத்துறையில் அனுபவமுள்ள சிவில் பொறியியலாளர்கள் /JTO இதற்கு விண்ணப்பிக்கலாம்.

நல்ல சம்பளம் மற்றும் வன்னிப்பிரதேசத்தில் தங்குவதற்கான இடவசதியுடன் கூடிய சலுகைகளையும் இந்த நிறுவனம் (PE&A) அளிக்கின்றது.

நீங்கள் எதிர்பார்க்கும் சம்பளம் மற்றும் விவரங்களைப் பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு (ஈ-மெயில்) அனுப்பலாம்.

**E.Mail:- jay @ primeeny.com**

அல்லது தொலைநகல் (Fax) அல்லது தபால் மூலமும் அனுப்பலாம்.

60, வஜிர றோட்,
கொழும்பு - 4.
தொ.பே.-2502512, 2501601

அல்லது மே/பா
சின்னத்தம்பி விக்னேஸ்வரன்
சுதுமலை மேற்கு,
மானிப்பாய்,
தொ.பே.- 0777 296403

(30291)(16-17)

## நாகம்ஸ் சுன்னாகம்

அஜித், ஜோதிகா, பிரியங்கா, விவேக் நடித்த

தினசரி: 11.00, 3.00
வெள்ளி சனி, ஞாயிறு
11.00, 3.00, 7.00.

# ராஜா

(C/29908) (ரீல்ஸ்)

## நிறஞ்சனாஸ்

விஜயகாந்த், ப்ரீதா நடித்த

# தர்மா

காட்சி நேரம் : 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு

ULTRA FORCE 2

இரவு 8.45 (பு.நே.)

(C/29905)

## லக்ஷமி சினிமா இணுவில்

M.G.R., ஜெயலலிதா, நாகேஷ் நடித்த

# ராமன் தேடிய சீதை

காட்சி நேரம் : 11.00, 2.00, 7.00 (பு.நே.) (ரீல்ஸ்) (22830)

## ராஜா யாழ்ப்பாணம்

22ஆம் திகதி வரை
அருண், வடிவேல், விஜயகுமார் நடித்த

# அலை

காட்சிகள் 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)
23ஆம் திகதி முதல்

# ராமச்சந்திரா

(C/29904)


## மணமகள்கள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த சுவிஸ், லண்டன் ஆகிய இடங்களில் நிரந்தர பிரஜா வுரிமையுடைய 1960ஆம், 1963 ஆம் ஆண்டுகளில் பிறந்த அச்சுவினி, பரணி நட்சத்திரங்களை உடையவர்களுக்கு சகோதரர் தகுந்த மணமகள்களை எதிர்பார்க்கின்றார். ஆறு வருட வித்தியாசம் எதிர்பார்க்கப்படுகின்றது. தற்சமயம் மணமகன்மார் இலங்கையிலுள்ளனர். காலை 8.00 மணிக்கு முன்னரும் மாலை 5.00 மணிக்குப் பின்னரும் தொடர்பு கொள்ளவும்.

**T.P.No: 012 360730.**

(22720)


## மதி அழகு நிலையம்
## Mathi beauty center

★ Facial (ப்பேசியல்)
★ Make - up
(மணமகள் அலங்காரம்)
★ Eye brow Shaping
(கண்இமை ஒழுங்குபடுத்தல் மற்றும் சகலவிதமான அலங்காரங்கள்)
மேலதிக பயிற்சி வகுப்புகள்
ஆரம்பம்: 01.10.2003
சந்திக்கும் நேரம் : 2.00-5.00

*முகவரி:-*
த. மதிவேணி,
இல.24, சட்டநாதர் வீதி,
நல்லூர்.

(22828) (29)


## வருந்துகின்றோம்

கடந்த வெள்ளிக்கிழமை நடைபெறுமென அறிவிக்கப்பட்ட விஸ்வநாதர் இரத்தினம் என்பவருடைய மரணச் சடங்கு தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டு இன்று (21.09.2003) ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. எமது முன்னைய அறிவித்தலால் அன்றையதினம் எமது உற்றார், உறவினர், நண்பர்களுக்கு ஏற்பட்ட சிரமத்திற்கு மனம் வருந்துகின்றோம்.

இ.நம்பியாரூரன்
(மகன்).

இல.16, அம்மன் வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம். (22837)

## கோப்பாய் கோமான்
## அமரர் கு.வன்னியசிங்கம் அவர்களின் 44ஆம் ஆண்டு நினைவு தினமும் அமரர் திருமதி கோமதி வன்னியசிங்கம் அவர்களின் அஞ்சலி நிகழ்வும் தையல் பயிற்சியில் சித்தியடைந்த மாணவிகளுக்கான பரிசளிப்பு விழா வைபவமும்



இன்று (21.09.2003) ஞாயிறு பிற்பகல் 4.30 மணியளவில் நல்லூர் சந்தையில் அமைந்துள்ள வன்னியசிங்கம் பொதுப்பணி மன்றத்தில் நடைபெறும்.

**தலைவர் : பேராசிரியர் சி.க.சிற்றம்பலம்**
**(பட்டப்படிப்புகள் பீடாதிபதி, யாழ். பல்கலைக்கழகம்)**

அரசியலில் நேர்மையாகவும், நீதியாகவும், ஏழைகளின் நண்பனாகவும் வாழ்ந்து அயராது பாடுபட்ட கோமானை நினைவு கூர திரண்டு வாரீர்.

*நல்லூர் சந்தை.* ***நிர்வாகிகள்,***
***வன்னியசிங்கம் பொதுப்பணி மன்றம்.***

(சி-30284) (31-16-17)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,செப்.21

மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழகம், பரிஷ் வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்திவரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று காலை 9.00மணிக்கு மானிப்பாய் இந்துக்கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

இந்த இறுதியாட்டத்தில் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகமும் மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக்கழகமும் மோதுகின்றன.

(எ-3-86)

★ ★ ★

வலி.வடக்கு,செப்.21

யாழ். மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுசரணையுடன் இணுவில் கலாஜோதி விளையாட்டுக் கழகம் நடத்திய தாச்சி சுற்றுப்போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு இணுவில் கலாஜோதி விளையாட்டுக்கழக மைதானத்தில் இணுவில் அண்ணா விளையாட்டுக் கழகமும், கைதடி வளர்மதி விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

(எ-86)

★ ★ ★

சங்கானை சிலம்புப் புளியடி இந்து இளைஞர் மன்றத்தின் சிறுவர் பாடசாலை விளையாட்டு நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப.1.30 மணிக்கு தலைவர் செ.அரியதாசன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் வலி.மேற்கு உதவிப் பிரதேச செயலர் மு.சிவராசா பிரதம விருந்தினராகவும் யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவைமன்ற உதவிப் பணிப்பாளர் த.சிவதட்சணாமூர்த்தி, வலிகாம வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.சிவநேசன் மற்றும் வலி. மேற்கு பிரதேச சபை செயலாளர் திருமதி சா. சிவானந்தராசா ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

(எ-29)

## ஒத்து மாறுதல்

**யாழ். மாவட்டத்திலிருந்து வடமேல் மாகாணத்துக்கு ஒத்து மாறவிரும்பும் பாடசாலை ஆசிரியர்**
**இல. 01, பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.**
**(T.P.: 2225892) எனும் முகவரியில் தொடர்புகொள்ளவும்.**

(22826) (31-16-17)


## A/L-உயிரியல்-2005

செய்முறை வழிகாட்டிக் கைநூல்
(Practical Guide Book)

*ஆக்கியோன்*

இ.ஈஸ்வரதாஸன் B.Sc.(Bio)
PGDE (Colombo Hindu College)

*பூபாலசிங்கம் புத்தகசாலை - யாழ்*
*ஸ்ரீலங்கா புத்தகசாலை - யாழ்*
*சுப்பிரமணியம் புத்தகசாலை - யாழ்*
*பெற்றுக்கொள்ளலாம்.*

(22622)

BIOLOGY CENTRE.Co.06-01 2559803.


## திருமண நன்றி நவிலல்



**திரு.திருமதி சுதாகரன் ஜெயந்தா**
(கனடா) (இணுவில்)

K.S.சிவசுப்பிரமணியம் குடும்பத்தினர்,
"சிவமகால்"
கைதடி வடக்கு. கைதடி (கனடா)

திருமதி செல்வரத்தினம் குடும்பத்தினர்
"செல்வக்குமரபதி"
இணுவில் மேற்கு, இணுவில்.

**திரு.திருமதி சுதாகரன் ஜெயந்தா**

இறையருள் துணை கொண்டு இணுவில் ஸ்ரீ பரராஜ சேகரப் பிள்ளையார் கோவில் திருமண மண்டபத்தில் 25.08.2003 அன்று நடைபெற்ற எமது திருமணத்தில் கலந்து சிறப்பித்தவர்களுக்கும், தபால், தொலைபேசி, பக்ஸ் மூலம் வாழ்த்துக்கள் தெரிவித்தோருக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவிகள் புரிந்தவர்களுக்கும் எமது அன்பு கலந்த நன்றிகளை எமது பெற்றோருடன் இணைந்து தெரிவித்துக் கொள்கிறோம்.

UTHAYAN Graphics (22817)

# மரண அறிவித்தல்கள்

## இராசரத்தினம் அருள்நாயகம்

வசாவிளான் மத்தியைப் பிறப்பிடமாகவும் இல.21, சோமசுந்தரம் வீதி சுண்டிக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசரத்தினம் அருள்நாயகம் அவர்கள் நேற்று (20.09.2003) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராசரத்தினம் - செல்லம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும் ஜோதிமதியின் அன்புக் கணவரும் அருள்மதியின் பாசமிகு தந்தையும் தர்மகுலசிங்கத்தின் மாமனாரும் கைலினின் (வேம்படி மகளிர் கல்லூரி உயர்தரம்) அன்புப் பேரனும் குலநாயகத்தின் (கனடா) அன்புச் சகோதரரும் ஜெயராஜாவின் (கனடா) மைத்துனரும் காமல், கிரேஷியன், ரதிக்கா, கொன்சலா ஆகியோரின் பெரிய தந்தையும் ஜோசப்பின், வினோதா, நவீனன், விசித்திரன், நளினா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை பற்றிய அறிவித்தல் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சு.தர்மகுலசிங்கம் (மருமகன்)
கிராம சேவை அலுவலர்
வசாவிளான்.
**T.P.: 222 5298.**

*21, சோமசுந்தரம் அவன்யு,*
*சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.*

(22833) (31-16-17)

## நவரட்ணம் அருமைராஜா

(உரிமையாளர், ஜனார்த்தன் இண்டஸ்றிஸ், கொழும்பு,
முன்னாள் உரிமையாளர், ஜனார்த்தன் ஹாட்வெயார்ஸ், இணுவில்)

பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும், இணுவிலை வசிப்பிடமாகவும் தற்போது வெள்ளவத்தையில் வசித்தவருமான நவரட்ணம் அருமைராஜா நேற்றுமுன்தினம் (19.09.2003) வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நவரட்ணம் - இராசம்மா தம்பதிகளின் கனிஷ்ட புதல்வரும், காலஞ்சென்ற நிர்மலாதேவியின் அன்புக் கணவரும் திருமதி சுரேஜி அருள்வண்ணன் (லண்டன்), ஜனார்த்தனன் (பொறியியலாளர் - சிங்கப்பூர்), செல்வி ஜெனனி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் புவிராஜா (கொழும்பு), இராசபூபதி, பூபாலராஜா, தங்க பூபதி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், ம.அருள்வண்ணனின் மாமனா ரும் காலஞ்சென்ற சு.இராமலிங்கம் (இணுவில் வைத்தியர்) மற்றும் சின்னம்மா தம்பதிகளின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.09.2003) திங்கட்கிழமை கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ம. றஞ்சன்
(மருமகன்).

*றஞ்சன் ஹாட்வெயர்,*
*மானிப்பாய்,*
***T.P.: 012 - 587346.*** (22832) (31-13-17)

## S.A. செல்வராசா

மாதகலைப் பிறப்பிடமாகவும் சிலாபத்துறையில் வசித்தவரும் மரியலைசா ரான்ஸ்போட் உரிமையாளரும், பிரபல வர்த்தகருமாகிய S.A.செல்வராசா அவர்கள் 18.09.2003 வியாழக்கிழமை காலமானார்.

அவர் மேரிலூர்த்துமலரின் அன்புக் கணவரும் லூட்ஸ் பிரான்சிஸ் ஜெயதாஸ் (செல்வநாதர்), மரியலைசா பெரியராணி (ஜேர்மனி), மரிய அன்ரனியா சின்னராணி (கனடா), மேரிஜறின் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் இருதய லீலா, அல்போன்ஸ் - விக்ரர், லீனஸ் புஸ்பாகரன், றொபின்சன் ரவி ஆகியோரின் அன்பு மாமனாரும் மீயூறின் டயா, புளோறின் ஞானராஜ், டயான் - செறின், ஸ்ரீமன், ஸ்ரெபானி, சில்வெஸ்ரர் புறூனோர், றோசி, கெய்ஸ்மன், அல்வின் ஆகியோரின் அன்புப் பேரனும் டாரியுஸ்சின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் (24.09.2003) புதன்கிழமை மாலை 3.00மணிக்கு மாதகல் புனித தோமையார் ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப்பட்டு, பூதவுடல் மாதகல் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செல்வநாதர்
(மகன்).

*பற்றிமா வீதி,*
*மாதகல்.* (22822) (31-16-17)

## திருமதி
## சின்னத்தம்பி தெய்வானைப்பிள்ளை

சாத்தனை, கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த திருமதி சின்னத்தம்பி தெய்வானைப்பிள்ளை அவர்கள் நேற்று (20.09.2003) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சி.சின்னத்தம்பி ஆசிரியரின் அன்பு மனைவியும் இராஜலக்ஷ்மி, இரகுநாதன், காலஞ்சென்ற விஜயலக்ஷ்மி மற்றும் பாக்கியலக்ஷ்மி, சத்தியநாதன், பரமானந்தம் ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற L.S. செல்வநாயகம் மற்றும் அம்புலிதேவி, ஒப்பிலாமணி, சரோஜினி, சிவகௌரி ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்ற தம்பிராசா மற்றும் ஆறுமுகம், வேலுப்பிள்ளை ஆகியோரின் மைத்துனியும் அரவிந்தன், திவாகரன், சுதாகர், சசிகரன், பிரமீளா, பிரவீணா, சுஜிதா, நிவேதன், நிவேதிகா, ஜோய்ஷீபா, யூட்சாம்சன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.09.2003) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப. 3 மணியளவில் வேரோணிடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு, தகனம் செய்யப்படும் என்பதை சகலருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்:
திருமதி செ. இராஜலக்ஷ்மி
(மகள்).

*சாத்தனை,*
*கட்டைவேலி, கரவெட்டி.* (22834) (31-16-17)

## முருகேசு சிதம்பரப்பிள்ளை

(நொச்சிகாமம் பிரபல வர்த்தகர்)

காரைநகர், அறுகம்புலத்தைப் பிறப்பிடமாகவும் 54/10, பண்டாரிக்குளம், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு சிதம்பரப்பிள்ளை அவர்கள் நேற்று (20.09.2003) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் வள்ளிப்பிள்ளையின் அன்புக் கணவரும் நித்தி ஆனந்தன் (ஆனந்தா ஸ்ரோர்ஸ், நொச்சிகாமம்), ரங்கநாதன் (ஆனந்தா ஸ்ரோர்ஸ், நொச்சிகாமம்), தருமலிங்கம் (ஆனந்தா ஸ்ரோர்ஸ், நொச்சிகாமம்), சிவசிதம்பரம் (லண்டன்), சிவகலை (கொழும்பு), ஜெகநாதன் (நவலச்சுமி ஸ்ரோர்ஸ், வவுனியா), காலஞ்சென்ற மகாதேவன், செல்வராசா(லண்டன்), ஆகியோரின் பாசமிகு தந்தையும் நாகேஸ்வரி, சிவயோகம், கோமதி, பவானி (லண்டன்), சிவனேஸ்வரி, யோகலிங்கம் (மலர் ரெக்ஸ்ரைல், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.09.2003) திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தட்சணாம்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**மக்கள், மருமக்கள்.**

*54/10 , பண்டாரிக்குளம்,*
*வவுனியா.* (22839) (16-17-31)

# திருமலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லிக்கான விநியோகமும் துண்டிக்கப் படப்போகின்றது" - என்று பொது மக்கள் ஐக்கிய முன்னணி நாடாளு மன்ற உறுப்பினர்களும், ஜனாதிபதி யும் தெரிவித்திருந்தனர்.

"கிழக்கில் விடுதலைப் புலிகள் புதிய முகாம் எதையும் அமைக்க வில்லை. கிழக்குக்கு அச்சுறுத்தல் ஏதும் இல்லை" என்று பிரதமரும், அமைச்சர் பீரிஸும் அந்தக் குற்றச் சாட்டை மறுத்திருந்தனர்.

பொதுமக்கள் ஐக்கிய முன்ன ணியின் எச்சரிக்கையை அடுத்து எதிர்க்கட்சித் தலைவர் நிலைமையை நேரில் சென்று பார்வையிடுவதற் காக விசேட ஹெலியை அரசாங்கம் ஏற்பாடு செய்ய முன்வந்தது.

இதனையடுத்து -

எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று திருமலைக்குச் சென்றார்.

திருமலைக் கடற்படைத் தளத்தில் முப்படை அதிகாரிகள் மற்றும் பொலீ ஸாருடன் இருமணி நேரம் பாதுகாப்பு நிலைவரம் தொடர்பாக அவர் ஆராய்ந்தார்.

கிழக்கு பாதுகாப்பு நிலைவரம் தொடர்பாக விரிவாகத் தாம் ஆராய்ந் ததாகவும் -

இது தொடர்பாக விரிவான அறிக்கை ஒன்றை ஜனாதிபதிக்கு வழங்கவிருப்பதாகவும் - அவர் அங்கு தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலை அடுத்து வில்கம் விகாரைப் பகுதிக்கு சென்ற மஹிந்த ராஜபக்ஷ அங்குள்ள சிங்கள மக்களுடன் அவர்களது பிரச்சினைகள் குறித்தும் கலந்துரையாடினார். (ம-3-6)

# திலீபனின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீவகத்தில், புளியங்கூடல் ஸ்ரீமுத்து மாரி அம்மன் ஆலய முன்றிலிலும்- நினைவு நிகழ்வுகளை அந்தந்தப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையி னர் ஏற்பாடு செய்துள்ளனர்.

அனைத்து இடங்களிலும் காலை 9மணிக்கு அடையாள உண்ணாவிர தம் ஆரம்பமாகும்.

இநநிகழ்வுகளில் அந்தந்தப் பிர தேசத்திலுள்ள சகல தரப்பினரையும் கலந்துகொள்ளுமாறு யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையினர் கேட் டுள்ளனர்.

நல்லூர் ஆலயச் சூழலிலுள்ள தியாகி திலீபனின் நினைவுத் தூபி அமைந்திருக்கும் இடத்திலிருந்து இறுதிநாளன்று காலை 9மணியள வில் தியாகி திலீபனின் நினைவு ஊர்தி புறப்பட்டு யாழ்நகரெங்கும் வலம் வரவுள்ளது எனவும் தெரிவிக் கப்பட்டது. (ம-9)

# சர்வதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யும் அவர்கள் நேரடியாகச் சென்று பார்வையிட்டனர்.

விளையாட்டு மைதானம் அமை யக்கூடிய இடத்தின் புறச்சூழல் குறித் தும் அவர்கள் ஆராய்ந்தனர்.

திலங்க சுமதிபால, ரெலிக்கொம் நிறுவனத்தின் தலைவரானபடியால் தொலைத்தொடர்பு அபிவிருத்தி தொடர்பாக ரெலிக்கொம் அதிகாரி களுடன் ஆராய்ந்தார்.

அதன் பின்னர் அவர்கள் கிளி நொச்சிக்கு சென்றனர். (ம-3)

# திலீபனுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியில் அமைந்துள்ள காவலரணில் இருந்து சிப்பாய் ஒருவர் வேட்டுக் களைத் தீர்த்தார் என விடுதலைப் புலிகளின் அரசியல்துறை செய்திக் குறிப்பு ஒன்று தெரிவித்தது.

நேற்றுமுன்தினம் நண்பகல் ஒரு மணியளவில் மல்லாகம் நீதிமன்ற வீதியில் உள்ள பிரதேச சபை முன் பாக இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சிப்பாயின் அச்சுறுத்தலுக்கு மத்தி யிலும் அங்கு கூடிநின்ற மக்கள் கலைந்து செல்லாது தொடர்ந்து மல ரஞ்சலி நிகழ்வில் ஈடுபட்டனர் என்றும் அச்செய்திக் குறிப்பு கூறுகின்றது. (ம-3)

# உயர் பாது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடிக்கையும் எடுக்கப்படாததைக் கண்டித்து கிராம மட்டத்தில் மக்கள் போராட்டங்களை முன்னெடுக்க ஏற் பாட்டுக்குழு முடிவு செய்துள்ளது.

கிராமங்களில் கருத்தரங்குகளை நடத்தி மக்களை ஒன்றுதிரட்டி தொடர் போராட்டங்களை பல்வேறு வடிவங் களில் மேற்கொள்ள ஏற்பாடுகள் செய் யப்பட்டுள்ளன.

குடாநாட்டில் உள்ள பொது நிறு வனங்கள், பொது அமைப்புகள் ஆகிய வற்றையும் இந்தப் போராட்டத்தில் ஈடுபடுத்த முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தலைமையில் பலர் இந்த நடவடிக்கை களில் ஈடுபட்டுள்ளனர். (ம-3)

# கூட்டம்

மண்கும்பான் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் பழைய மாண வர் சங்கத்தை மீண்டும் ஆரம்பிப்ப தற்கான கூட்டம் இன்று ஞாயிற்றுக் கிழமை மு.ப.10.00 மணிக்கு நடை பெறவுள்ளது. (எ-88)

# தேவாலயத்தில் மீண்டும் வழிபாடு

தென்னிந்திய திருச்சபையின் புங்கு டுதீவு தேவாலயத்தில் கடந்த முத லாம் திகதி தொடக்கம் மீண்டும் வழி பாடுகள் நடைபெற்று வருவதாக வண.பிதா ஏ.ஆர்.அம்பலவாணர் அடி களார் தெரிவித்துள்ளார்.

யுத்த அனர்த்தங்களால் செயற் படாதிருந்த இத்தேவாலயம் புன ரமைக்கப்பட்டதை அடுத்து மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளது. (எ-10)

# சமாதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிரிய ஜி.எல்.பீரிஸிடம் தெரிவித் துள்ளார்.

சமாதான முயற்சிகளின் முன் னேற்றம், புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ள அமைக்கப்படவிருக் கும் இடைக்கால நிர்வாகம் ஆகி யன தொடர்பாக அமைச்சர் பீரிஸ் பிரிட்டிஷ் அதிகாரிகளுக்கு விளக்கிக் கூறினார். (ம-3)

# ஜஸ்வந்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போடப்பட்டது.

அவர் இலங்கையில் தங்கியிருக் கும் போது வெளிவிவகார அமைச் சர் டிரோன் பெர்னாண்டோவுடன் இலங்கை - இந்திய கூட்டு ஆணைக் குழுக் கூட்டத்திலும் கலந்துகொள் வார். மற்றும் உயர் தலைவர்களை யும் சந்திப்பார். (ம)

# இளம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சூசைப்பிள்ளை விஜயகுமார் என்ற நபருடனேயே அண்மைக்காலமாக வாழ்ந்து வந்தார். விஜயகுமார், தின மும் குடித்துவிட்டு வீட்டுக்குச் சென்று சண்டை பிடிப்பார். நேற்றுமுன்தினம் இரவும் அவர்கள் இருவருக்கும் வீட் டில் சண்டை நடந்தது. ஆனால், அதி காலை அவர்களைக் காணவில்லை. பின்னரே கோயிலடியில் எனது சகோ தரியை சடலமாகப் பார்த்தேன்"- இப் படி அவர் சாட்சியமளிக்கையில் கூறி னார்.

சாட்சிகளை பதிவுசெய்த பதில் நீதிவான், தலைமறைவாகியிருக்கும் சூ.விஜயகுமாரை கைதுசெய்து, நீதி மன்றில் ஆஜர்செய்யுமாறு பொலீஸா ருக்கு உத்தரவிட்டார். (ம-9-173-70)

# நிலைமையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிர்வாகக் கட்டமைப்புத் தொடர்பாக விடுதலைப் புலிகள் தமது வரைவை அடுத்த மாத நடுப்பகுதிக்குள் சமர்ப் பித்ததும், அந்த வரைவு தொடர்பாக அரசும்-புலிகளும் நேரடிப் பேச்சை ஆரம்பிப்பர் என ஹெல்கிஸன் இங்கு தெரிவித்திருந்தார்.

இந்த நேரடிப் பேச்சு மற்றும் விடு தலைப் புலிகளின் தற்போதைய முடிவுகள் தொடர்பாக இந்திய அதி காரிகளுக்கு விளக்கிக் கூறுவதற்கா கவே அவர் இந்தியா சென்றுள்ளார்.

கொழும்பு வந்த ஹெல்கிஸன் பிரதமர் மற்றும் அமைச்சர்களுடன் கலந்துரையாடினார். ஆனால், ஜனாதி பதியை அவரால் சந்திக்கமுடிய வில்லை.

இதனால், ஏமாற்றம் அடைந்த நிலையில் அவர் இந்தியா புறப்பட் டார் என செய்தி ஏஜென்ஸிகள் தெரி வித்தன. (ம-3)








கணேசன் அக்கடமி
திருநெல்வேலி
Paper Class
தரம் - 9,11
ஆரம்பம் 21.09.2003
கணிதம் - திரு. S.சிவானந்தன்
விஞ்ஞானம் - திரு. S.தயானந்தன்
ஆங்கிலம் - திரு. S.சட்டநாதர்





இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.09.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.